ரிஜிஸ்டர் நெ: 2041

# குடி அரசு

தனிப்பிரதி விலை { வெளி நாடு 0—1—6
உள் நாடு 0—1—0

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன்பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1-12 |
| வேளி நாட்டிற்கு ,, | — ,, | 4—0 |

வாரப்பதிப்பு.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு கு. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1.க்கு கு. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி ஒத்தம்

மலர் 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி ஹ சித்திரைமீ 20உ ( 3—5—1931) ஞாயிற்றுக்கிழமை | மலர் 1

கவனியுங்கள்! கவனியுங்கள்!!

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசுபெற்றது,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

உலகப்பிரசித்திபெற்ற உண்மையான மருந்துகள்.

### காமகேசரி குளிகை.

(தங்கபஸ்பம் சேர்ந்தது)

தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இம்மாத்திரைகள் தாதுபுஷ்டியையும் தளர்ந்த நரம்புகளைக் கெட்டிபடுத்துவதிலும் பிரசித்தி பெற்ற பலவித யூனனி சரகுகளும் அசல் தங்க பஸ்பமும் சேர்த்து சாஸ்திர முறைப்படி தயார் செய்யப் பட்டது.

வயது சென்றதாலும், மிதமிஞ்சிய சம்போகத்தாலும், பலவித துர் அப்பியாசங்களாலும் இழந்து போன ஆண் தன்மையானது இம்மாத்திரைகளை சாப்பிட ஆரம்பித்தவுடன், மீண்டும் அதிகரிக்கச் செய்கிறது. பலக்குறைவு, கைகால்அசதி, சோம்பல், இடுப்புவலி, சம்போக காலத்தில் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி, துரிதஸ்கலிதம், சொற்பனஸ் கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கும். சரீர புஷ்டியும், திரேககாந்தியும், வீரிய விருத்தியும், மிகுந்த ஆண் தன்மையும் உண்டாகும். தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி இல்லர இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். யாதொரு பதத்தியமில்லை.

80 மாத்திரைகள் விலை ரூ. 10—0—0
40 மாத்திரைகள் விலை ரூ. 5—8—0

### மஹா சந்தனுதித் தைலம்.

(ஓர் யோகீஸ்வரரின் அனுபவ முறை)

இத் தைலத்தில் அநேகவித பச்சிலை மூலிகைகள் சேர்ந்திருப்பதால் சரீரத்திலுள்ள உஷ்ணத்தை யும் நீக்கிக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் கண்களில் உண்டாகும் பலவித வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்கிறது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்த தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் கூச்சம், கண்குத்தல் சதைவளர்தல், மேகநீர் வெள்ளெழுத்து, மண்டைபிடி, ஒருதலை நோய், பீனிசம், காதுநோய், காதுமந்தம், சரீரத்தில் அதிக உஷ்ணத்தினால் உண்டாகும் நிரேக காந்தல், நெருநெருப்பு, மயக்கம், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், மூளைகொதிப்பு, நித்திரை யின்மை, தலைமயிர் உதிர்தல் முதலிய சகலவித நோய்களையும் குணம் செய்வதுடன் சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இத்தைலத்தை ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். இத்தைலத்தை உபயோகித்தவர்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்து குவிகிறது. ஒரு முறை இத்தைலத்தை உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0
12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம். முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்குக் கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் 5 ரூபாய் அனுப்பவும்.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது !!

# "சன்மார்க்கன்"

பொதுநலங் கருதி வெளிவரும்

## ஓர் உயர்தரத்தமிழ் மாதப்பத்திரிகை:

கொங்கு மண்டல சமரச சன்மார்க்க சங்கத்தின் சார் பாகப் பழனியிலிருந்து ஒவ்வொரு தமிழ்மாத முதலிலும் எளிய தமிழ் நடையில் அரிய கட்டுரைப் பொருளகளுடன் வெளியிடப்படுகின்றது. உடனே சந்தாதாரர்களாகச்சே ருங்கள். வருட சந்தா:—உள்நாடு ரூ. 1. வெளிநாடு 1.4.0.

ஆசிரியர்—(நாவலூற்று)

**சி. சுவாமிசிவதேசம்,**

'சன்மார்க்கன்' பத்திரிகாலயம், பழனி.



சுத்தகதர்! உயர்ந்தகதர்!!

நேர்த்தியான கதர்!!!

அகில இந்திய (கதர்) காங்கி ரஸ் சங்கத்தாரால் அங்கீகரிக்கப் பட்டது. எங்களிடம் கதர் சம்மந் தப்பட்ட எல்லா ரகங்களும் இரு க்கின்றன. வெளிநாட்டு ஆர்டர் கள்கிரையம் முழுமையும் அனு ப்பினுல் கவனிக்கப்படும்.

நா. மு. தீ ஈ. ரு. வே. தீ Co.,
கதர் ஸ்டோர்,
சென்னிமலை ரோடு (S I. Ry.)



# சித்த ரசம்.

சகல வியாதிகளுக்கும் ஏற்றது
ஒரு முறை பரீட்சியுங்கள்.
புட்டி 1க்கு ரூ. 1—8—0
டஜன் 1க்கு ரூ. 15—0—0
ஏஜண்டுகள் தேவை
அன்னிய நாட்டார் முன்பணம்
அனுப்புக

சி. பி. சாமி, சித்தமருந்து
செய்சாலை பழனி S.I.



டெலிபோன் நெ. 3789 தந்தி விலாசம்:—கோர்செய்ன்.

தொல்விட்டியா பிரைவேட் வைத்திய சாலை & சம்சுதூனை விடுதி,

வேப்பரி தபால் ஆபீஸ் (சமீபம்) சென்னை.

மிஸஸ். மார்த்தா ஓகளி ஆரியா சூப்பரிண்டெண்ட்



100 வேளை தாம்பர பற்பங்கள் சாப்பிட்டும் தீராத குஷ்ட மெல்லாம் தீர்ந்து குணமாகி விட்டதென்று ஏராளமான நற்சாட்சிகள் வந்துகொண்டிருக்கின்றன.

# சித்தாதி தைலம்

குஷ்டம், குறைநோய், குழிப்புண், கண்டமாலை, விஷ குஷ்டம், நீர் வடிதல், தோல் உரிதல், மூக்கடைப்பு, மூக்குபள்ளம், செம்மேகப் பற்றுகள், தடிப்பு, வீக்கம், சொரி, வெண் குஷ்டம், கருமேக ஊரல், கருங்குஷ்டம், கிரந்தி, சூலை, முடக்கு, குன்மம் முதலிய வியாதிகள் கண்டிப் பாய் தீரும். பந்தயம்போட்டு பரீக்ஷிக்கக்கூடியது. இதற்கு மேலானமருந்தே பார்க்கமுடியாது. 1 புட்டி ரூ. 5-8-0 அனுபானம் ரூ. 1-8-0 ஆக ரூ. 7.

விலாசம்:—கே. எஸ். பதி, வைத்தியசாலை பழனி, S I Ry



அநேக பரிசுகளும், தங்க மெடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பெற்று உலகமெங்கும் புகழ்பெற்று விளங்குவதோடு 25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள் முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

பழநி, சி எம். சாமி.

# குருதாம்பர பல்பம்

இது சகல வியாதியையும் வேரற நீக்கும் சக்தியுடையது. முக்கியமாய் சூலை, கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்க்கவுசை அண்டவாய்வு, ஆனைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம் அழுகி துர்நாற்றமுடை யவர்கள், ஆணிப்புண்கள். இராணி இன்னும் அநேக விதமானகொடிய கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். 100 வேளை பல்பம் அனு பானத்துடன் விலை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 25-வேளை ரூ. 12-8-0. எழைகளுக்குப் பாதிவிலை. பிரபுக்களுக்கு ரேட் வேறு.

இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா ? மூளைக்கொதிப்பும், பலஹீனமும் நீங்க

வேண்டுமா ? எமது **மன்மத குளிகையை** உபயோகியுங்கள்.

திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும் ஆயுள் விர்த்தியு மடைந்து உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும பலமும் திரும்பி வரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி, இவற்றைத் தவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்புவலி உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே உண்மை விளங்கும் 60 குளிகை ரூ. 5, 30 குளிகை ரூ. 3, மாதிரிக்கு கு. 20 ரூ. 2.

குரு அப்ரேக் சேந்தூரம்—நீரழிவுக்குக் கைகண்டது புட்டி 1-க்கு ரூ. 15.

பிரமேக நிவாரணி :—பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், குத்துதல் நிர்க்கும் புட்டி 1-க்கு ரூ. 2,

குறிப்பு:— பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசி கள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்து முன் பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற அவிழ்தங்களையும் கியாட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் சி. மஹையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

# சைவத்தின் உண்மையும், ஜீவகாருண்யத் தன்மையும்.

(திரு அ. இராகவன்)

சீவகாருண்ணியம் என்பதன் பொருள் உயிர்களிடத்து அன்பு கொள்ளல் என்பதே. உயிர்கள் என்பது மனிதன், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன மரம் செடி, கொடிமுதலிய எல்லா வளர்ச்சி யுறும் பொருள்களைக் குறிப்பதென்றாலும் சைவர்கள் என்பவர்கள் பெரும்பாலும் உயிர்கள் என்பவைகள் மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன முதலியவைகள்தான் என்று எண்ணிக் கொள்ளுவதுடன் அவைகளிடத்தில் மாத்திரம் அன்பு பாராட்டவேண்டும் என்று எண்ணிக்கொண்டும், சொல்லிக்கொண்டுமிருக்கிறார்கள். வைதீக சைவப் பெரியார்களில் சிலர் "உயிர்களிடத்தில் அன்பு பாராட்டினாலும் சரி, பாராட்டாமல் விட்டிடினுஞ்சரி, முழுமுதற்கடவுளாகிய சாக்ஷாத் எம்பெருமானுகிய சிவ பெருமானிடத்தில் அன்பு பாராட்டுவதுதான் மேலானது, அதுவே நம்பிறவிப்பிணியைப் போக்கவல்லது, கண்ணப்பநாயனார் சீவகாருண்யம் என்றால் இன்னதென்றறியாது புலாலுணவு உண்டுவந்தவேடராயிருந்தாலும் இறைவன்பேரில்யிருந்த அன்பு (பக்தி) கொண்டிருந்ததினால் இறைவன அவர்பால் பேரன்பு கொண்டு இன்ப வீடளித்தான். லகப் பெருமக்களால் இன்றளவும் அக்கண்ணப்பர் நாயனாராகப் போற்றப்பட்டு வருகின்றார்" என்று பல உதாரணங்கள் காட்டித்தங்களெண்ணையை நிலைநிறுத்தப் பார்க்கின்றனர்கள். ஆனால் இவர்கள் கூறும் கூற்றுக்கள் எல்லாம் சைவத்தின் உண்மை நிலைக்கு மூற்ற முற்ற மாறுபட்டதாகும். சைவசமய சாத்திரங்கள் எல்லாம் இறைவனை ஒரு ஆண் என்றோ, பெண் என்றோ, அலி யென்றோ, வேறு பொருள்களென்றோ கூறவில்லை. அஃது அன்பு, அன்பு என்று பலகாலும் அறிவுறுத்துகின்றது. அன்பாகிய இறையை நாம் அடைய நம் உள்ளம் அன்பால் நிரம்பப் பெற்றிருத்தல் வேண்டும். அன்பின் வடிவமாகிய இறைவன் இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்று எவ்றாலும் காட்ட முடியாது. எனவேதான் அவ்வன்பாகிய இறைவனை யடைய நமதுள்ளத்தில் அவைபவளரும்படி செய்யவேண்டும். ஆனால் அந்த அன்பை எவ்வாறு நாமுள்ளதில் நிலவச் செய்வது என்பதே எண்டு நம்முன் ஒரு பெருங்கேள்வியாய் நிற்கின்றது. இக்கேள்விக் தக்கபதில் நம் முன்னோர்கள் பலப்பல சைவநூல்களிலும் எழுதிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். சைவாகளிற்பலர் அதின் நுணபொருள்களை யுணர்வதில்லை உணர்ந்த சைவத் தலைவர்களை என்போர் மக்கள் யாவரும் விளங்கவெள்ளுமு முறையில் கூறுது பரிபாஷையில கூறுகின்றார்கள். பலர் இதனை கருத்துக்களைத நிரித்துக்கூறி மக்களை வழிகெடுத்து வருகின்றார்கள். எனவே சைவத்தின் அடிப்படையான இக்கொள்கையைக்கூட சைவ மக்கள் நன்கறிந்து கொள்ளாது பெய ரளவில் சைவராக இருந்துகொண்டு சைவத்தின் உண்மைக்குமாறுனகொள்கையைப்பின்பற்றி, தெய்வம் அன்பு, அன்பு என்ற அரற்றிய காயன் மார்கள் திருவாக்கின் பொருளையும், அறிவான தெய்வமே அறிவான தெய்வமே என்றுமொழிந்த தாயுமான வர் முதலிய அறிஞர்களின் ஆழ்ந்த கருத்துக்கள் பொதிந்தஅமிர்தமொழிகளையும் நம்பி நடவாது இவ்வுலகில் சைவாகளென்போர் மூடநம்பிக்கையிலாழ்ந்து, அறிவான தெய்வத்தைக் காணுத (பகுத்தறிவை யிழந்து) அசாகரீகச் செயல்களுக் கிருப்பிடமாய் விளங்கி எல்லாவற்றிற்கும் தாங்கள் கஷ்டப்பட்டுத் தேடிய பொருள்களை வீணுகச்செலவழித்து வறியராய் இன்று உலக மக்களின் கண்களுக்கு விலங்குகள்போல் தோற்றப்படுகின்றனர் என்பது ஒரு சிறிதும் மிகையாகா. அறிவான தெய்வமே என்ற பாடிய பெரியார்களின் கூற்றை இற்றை ஞான்றுவாழும் சைவத் தலைவர்கள் சிறிது நேரமாவது சிந்தித்துப் பார்த்து அதில் தாம் கண்ட உண்மையை உலகிற்கு வெளிப்படுவார்களேயானால் சைவ உலகம் அதிசீக்கிரம் உன்னத நிலையையடையும் என்பதில் எம் போன்றோர்க்கு எள்ளளவும் ஐயமின்று. இது நிற்க, நாம் அன்பின் வடிவமாய் விளங்க நம் முள்ளத்தேசிறிது சிறிதாக அன்பை வளர்த்தல் வேண்டும். முதலில் இயற்கையாகவே நாம் ஒரு பெண் மகளிடத்தில் அன்பு செலுத்த ஆரம்பிக்கிறோம். இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு உயிர்ப்பிராணிக்குந் உற்ற வயதில் தோன்றிவருவது பிரத்தியட்சம். எனவே அழகிற்கோ, பொருளிற்கோ, வேறெயநலத்திற்கோ ஒரு பெணபால் அன்பு கொள்ளாது இயற்கையாகவே தோன்றும் அன்பை செலுத்துவதற்கே காதல் என்ற பெயர். இக்காதல்தான் அன்பாகிய தெய்வம். நம்முள்ளத்தே வளரச்செய்வதற்குரிய அஸ்திவாரம் என்ற சொல்லவேண்டும். இதனால்தான் சைவ சித்தாந்த அருந்தலைவர் உயர் திரு. கலியாணசுந்தர முதலியாரவர்கள் "முதலாவதாக இருவர்பாலும் காதல் நிலவல் வேண்டும். அக்காதல் பெருகிவேகூடும். காதலாவது தலைவி தலைவர்களுக்குள் நிகழும் கடவுள் அன்பு. தலைவி தலைவனைக்கடவுளாகக் கோடலும், தலைவன தலைவியைக் கடவுளாகக் கோடலும் காதலாகும். கடவுளாவது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. இந்நிலை பெருமோர்க்கு கூடாவொழுக்கம்இயல்பில் நிகழாது. இக்காதல் வழி யெய்தாதார் காமவாயப்பட்டு வாழ்வைக்கூலத்துக் கொள்வன்பால் செலுத்தும் அன்பு என்ற சைவம் முழங்குகின்றது.

"எவ்வுயிரும் பாராபரன் சந்நிதியதாகும்
இலங்கு முயிர் உடலனைத்தும்
ஈசன் கோவில்"

என்ற சிவஞான தீபத்தின் மெய்மொழியாலும் உயிர்களே பராபரன் சந்நிதியென்றும் உடல்களே ஈசன் வாழும் கோவிலென்ற முணர்ந்து உயிர்களிடத்து அன்பு பூண்டு மக்கள் வாழக்கடமைப்பட்டுளளார். அஃதன்றி உயிர்களிடத்து சிறிதும் காருண்யம் காட்டாது இறைவன் கற்பனையிலுலமைக்கப்பட்ட இருட்டறையாகியகோவில்களிலும் பெரிய தேரிலுந்தான் வாசம் செய்கிறான் என்ற அங்குபோய் பொருளாவாரி வாரி யிறைத்து சாம்பலுடன்திரும்புவர் சிச்சயமாய் எமாற்றமடைவர்.

"தேரைத் திருநாளைச் சேவிப்பார்
தம்மைவிட்டங்
காரைத் தொழப் போரார்
ஐயகோ! தேரிடையே
பார்க்கின்ற தெய்வம் பரிபூரண
மலவோ
யார்க்குந் தெரியாத தோ"

என்ற கூறிய சொரூப சாரத்தின் நன்மொழியும்,

"எல்லா உயிர்களின் உடலும் இறைவன் வாழும் இல்லமே என நினைந்து எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொள்ளு" என்ற சைவசமய நெறியிற்கண்ட பொன் மொழியும்,

"நாம் கோயிலென்று கூறி கட்டிடத்தைக் கட்டிவிடுவதால் அதில் கடவுள் வசிப்பது சிச்சயம் என்று நினைப்பது மூட நம்பிக்கையாகும்" என்ற திரு. எம். கே. காந்தியவர்களின் கூற்றையும் ஆராய்ந்தால் இறைமாட்டு மக்கள். அன்பு செலுத்துதல் அரிதென்பதும் உயிர்களிடதில்செலுத்தும் அன்பே இறைவனிடத்தில் செலுத்தும் அன்பு என்பதும், ஆலயம், விக்ரஹ, கைவேத்தியம முதலியவற்றில் மக்கள் பணத்தை வீண்ண விரையஞ் செய்வதினால் இறைவனை (அன்பை அல்லது அறிவை) தடைதல் முடியாதென்பதும் எண்டு நன்கறியக் கிடக்கின்றது. எனவே இனி அன்பை உயிர்களிடந்தில் எவ்வாறு காட்டலாம் என்பதையும் ஒருவன் எனைய உயிர்களிடத்து எத்தனைதூரம் அன்புகாட்ட முடியும் என்பதையும் அவ்வாறு உயிர்களிடத்து காட்டும் அன்ப ஜீவகாருண்யத்தை எத்தனை வகையாய்ப் பிரிக்கலாம் என்பதும் உயிர்கள் என்பது மனிதப் பிராணிமட்டுதானு? அல்லது கடப்பன, பறப்பன, நீர் வாழ்வன, ஊர்வன, மரஞ்செடி, கொடி முதலிய எல்லாமடங்குமா? என்றும் அவைகளிடத்தில் காட்டவேண்டிய ஜீவகாருண்ய முறையைப்பற்றியும் இனி ஆராய்வோம்.

சைவசமயத்த எனைய சமயத்தவர் எல்லோரும் மனிதர்களைத்தவிர எனைய பொருள்களுக்கெல்லாம் உயிர் இல்லையென்றும் இவரும், பகுத்

(தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க)

உயர்திரு. W. P. A. சௌந்திரபாண்டியன்
முதலாவது சுயமரியாதை மகாநாட்டின் தலைவர்

டாக்டர் P. சுப்பராயன்
முதலாவது சுயமரியாதை மகாநாட்டையும், இரண்டாவது சுய
மகாநாட்டையும் திறந்து வைத்தவர்.

## முதலாவது சுயமரியாதை மகாநாட்டுத் தலைவர்கள்.

உயர்திரு. P. C. இராஜன்
முதலாவது சுயமரியாதை மகாநாட்டின்
கொடியேற்றவிழா ஆற்றினவர்.

சுவாமி கைவல்யம்

திவான்பகதூர் M. K. வெ
முதலாவது சுயமரியாதை மகாந
வரவேற்புத்தலைவர்.

தோஜா முத்தையா
ஆராய்ச்சி நூல்க அறக்கட்டளை

# கர்ப்பத்தடை

## பெற்றோர்களுடைய பிரச்சினையா? அல்லது பெண்களுடையதா?

(T. D. கோபால்)

அடிமைத் தனத்தினின்றும் பெண்கள் தங்களைத்தாங்களே விடுவித்துக்கொள்ள வேண்டுமென்கிற ஆசையினால் தூண்டப்பட்டவர்களாகி, ஆடவர்களுடன் போராடியதின் பயனாக, கர்ப்பத்தடை என்னும் விஷயம் உற்பத்தியாயிற்று. குழந்தைகளைப் பிரசவிக்கும்படியான ஓர் வல்லமை பெண்களுக்கிருப்பதால் தான், அவர்கள் அடிமைக்குழியில் விழ நேர்ந்தது. அவ்வாறு, அடிமைக் குழியில் அவர்கள் மட்டும் ஆழ்ந்து போனதுமல்லாமல், உலகமக்களையே அடிமைகளாக வாழும்படியாகவும் செய்துவிட்டார்கள். இவ்வித அடிமைக்குழியினின்றும் வெளியேற வேண்டுமானால், பெண்கள்தான் அதற்கு முக்கியமாக உதவிபுரியவேண்டும். எதிர்கால மக்களின் நன்மைகளையும் தீமைகளையும் பெண்கள்தான் தங்களுக்குள்ளாக போர்த்தி வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். நன்மைகள் புரியவும், அல்லது தீமைகள் புரியவும் அவர்களால் தான் முடியும். இக்காரணங்கள் யாவும், ஒரேயொரு முடிவைத்தான் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. யாதெனில், பெண்களின் சுதந்திரங்களுக்கு, பெண்கள் தான் போராட வேண்டுமென்பது அவர்களுடைய கடமையும், உரிமையுமாகின்றது. எத்தகைய இடுக்கண்கள் ஆடவர்கள் செய்துகொண்டே வந்தாலும், பெண்கள் தங்களுடைய காரியப் பொறுப்பினின்றும் தப்பித்துக்கொள்ளவே முடியாது. அநேக ஆண்டுகளாக, இத்தகைய உதவிபுரிய அவர்களுக்கு வசதியளிக்கப்படவேயில்லை. ஆனால், இப்பொழுதுதான் பெண்கள் தங்களுடைய உதவியற்ற நிலைமையை உணர்ந்து, விழித்தெழுந்துகொண்டார்கள். பிரசவங்களினால் பெண்களுக்கு நேரிடும் துன்பங்களை மற்றவர்கள் எவ்வாறு பாகித்துக்கொள்ள முடியாதோ, அவ்வாறே அவர்களுக்காக வேண்டி, வேறு ஒருவரும் இவ்விஷயத்தில் ஈடுபட முடியாது. மற்றவர்கள், வேண்டுமானால் உதவிபுரியலாம். ஆனால், பெண்களே தான் தங்களைத்தாங்களே விடுவித்துக் கொள்ளவேண்டும்.

உலகிலுள்ள மக்கள் சுதந்திரமுள்ளவர்களாகயிருக்க வேண்டுமானால், பெண்களுக்குச் சுதந்திரம் முதலில் அளிக்கப்பட வேண்டும். அடிமைகளாயுள்ள தாய்மார்களிடமிருந்து சுதந்திரமுள்ளமக்கள் ஒருக்காலும் தோன்றமாட்டார்கள். அடிமைக் குழியில் ஆழ்ந்துகிடக்கும் தாய்மார்கள், தங்களுடைய குமாரர்களுக்கும், குமாரத்திகளுக்கும் அவ்வடிமைத்தனத்தையே தான் ஊட்டுவிப்பார்கள். தங்களுடைய தேகங்களை அடக்கி, அவைகளைத்தங்களுடைய சுவாதீனத்தில் நிலைநிறுத்தாத எல்லாப் பெண்களும்தங்களை சுதந்திரமுள்ள பெண்களென்று கூறிக்கொள்ள யோக்கியதையுடையவர்களாகமாட்டார்கள். மேலும், தாங்கள்தாய்மார்களாகலாமா அல்லது வேண்டாமா என்பதையும் தங்களுடைய சுய அறிவால் தெரிந்துகொள்ளும்வரையிலும், சுதந்திரமுள்ள பெண்களென்று தங்களைத்தாங்களே கூறிக்கொள்ளவும் பேர்க்கையைடையவர்களாக மாட்டார்கள்.

பெண்களில் இவர், தாங்களே சுயார்ஜிதமாக சம்பாதனை செய்து, ஜீவித்துக்கொண்டு வருவதாகக்கூறிக் கொள்ளலாம். இன்னும் இவர், உலக வழக்கமான, ஸ்திரீபுருஷர்களுக்குரிய பரஸ்பரசம்மந்தத்தையேதிரஸ்கரித்திருப்பதாகவும் வீரம் பேசலாம். ஆனால், இவைகள் யாவும் அவர்களுடைய நிலைமையினின்றும், அவர்களை கொஞ்சமேனும் மாறும்படியாகச் செய்யாது. சுயார்ஜிதமாக தாங்களே சம்பாதனைசெய்து, ஜீவித்துக்கொண்டு வருவதாக கூறிக்கொள்ளும் எல்லாப்பெண்களும் ஒருவகையில் சுதந்திரமுள்ளவர்கள்தான். அவர்களுடைய அத்தகைய சுதந்திரங்களையும் நாம் அலக்ஷியமாய்க்கருதிவிடக்கூடாது. இவர்களுடைய இத்த சுதந்திரமானது தங்களுடைய மாய வலைகளை வீசி, தாங்கள் ஆடவர்களைப் பிடித்து அவர்களை விவாகம் செய்துகொள்ளலாமா, அல்லது வேண்டாமா யென்பதை நிச்சயிக்கத்தான் உதவிசெய்யுமேயல்லாமல், வேறெதுவும் உதவிசெய்யாது. ஆனால், தாங்கள் தாய்மார்களாகலாமா அல்லதுவேண்டாமா என்பதை நிச்சயிக்கவேண்டுமென்பதுடன், இவர்களுடைய இச் சுதந்திரத்தை நாம் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், அப்பொழுது அது அளவிலும், குணத்திலும் குறைந்ததாகவே காணப்படுகின்றது. தங்களுடைய வாழ்க்கைத்துணைவர்களின் உதவியும், ஒத்தாசையுமின்றி, தங்களுக்கு வேண்டிய உணவுகளையும், ஆடையாபரணங்களையும், தங்களுக்கு ஓர் வசதியான இடத்தையும் தேடிக்கொள்ளுவதற்குத்தான், பெண்களின் சுயார்ஜிதசம்பாதனை உதவி புரிகின்றது. ஆனால், அவர்களுடைய வெளித்தோற்றவளுக்கு வேண்டியிருப்பவைகளைத்தானே அவர்களுடைய சுயார்ஜித சம்பாதனையால் அவர்கள் அடைய முடியுமேயொழிய, அதைவிட பதின்மடங்கு முக்கியமானதும், வல்லமைபொருந்தியதுமான அவர்களுக்குள்ளிருக்கும்படியான ஸ்திரீ ஜாதித்தன்மைக்குரிய ஓர் இச்சையை வற்புறுத்தக்கூடிய ஒரு சக்திக்கு, அவர்களுடைய அத்தகைய சம்பாதனைகொஞ்சமேனும் உதவி புரிவதில்லை. அத்தகைய ஓர் இச்சையை அவர்கள் திருப்தி செய்துகொள்ள வேண்டுமானால், தாய்மார்களாகக் கூடிய நிலைமையை அவர்கள் வரவேற்று, தாய்மார்களின் நிலைமையினால் ஏற்படக்கூடியபிரச்சினைகளைஎளிப்படுத்தவேண்டும்.

சுயார்ஜிதமான சம்பாதனைகளால் ஜீவிக்கக்கூடிய "சுதந்திர" பெண்கள், உலகழக்கத்திற்குவிரோதமாக ஆடவர்களை தங்களுடைய கூட்டாளிகளாக அடைவார்களேயானால், அப்பொழுது அவர்களுடைய சுதந்திரமானது நடத்தை, யோக்கியதை, கீர்த்தி, பேர், வெட்கஞ்செட்டதனம், நிர்ப்பயம், துணிவு, சாகஸம் முதலிய கேள்விகளால் பாதிக்கப் படுகின்றது. சுயார்ஜிதமான சம்பாதனையுள்ள பெண்கள் இத்தகைய கேள்விகளுக்கு கொஞ்சமேனும் பயப்படாமல், அவர்களுடைய ஆசைக்குகந்த கணவர்களையே அடைந்த போதிலுங்கூட, தங்களுக்கிருக்கும் குழந்தைகளைப் பிரசவிக்கும் படியான ஓர் சக்தியால், தங்களைத் தாங்களே அடிமைக்குழியில் அமிழ்த்திக் கொள்ளும் படியான நிலைமையிலேயேதான் இன்னும் இருக்கக்கூடியவர்களாக இருக்கின்றார்கள்; மேலும் அதிருஷ்டவசமாக தாங்கள் காதலித்த ஆடவர்களையே விவாகம் செய்துகொண்ட பெண்களைவிட, முறைப்படி விவாகம் செய்துகொள்ளாத பெண்களின் நிலைமையானது பழக்கவழக்கங்களாலும், சட்டங்களாலும் பாதிக்கப்பட்டு, அடிமைகளிலும் அடிமைகளாகவே காலத்தைக்கழிக்க வேண்டியவர்களாயிருக்கின்றார்கள்.

பெண்கள் தாய்மார்களாகலாமா அல்லது வேண்டாமா என்பதை தீர்மானித்துக்கொள்ளும் வரையிலும், அப்படி தாய்மார்களாவதும் எத்தகைய குழந்தைகளைதான் பிரசவிக்க வேண்டுமென்பதை தீர்மானித்துக் கொள்ளும் வரையிலும் நாம் எவ்வளவுதான் ஆலோசித்துப்பார்த்தபோதிலும் சரி, அல்லது எத்தகைய முடிவுதான் கூறியபோதிலும் சரி, உலக வழக்கத்திற்கு ஒத்துக்கொண்டதாயிருந்தபோதிலும் சரி, அல்லது உலக வழக்கத்திற்கு ஒத்துக்கொள்ளாததாயிருந்தபோதிலும்சரி, நமது சட்டங்கள் அதற்கு ஒத்து, இணங்கி வந்தாலும்சரி, அல்லது நமது சட்டங்கள் அதற்கு இணங்காமலும், எதிரிடையாகவுமிருந்தாலும் சரி, எல்லாப் பெண்களும், எப்பொழுதும் அதே நிலைமையில்- அடிமைத் தனத்தில்- ஆழ்ந்து தான் இருக்கின்றார்கள். எல்லாவற்றாலும் தடுத்துக்கொள்ள முடியாத இத்தகைய நிலைமையொன்றே-கர்ப்பத்தடை- முதன் முதல் பெண்களுக்கே உரித்தான ஓர் முக்கிய விஷயமென்பதை நிரூபிக்கின்றது. இத்தகைய காரணங்களால் பெண்கள் கர்ப்பங்கள் தரித்தலும், தாய்மார்களாவதும்பெண்களின்சுவாதீனத்திலும், இச்சையிலும்தான் இருக்கவேண்டுமென்பதும் ஏற்படுகின்றது.

ஸ்திரீ புருஷ பேதமென்பது ஆடவர்களையும்,பெண்களையும்குறிப்பிடுவதால் அவ்விருவர்களின் சேர்க்கையால்உண்டாகக்கூடியபலாபலன்களை பெண்களின்மீது மட்டும் சுமத்தப்படக்கூடாதென, விடாமல்வற்புறுத்தப்பட்டுக்கொண்டே வரப்படுகின்றது. பெண்கள் தங்களுடைய வாழ்க்கைத்துணைவர்களைவிட பதின் மடங்கு பலவீனமுள்ளவர்களாயிருப்பதாலும், அவர்கள் கர்ப்பினிகளாயிருக்கும்பொழுது பிரதி மாதமும் இயற்கையாகவே பலவித மாறுபாடுகளுக்கு உட்படவேண்டியிருப்பதாலும் சகஜமாக ஆடவர்கள்தான் பெண்களைக்காப்பாற்ற வேண்டியிருக்க பெண்களே தங்களைக்காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென கூறுவது நியாயமான செய்கையாகுமா? என பல சந்தர்ப்பங்களிலும் கூறப்படுகின்றது.

இத்தகைய அவர்களின் நிலைமைக்காம் இரண்டு விதங்களாக பரிசோதனை செய்யவேண்டியதாயிருக்கின்றது. முதலாவதாக "இச்சை." பிறகு அவ்விச்சையை பூர்த்திசெய்துகொள்ளுவதற்குரிய நிலைமையும், சந்தர்ப்பமும்அல்லதுஸ்திதியும், நிபந்தனையும். ஓர் சமூகத்திலுள்ள ஆடவர்களும் பெண்களும் ஒரேமாதிரியான இச்சையுள்ளவர்களாயிருந்தால் அப்பொழுது கர்ப்பத்தடைகளிலும் பெண்களுக்கு எத்தகைய சம்மந்தமும் அக்கரையும், விசாரமுமிருக்கின்றதோ அத்தகைய சம்மந்தமும் அக்கரையும் விசாரமும் ஆடவர்களுக்கும் சந்தேகமின்றியிருக்கும். ஆனால் ஆடவர்களோ அத்தகைய காரியப்பொருப்பையும், உத்தரவாதத்தையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதுமல்லாமல், பெண்கள்தாங்களாகவே அத்தகைய காரியப்பொருப்பையும், உத்தரவாதத்தையும் ஏற்றுக்கொள்ளுவதற்கு இன்றியமையாததான கல்வியையும், ஞானத்தையும் அறிந்துகொள்ளுவதினின்றும் ஆடவர்கள் தனித்தனியாகவும், கூட்டமாகவும், பெண்களைத்தடுத்துக்கொண்டே வந்திருக்கின்றார்களென்பதும் நிச்சயமானதும்,சகிக்கவும்கூடாத உண்மைகளெனவும், தினந்தோறும்கடைபெற்றுக்கொண்டு வரும் சம்பவங்களால் நாம் சுலபமாகவே அறிந்து கொள்ளலாம். பெண்கள் தங்களுடைய சுயநம்பிக்கைகளின்மீது தைரியமும், உறுதியும்கொள்ளாமல்தங்களுடைய வாழ்க்கைத் துணைவர்களின் மீதுதான் இன்னும் தைரியமும், உறுதியும், நம்பிக்கையும் கொண்டிருக்கின்றார்கள். ஏனெனில், பெண்களைத்தங்களுக்குச்சரிசமானமானவர்களென நினையாமலும், அவர்களுக்கு

அனிக்கவேண்டிய கௌரவத்தையும்மதிப்பும்கொடாமல்துடிவமைகள்போலஅவர்களை நடாத்தியும், தங்களுடைய இச்சையைத்திருப்தி செயது கொள்ளுவதற்காக வேண்டுந்தான் பெண்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றார்க ளெனவும் ஆடவர்கள் கருதிக்கொண்டிருப்பதே இதற்குதக்ககாரணமாகும். மேலும் பெண்கள் தாங்களாகவே வெளிப்படையாக அறிந்துகொள்ள வேண்டிய எல்லாப்பிரச்சினைகளையும் தாங்களே அதிந்து கொள்ளாமலும் அதிந்துகொள்ள முயற்சிசெய்யாமலு மிருந்ததுடன் ஆடவர்களையே அத் தகையவல்லாப்பிரச்சினைகளையும்அறி ந்து கொள்ளுப்படியாக இதற்குமுன் வீட்டு விட்டபடியாலும் பெண்கள் இப்பொழுதும் ஆடவர்களுக்குக்கட் டுண்டிருக்கின்றார்கள். பெண்கள் இம் மாதிரியாக தங்களுடைய விஷயங் களை ஆடவர்களிடம் ஒப்படைத்து விட்ட திஞல்தான் பெண்களுக்கு சர்வசாதாரணமாக இருக்கவேண்டிய எல்லா உரிமைகளையும் ஆடவர்களிட மிருந்து பயந்தும், கெஞ்சியும், இனி மையாகப்பேசியும், கூத்தாடியும், அவர்களை வஞ்சித்தும், எமாற்றியும், மோசம் செய்தும், அவர்களிடமிருந்து தங்களால் எவ்வளவு நன்மைகளை அடையமுடிந்ததோ அவைகளைத் தான் இப்பொழுது தங்களுடைய உரிமைகளாகவும் அதிகாரங்களா கவும், சுதந்திரமாகவும் அனுபவித் துக்கொண்டுவருகின்றார்கள். மேலும் ஆடவர்களிடமேஇதைஒப்படைத்துவி ட்டபடியால் தான் இப்பொழுதுபெண் கள் ஆரும்தொழில்கள் பலஆடவர்களு க்குப்புரிந்து கொண்டிருக்கவும், இவர் களுடைய கோரிக்கைகளுக்கும், இச் சைகளுக்கும், ஆசேகைகளுக்கும், ஆணைகளுக்கும் அடிமைகள் போலி ருக்கும் படியாகவும் நேர்ந்தது.

இத்தியாதி காரணங்களால் உண் டாகிய நிலைமையிலுல் ஆடவர்கள் அனேகதுன்பங்களையும்,கஷ்டங்களை யும், வருத்தங்களையும் அனுபவிக்க வேண்டிநேர்ந்தபோதிலும்கூட,பெண் கள் தான் எண்ணிறந்தும், கணக்கு வழக்கற்றதுமான துன்பங்களையும, கஷ்டங்களையும், வருத்தங்களையும் அனுபவித்துக்கொண்டு வருகின்றார் கள். இத்தகைய எண்ணிறந்த துன் பங்களை ஆடவர்கள் என்அனுபவிக்க நேர்ந்தென்பதை ஆடவர்களே சுல பமாக தெரிந்து கொள்ள முடியுமெ ன்பதுண்மையாகயிருந்தபோதிலும் கூட, தத்துன்பங்கள் யாவும்நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே பெண் களைத்தான் அதிகமாக பாதித்துக் கொண்டு வருகின்றதென்பதும் நாம் அறிந்த விஷயமதான். வேண்டவும், விரும்பவும் படாததுமான எல்லாக் குழந்தைகளையும் பெண்கள் தான் கர்ப்பத்திலுற்று, அக்கர்ப்பத்தினை சும ந்து, குழந்தைகளைப்பிரசவித்து, வாப் பாத்த வேண்டியவர்களாயிருக்கின் றார்கள். எத்தனைதே அதிகமானி டர்கள் நீரம்பியுள்ள நெருக்கடியான குடும்பங்களில் பிறந்ததின் காரணத் தால், அக்குழந்தைகள் வியாதிகளி ஞல்பீடிக்கப்பட்டு,நோயுற்று,மாளுத் வித எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் அக் குழந்தைகளின் பரிக்ஷைகளின் ருவில் பெண்கள்தான் விழித்த கண் கள் மூடாமல் காதல் புரிந்து கொண் டிருக்க வேண்டியவர்களாகயிருக்கி ன்றார்கள். அவலக்ஷணமான குழந் தைகளையும், விகாரமான குழந்தை களையும்,உருவழிந்தகுழந்தைகளையும், இயற்கைக்குழந்தைகளையும், குழந்தைபிற்றும்விரோ தமாகப்பிறக்கிருந்தகூடிய குழந்தை களையும் போதாகால துரதிர்ஷ்டவ சமாக, போஷாக்குகளுந் கிடைக்கப் பெறுத குழந்தைகளையும், தங்களுடைய சக்தி யின் எல்லைகளை மீறி கோலே செய்யக் கூடிய குழந்தைகளையும் கண்ணுற்ற நிமிஷத்திலேயே தாய்மார்களின் மனதுதான் முதலிலும் அடிக்கடியும் அதிகமாகவும் பலமாகவும் நிகழ்ச்சப் படுகின்றது. வேண்டவும்,விரும்பவும் படாததுமான கர்ப்பங்களினுல் உண்ட டாகும் பயத்தினுல் பீடிக்கப்பட்டி மரணமடையக் கூடியவர்கள்தாம்அரு மையாக நேசித்துவரும் நமது பெண் கள்தான்.

கோட்பாடுகளைக் காட்டிலும் நிலை மைகளும், கனவுகளைக்காட்டிலும் நடந்த சங்கதிகளும். ஆலோசனைகளை க்காட்டிலும் உண்மைகளான விஷ யங்களுமே கர்ப்பத்தடை பிரச்சினை களைபரிபாலனம் செய்து கொண்டி வருகின்றது. இவைகள் யாவும் பெண்களின் புஜங்களின் மீதுதான் இணக்கமாகவும், பொருத்தமாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விஷ யத்தில் ஆடவர்களுக்கு எத்தகைய நீதியான உத்தரவாதமும், காரியப் பொருப்புமிருந்த போதிலும் கூட, அவைகளை அவர்கள் கொஞ்சமேனும் கவனியாமலும், அவைகளைநிவாரணம் செய்ய முயற்சிகள் செய்யாமலிருப்ப தையும் பெண்கள்சுலபமாகவே அறி ந்து கொண்டார்கள். கணவன் மார் கள் தனித்தனியாகவும், பிரத்தியேக மாகவும் தங்களுடைய காதலுக்கு தகுதியாகவர்களாயிருந்தபோதிலும் சரியே, அல்லது தங்களுடைய கண் மை தீமைகளிலும், லட்சணங்களிலும் திருப்தியுள்ள கணவன்மார்களாக விளங்கியபோதிலும் சரியே, அந்த ஆடவகன் யாவரும் ஒன்றுகச் சேர்ந் து எதாகிலும் சட்டங்களை இயற்ற வதாகயிருந்தாலுஞ்சரியே ஸ்திரீ ஜ னசமூகங்களின் பதுக்க வழக்கங்களை நிர்ணயிக்கவேண்டியிருப்பதாக யிரு ந்தாலுஞ்சரியே எப்பொழுதும் ஆடவர் கண்டிடமிருந்து நிதகைவு பிரயோ ஜனத்தையாவது அடைவதற்குமார்க் கம் கொஞ்சமேனும் இடையாதென் பதையும் பெண்கள் அறிந்து தானி ருக்கின்றார்கள். அவர்களுக்கு சுயேச் சைபடித்தானிருக்கவேண்டுமென் பதை கொஞ்சமும் அவர்கள் அறியா திருந்தபோதிலுங்கூட, தாங்களே அதற்கென தூண்டியமலும்,அதற்காக ப்போராடாமலுமிருந்தால் தங்களு டையசுயேச்சை தங்களுக்கு நிச்சயமாகவே அளிக்கப்படா தென்கின்ற யிருகத்தனமானதும், குரூரமானதும்,சகிக்கக்கூடாததும் விலக்கக்கூடாததுமான உண்மையை பெண்கள் அதிந்துகொ ண்டிருக்கின்றார்கள்.

பெண்கள் இவ்வளவு உண்மை களை அறிந்தகொண்ட போதிலும் கூட, அவர்கள் இன்னும் அதிபக் கூடாதனும், அதிந்தகொள்ள வேண்ட டியதுமான உண்மைகள் அநேகமிரு க்கின்றன. மனிடர்களின் சுதவா ந்திரத்தை நிர்மூலமாக்குதற்காகக் கா ணப்படும் விஷயங்களையும், இன்னும் இதரவிஷயங்களையும் ஆடவர்கள் எவ்வாறு யோசனைசெய்து ஓர் முடி வுக்கு வருகின்றார்களோ, அவ்வாறே பெண்களும் ஆடவர்களின் வழியை யேப் பின்பற்ற பெரும்பாலும் எண் ணங்கொண்டு, ஆசையும் படுகின்றா கள். தங்களுடைய போராட்டத்தின் பயனை, பெண்கள் தங்களுடைய சுயேச்சையையும், சுதந்திரத்தையும் ஆடவர்களே யாஞல், அவர்கள தாங்கள் தற்காலம் பார்க்கக்கூடிய தும், இருக்கக் கூடியதுமான கைத் தொழில் துறைகளிலும், வியாபாரத் துறைகளிலும், வித்தைகளிலும், தந் திரங்களிலும், நீதிகளிலும், மதங்க ளிலும், சன்மார்க்கப் போதனைகளி லும் இன்னும் இருக்கக்கூடிய துரை த்வனத்தாரின் இர அதிகாரத்தோ ரணைகளிலும் ஆடவர்களைப்போலவே அவர்களும் எப்படியவர்களே யாஞல் அப்பொழுது ஆடவர்களின் அடிச்சு வட்டைத்தான் பின்பற்றியவர்களா வார்களேயன்றி, வேறல்ல. ஆடவர் களின் தொழில்களைப் புரிவதற்காக பெண்கள் முயாவகியமாக வேண் டப்படவில்லை. ஆடவர்கள் நிஜைப் பது போலவும், நிரிகைகள் புரிவது போலவும், பெண்களும் நினைக்கவும், செய்யவும் வேண்டுமென்பதற்காகவும் அவர்கள் விரும்பப்படவில்லை. உல கம் முழுவதிலும் சர்வாதிகாரங்கள் எல்லாவற்றிலும் செலுத்திக்கொண்டு வரக்கூடிய ஆடவர்களின் மனது,தங் களைத்தாங்களே காப்பாற்றிக்கொள் ளத்தருக்கால் தடுமாறிப்போய் விடு மோ என்னவும் பெண்கள் எப்பொழு தும் பயப்படவேண்டிய அவசியமு மில்லை. ஆடவர்களின் தைரியத் தையும், வீரதையும், உற்சாகத் தையும், பலத்தையும் அதிகரிக்கச்செ ய்வதற்காகவேபெண்கள் முக்கியமாக சிருஷ்டிக்கப்படவில்லை. ஆனல் பெ ண்களின் தைரியத்தையும், வீரத்தை யும், உற்சாகத்தையும், பலத்தையும் கெளி படுத்துவதற்காகவேதான் அவர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றார் கள். ஆடவர்களால் நிர்ணயிக்கப் பட்ட உலகத்தைத் திரகஷிப்பதும், ஜா க்கிரதையாகக் காப்பாற்றவேண்டிய தும் பெண்களுடைய தொழில்கள் அல்ல. ஆனுல், அத்தகைய உலகத் தின்கலைபெறுதக்கொண்டுவரும் ஒவ் வொரு காரண காரியங்களிலும் பெ ண்களின் அபிசுபிராயங்களையும், ஆதாரங் களையும், சித்தாந்தங்களையும் ஆடவர் களின் மனதில் பதிய வைத்துக்கொ ண்டேவந்து, மனிதத்தன்மைகளு டையஓர் உலகத்தை சிருஷ்டிப்பதே பெண்களின் முக்கியத்தொழிலும், கடமையுமாகும்.

ஆடவர்களால் விதிக்கப்பட்ட எத் தகைய கட்டளைகளையும், நிபந்தனை களையும் பெண்கள் கெக்காலத்திலும், எல்லாவித சந்தர்ப்பங்களிலும் ஒத் துக்கொண்டு, அடிமைகள் தானே எ ன எண்ணி, அலைகளுக்குக் கட்டுப் பட்டு நடக்கக்கூடாது. ஆனல், சிற் சில சந்தர்ப்பங்களிலும், சிலகாலங்க ளிலும், பல நிபந்தனைகளை எதிர்த் துப் போராடிதேதான் தீரவேண் டும். தங்களைச்சுற்றிலும் ஆடவர் களால் அழகாக அமைக்கப்பட்டிருப் பவைகளைக்கண்டு பயந்தும், மயங்கி யும் விடக்கூடாது. ஆனல், தங்க ளுடைய உள்ளங்களில் உதித்து, வெளிக்கிளம்புவதற்காக தத்தளித் தும், போராடியும், காத்துக்கொண் டிருக்கும் எல்லா எண்ணங்களையும் சுதந்திரமுள்ளவர்களென யெண்ணி, அவ்வெண்ணங்களை கௌரவித்து, மரியாதை செலுத்த வேண்டும். தற்காலம், தங்களைச்சுற்றிலுமிருக்கக் கூடியவைகளிலும், தங்களுடைய நிலைமைகளிலுங் கண்டிஷ்டம் அதி கம் வைப்பதைவிடவும், எண்ணங் களை செலுத்திக்கொண்டு வருவதைப் பார்க்கிலும், இனி எம்மாதிரியாக இருக்கவேண்டுமென்பதை முதலில் தெளிவாக நிர்ணயிக்கவேண்டும். யா தொருவிதமான ஹேதுக்களும் காட் டாமல் தாங்கள் கூறுவதே சரியெ ன்று சொல்லக்கூடிய ஓர்ஜன சமூ கத்தின்எல்லாவித எண்ணங்களையும், அபிப்பிராயங்களையும், ஆலோசனை களையும் பெண்கள் கபடமற்ற பிரச் சினைகளுக்கும், விசாரணைகளுக்கும் செவி சாய்ப்பது போல நினைத்துக் கொண்டு மட்டும் கேட்டுக்கொள்ள வேண்டும். பெண்கள், தங்களுடைய புதிய சுதந்திரமும் சுயேச்சையுமுள்ள வாழ்க்கைகளில் ஈடுபடவேண்டு மானுல் அத்தகைய வாழ்க்கை அவர் களுடைய இயற்கை அறிவினுலும், சொந்த அபிப்பிராயங்களினுலும், ஆலோசனைகளினுலும் எண்ணங்களி னுலுத்தான் நிர்ணயிக்கப்படவேண் டும். இம்மாதிரியாக கடந்தால் மட் டும்தான் பெண்கள் தங்களுடைய தைரியத்தையும், உற்சாகத்தையும், சக்தியையும், வீரத்தையும் பிரயோ கப்படுத்தமுடியும். இம்முறையால் தான் பெண்கள் தங்களுடைய வாழ் க்கைத் துணைவர்களை—பெண்களுக் கென வெட்டப்பட்ட அடிமைக்குழி யில் ஆழ்ந்துவிட்ட ஆடவர்களை— அடிமைத்தனத்தினின்றும் மீட்டு, சுதந்திரமும் சுயேகைகயுமுள்ள மக் களாகவாழும்படி செய்யமுடியும்.இவ் வாறு செயதால் மட்டுந்தான், பெண் களுக்கு எதுகூடவே கூடாதென வரையறுக்கப்பட்டு கட்டுப்பாடு செய் யப்பட்டிருந்ததோ, எது ஆடவர் களால்பறிகொடுக்கப்பட்டுவிட்டதோ அதை, மீண்டும் பெண்களே மீட்டு ஆடவர்களுக்கு அளிக்க முடியும்.இத் தகைய வாழ்க்கையினுல்தான் பெண் கள் உலகத்தையே புதிய முறையில்

[தொடர்ச்சி 19ம் பக்கம் பார்க்க]

# சுயமரியாதை இயக்கத்தைப்பற்றி அய்யர்-அய்யங்கார் சம்பாஷணை.

(சித்திரபுத்திரன் எழுதுவது.)

அய்யர்:- என்ன அய்யங்கார் வாள் சுயமரியாதை இயக்கம் ஆரம்பமான காலத்திலேயே நான் பிராமணருக்கு ஆபத்து வந்துவிட்டதே என்றும் இதற்கு ஏதாதுவழிசெய்யக்கூடாதா என்றும் கேட்டதற்கு "அது இந்தியாவில் மாத்திரம் நடக்காது சீக்கிரம் ஒழிந்துவிடும்" என்றுசொன்னீர். இப்பொழுது நாளுக்கு நாள் அதுவளர்ந்து கொண்டே வருகிறதே. எல்லோரும் அதை ஆதரிக்கவும் துணிந்துவிட்டார்களே: அதாவது சைவர்கள் ஒன்று கூடி "3,000 வருஷத்திற்கு முன் இருந்த கொள்கைகள் எல்லாம் சுயமரியாதை இயக்க கொள்கைகள்தான்" என்கிறார்கள். வைணவர்கள் ஒன்றுகூடி தங்கள் கொள்கையும் அதாவது "ராமானுஜர் கொள்கையே சுயமரியாதை இயக்க கொள்கை" என்கின்றார்கள். ஸ்மார்த்தர்கள் "சங்கரர் மதமே வேதாந்த மதம். ஆகையால் ஸ்மார்த்த மதமே சுயமரியாதை இயக்கக் கொள்கைதான்" என்கின்றார்கள். மகமதியர்கள் ஒன்றுகூடி "1,300 வருஷத்திற்கு முன்னேயே சுயமரியாதை இயக்க கொள்கையைத்தான் நபிகள்நாயகம் உபதேசித்திருக்கிறார்கள்" என்கின்றார்கள். பௌத்தர்கள் "2,000 வருஷத்திற்கு முன்னுலேயே பகவான் புத்தர் சுயமரியாதை இயக்கக் கொள்கையைத்தான் உபதேசித்து பிரசாரம் செய்தார்" என்கின்றார்கள். "சித்தர்கள் உபதேச மெல்லாம் சுயமரியாதைக் கொள்கைதான்" என்கின்றார்கள் பொதுமக்கள். பண்டிதர்களில் பலர் "உலகாயித மதம்தான் சுயமரியாதைக் கொள்கை. ஆதலால் அதுவும் இந்து மதத்தில் ஒருபகுதிதான்" என்கின்றார்கள். பிறகு எந்த விதத்தில் அது அழிந்தோ மறைந்தோ போகும் என்பது நமக்கு விளங்கவில்லையே!.

அய்யங்கார்:- இதற்கெல்லாம் நீர் பயப்படாதீர். யாரோ எதையோ சொல்லிக்கொண்டு போகட்டும். நமது இந்து மதத்தை அதாவது நாம் இன்று அனுசரித்து வரும் கொள்கையை யாரும்ஒன்றும்செய்ய முடியாது. நம் பெரியார்களுக்கு இவற்றை யெல்லாம் ஒழிக்க வழிதெரியும். இதைவிட கஷ்டமான காலத்தில் எல்லாம் இருந்து சமாளித்து வந்து இருக்கிறார்கள்.

அய்யர்:- எப்படித்தெரியும்? 10, 12 வருஷத்திற்கு முன் ஜஸ்டிஸ் கட்சி என்றுஒன்று தோன்றி எவ்வளவு தொல்லை விளைவித்து விட்டது உமக்கு தெரியாதா?

அய்யங்கார்:-எல்லாம் தெரியும் அதற்காகத்தானே நம் பெரியவாள் அப்போதே காந்தியைப் பிடித்து வந்து ஒருகிளர்ச்சி செய்து ஏராளமாய் பணம் வசூல் செய்து பலரை ஜெயிலுக்கு அனுப்பி ஜஸ்டிஸ் கட்சியை வீழ்த்தினார்களே. மற்றும் அவர் வீடு வாசல்களுக்குள் எல்லாம் புகுந்து கலகம் செய்யச்செய்தது கூட உமக்குத் தெரியாதா?

அய்யர்:-சரி. அப்படியெல்லாம் செய்து ஜஸ்டிஸ் கட்சியை வீழ்த்தியபிறகுதானே சுயமரியாதை இயக்கம் வந்து வீழ்ந்துவிட்ட கட்சியை மறுபடியும் தூக்கி நிருத்திமுன்னிலும் அதிகமான தொந்திரவு கொடுத்து விட்டது?

அய்யங்கார்:-தூக்கி நிருத்திவிட்டதால் என்ன ஆய்விட்டது. அக்கட்சியின் விஷப்பல்லுகளைப் பிடுங்கிவிட்டோமா இல்லையா? இப்போது அக்கட்சியை தண்ணிப் பாம்புபோலத்தானே ஆக்கிவிட்டோம். அது இப்போது சம்பளத்தோடு சரி. வேறு சிறிதாவது வாலாட்டுகிறதா பார்.

அய்யர்:- அக்கட்சியால் நமக்கு தொல்லையிலலை யானாலும் சுயமரியாதை இயக்கம் ஜஸ்டிஸ் கட்சியைவிட மோசமாக அதாவது ஜஸ்டிஸ் கட்சியாவது மூர்த்தன்னியமாய் இருந்த காலத்திலும் கூட உத்தியோகத்தில் மாத்திரம் பங்கு கேட்டது. இது பிராமணர்களின் யோக்கியதையையே அடியோடு ஒழித்து பிராமணர்களை எல்லாம் போர்ட்டாக ஆக்குகிறேன். மூட்டை தூக்க வைக்கிறேன் அதுவரையுமட்டுமென்றல்லவா சொல்லிக்கொண்டு காரியம் செய்து வருகின்றது.

அய்யங்கார்:- இதற்கெல்லாம் பயப்படாதீர். சுயமரியாதை இயக்கத்தின் ஆடம்பரத்தையும் அதனால் ஏற்படும் ஆபத்தையும் உத்தேசித்துத்தானே இப்போது அதை ஒழிக்க மறுபடியும் முன்போலவே காந்தியைப்பிடித்து மற்றொரு கிளர்ச்சியை நம்மிட பெரியவாள் ஆரம்பித்தார்கள். அது ஆரம்பமாகி ஒரு வருஷம் போட்டபோட்டில்சுயமரியாதை இயக்கம் அடங்கிவிடவில்லையா?

அய்யர்:-என்ன அடங்கிவிட்டது? எங்கு பார்த்தாலும் மாதம் ஒன்று, இரண்டு, மூன்று மகாநாடுகள் நடக்கின்றன. வாரம்தோறும் பிரசாரங்கள் நடக்கின்றன, சுயமரியாதை இழவு, சுயமரியாதை கல்யாணம், சுயமரியாதை சாந்தி முகூர்த்தம், சுயமரியாதை கிரகப்பிரவேசம், சுயமரியாதை கருமாதி, சுயமரியாதை தெவசம், சுயமரியாதை வாசகசாலை திரப்பு விழா, ஆண்டு விழா, சுயமரியாதை சங்கத் திறப்புவிழா, ஆண்டு விழாசுயமரியாதைகல்யாண மணம், சுயமரியாதை மறுமணம், சுயமரியாதை விதவை மணம், குழந்தைகளுடன் விதவைகளின் திருமணம், பார்ப்பனீயமற்ற சடங்குசுயமரியாதை சங்க கட்டட அஸ்திவாரம் என்பதாக ஏதேதோ தினத்திற்கு தினம் புதிது புதிதாக ஏதாவது ஒரு காரியம் நடந்து கொண்டே தோன்றிக்கொண்டே இருக்கின்றதே தவிர எங்கு அடங்கிவிட்டது?

அய்யங்கார்:-இதெல்லாம் ஒரு வேகத்தினாலும், மற்றும் இதை ஒரு புதிய நாகரீகமாக மக்கள் கருதுவதினாலும் செய்யப்படுகின்ற ஒரு வேடிக்கை சங்கதியே ஒழிய மக்கள் இதன் உண்மையை உணர்ந்து செய்கின்றார்கள் என்று கருதவேண்டாம். புத்தருக்கு மேலாக இவர்கள் ஒன்றும் செய்துவிடமுடியாது.

அய்யர்:-இதை நான்ஒப்பமுடியாததற்கு மன்னிக்க வேண்டும் அந்தக்காலம் வேறு இந்தக்காலம் வேறு. இப்பொழுது அந்தக் கூட்டத்தில் பெரிய மனிதர்கள் என்பவர்கள், பண்டிதர்கள், படித்தவர்கள், நல்ல மத பக்தியும் மத ஆராச்சியும் உள்ளவர்கள், யாதொரு தயவு தாட்சன்னியத்திற்கும் கட்டுப்பட வேண்டாதவர்கள், இப்படியாக அநேகர் அக்கொள்கைகளை வாய்ப்பேச்சுமாத்திரமல்லாமல் காரியத்திலும் பின்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள். இதுமாத்திரமல்லாமல், கல்யாண விஷயங்களில் ஜாதிபேதமில்லாமல் கீழ் ஜாதி மேல் ஜாதிபார்க்காமல் கொள்வினை கொடுப்பினை ஆகியவை நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். அதேகர்காரியத்திலும் செய்துவிட்டார்கள். பிராமணனைக் கண்டால் கும்பிடுவதும் சாமி என்று கூப்பிடுவதும் அவமானமாய்கருதுகிறார்கள். இப்பொழுது எங்கு பார்த்தாலும் பிராமணர்களே முதலில் கையெடுக்க வேண்டியதாயிருக்கிறது. இப்படி இருக்க "இதிலொரு வேகம் நாகரீகம்' என்று நீர் சொன்னால் நான் எப்படி ஒப்புகொள்ள முடியும்?

அய்யங்கார்:-இதெல்லாம் அநேகமாய் பயமும் சுயநலமும் பேராசையும் தாக்ஷண்யமும் காரணமாகத்தான் செய்யப்பட்டு வருகின்றவை. வெகு சீக்கிரத்தில் இக்கூட்டமே மறுபடியும் பழைய பாடம் படித்து ஆரம்பித்துவிடுவார்கள். நீர் மாத்திரம் ஒன்றையும்கவனிக்காமல், தந்தை காந்தி-காங்கிரஸ் சுயராஜியம்என்று மந்திரம் ஜெபித்துக்கொண்டுபிரசாரம் பண்ணும். இந்தமந்திர சக்தி சுயமரியாதை இயக்கத்தையும் கொள்கைகளையும் இருந்தவிடம் தெரியாமல் அழித்துவிடும். ஆனால் இதில் உமக்கு தைரியம் இருக்கவேண்டும். பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம், தாரகம், சாபத்திரி என்கின்ற மந்திர சக்திகள் எல்லாம் என்ன என்று நினைக்கிறீர்? இதுபோலத்தான். ஆனால் நீர் சரியாய் ஜபித்தீரானால் வெகு சீக்கிரம் நம் பக்கம் மக்களை திரும்பிவிடுவார்கள்.

அய்யர்:-காந்தியும் காங்கிரசும் சுயராஜியமுமே சுயமரியாதைக் கொள்கையை ஒப்புக்கொண்டாய்விட்டதே இனி இந்தமந்திரம் எப்படி சுயமரியாதை இயக்கத்தை அழித்துவிட முடியும்.

அய்யங்கார்:-காங்கிரசும் காந்தியும் சுயமரியாதைஇயக்கக்கொள்கையை எங்கு எப்போது ஒப்புக்கொண்டார்கள்? உமக்கு அத்தீர்மானத்திற்கு தத்துவ அர்த்தம் தெரிந்தால்தானே உண்மை விளங்கும். நீர் மேலாதப் பார்க்கிறீர். அதனால் "சுயமரியாதை இயக்கக் கொள்கைதான் காந்தி காங்கிரஸ் கொள்கை" என்றுஉளருகிறீர்.

அய்யர்:-சுயமரியாதை இயக்கத் தொண்டர்களே "சுயமரியாதை இயக்கக் கொள்கையே காங்கிரஸ் கொள்கையாகிவிட்டதால் இனி சுயமரியாதை இயக்கம் வேண்டாம்" என்கின்றார்கள். காங்கிரஸ் தொண்டர்கள் எல்லாம்

சுயமரியாதை இயக்கக் கொள்கைகளே காங்கிரஸ் கொள்கையாதலால், சுயமரியாதைக்காரர்கள் எல்லாம் காங்கிரசில் சேரவேண்டுமென்கின்றார்கள். ஆகவே நீர் மாத்திரம் இப்படிச் சொன்னால் நான் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

அய்யங்கார்:- உம்மால் இப்போது ஒப்புக்கொள்ள முடியாது. பிறகு தெரியும் அதன் சூட்சம்.

அய்யர்:-சூட்சமென்ன? மோட்சமென்ன? உங்க அய்யங்காரில் ஒருவரே, அதாவது கே. சந்தானம் அய்யங்கார் சென்ற வாரம் ஈரோட்டில் ஒரு கூட்டத்தில் "சுயமரியாதை இயக்கக் கொள்கைகளே இவ்வருஷ காங்கிரஸ் அப்படியே ஒப்புக்கொண்டாய் விட்டது. ஆதலால் உங்கள் இராமசாமி நாயக்கர் இனியும் இதில் (காங்கிரசில்) சேராமல் வேதாந்தம் பேசிக்கொண்டு இருப்பது நியாயமல்ல என்று சொன்னார். நான் பக்கத்தில் இருந்து கேட்டுக் கொண்டே இருந்தேன். அப்படி இருக்க எனக்கு சூட்சமம் தெரியவில்லை என்கின்றீரே

அய்யங்கார்:- அந்தசமயத்தில் நானும் கூடத்தான் அங்கிருந்து அவர [திரு. சந்தானம் அய்யங்கார்) சொன்னதை யெல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்.

அய்யர்:- சரி. அப்படியானால் அதில் சூட்சமமென்ன இருக்கின்றது?

அய்யங்கார்:- சூட்சமென்ன வென்றுகேட்கின்றீர். சொல்லுகிறேன் கவனமாய் கேளும்,

இராமசாமி நாயக்கர் சாமியைப்பற்றி, மதத்தைப்பற்றிச் சொல்லுவதை ஒப்புக்கொள்ள முடியாது என்று சந்தானம் அய்யங்கார் சொன்னாரா இல்லையா?

அய்யர்:- ஆம், அதனால் அங்கு சிறிது தகராறுகூட ஏற்பட்டது. என்னவென்றால் "இது காங்கிரஸ் பிரசாரமா, சாமி பிரசாரமா" என்று ஒருவர் கேட்டார். பிறகு அந்த வார்த்தையை விட்டுவிட்டு வேறு பேச்சுப் பேசினர். இதில் சூட்சமமென்ன?

அய்யங்கார்:- சாமிமதம் இரண்டையும் ஒப்புக்கொள்ளப்படாது என்பதுதான் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கை.

அய்யர்:-அப்படியல்லவே.

அய்யங்கார்:-பின்னே எப்படி.

அய்யர்:-"சாமியைப்பற்றி கவலைப்படாதே. சாமிக்கு பணம் காசு நேரம் செலவு செய்யாதே. சாமிபேரில்பழியைப்போடாதே பகுத்தறிவைக் கொண்டு எதையும் ஆராய்ச்சி செய்யவேண்டும்" என்றுதான் சொல்லுகின்றது.

அய்யங்கார்:- அதற்கு என்ன அர்த்தம்? (பிராமணனுக்கு) நமக்குத்தான் சாமி இருந்தால்என்ன இல்லாவிட்டால் என்ன? அதைப் பற்றி கவலை நமக்கு எதற்கு? நாம் சாமி இருப்பதாகசொம்பத்தான் நினைத்துக்கொண்டிருக்கிறோம்? அல்லது எதற்காக மிகுந்த கவலைப்பட்டுக்கொண்டு தான் இருக்கின்றோமா? அல்லது எல்லாப்பழியையும் அதன் மீது போட்டுவிட்டு கைகட்டிக் கொண்டு சும்மாதான் இருக்கின்றோமா?

அய்யர்:-பின்னே நமக்கும் அவாளுக்கும்என்னதான் வித்தியாசம்?

அய்யங்கார்:- அங்கு அல்ல நமது சூக்ஷம்.

அய்யர்: பின்னே எங்கு இருக்கின்றது நமது சூட்சமம்?

அய்யங்கார்:-"கடவுள் ஒருவர் உண்டு. அவரே நம்மை நடத்துகிறார். நமது செல்வம் முயற்சி அறிவு எல்லாம் அவருக்கு அர்ப்பணம் செய்து சுவாமியிடம்பக்தி காட்டி அவர் பாதார விந்தத்தை அடைவதே மனிதப்பிறவி எடுத்ததின் பயன்" என்றும் "இந்த ஜன்மத்தில் நாம் கோவில் குளம், சாவடி, பிராமணனுக்குதான தர்மம்செய்வதன் மூலம் அடுத்தஜன்மத்தில்நாம் நல்ல ஜன்மம்எடுக்கவேண்டும்" என்றும் சொல்லுவதல்லவா நம்ம கொள்கை? இதுதான் காந்திகொள்கை. இதுதானே காங்கிரஸ் கொள்கை. இந்தக்கொள்கையைக் கொண்டுதான் நாம் உலகத்தில் வெகுகாலமாக ஆதிக்கத்துடன் வாழ்கின்றோம். இதில் கையைவைக்காவிட்டால் தானே சுயமரியாதை இயக்கமும் 'நமது இயக்கமும் ஒன்று என்று சொல்லமுடியும். இந்தப்படி ஒப்புக்கொண்டு யாராவது நம்மவர்கள் சுயமரியாதை இயக்கத்துடன் சேருகின்றார்களா? என்பதை நன்றாய் யோசித்துப்பாரும். ஸ சவ னை எடுத்துக்கொள்ளும், ஸ சவன் என்றால என்ன. சிலபண்டிதர்கள் தானே அந்த சைவர்கள் என்னவேண்டுமானாலும் ஒப்புக் கொள்ளுவார்கள்.சாமியைப்பற்றி கவலைப்படாதே என்றால் ஒரே ஓட்டமாக ஓடிப் போவான். பின் சாமி இல்லாவிட்டால் புராணம் எது? புராணம் இல்லாவிட்டால் பண்டிதன் என்கின்ற பெயர் எது? இப்படியே மற்ற சமயமும். மகமதியர்களும் இப்படித்தான். அதிலும் சில பண்டிதர்கள் தான் ஆதிக்கம். ஆண்டவனைப்பற்றி கவலைப்படாதே என்று அவரிடம் சொல்லிப்பார்த்தால் மண்டையை உடைத்து விடுவார். இப்படித்தான் காங்கிரசும். காந்தி ஒவ்வொரு வார்த்தைக்கும் கடவுள் சித்தம் கடவுள் பிரார்த்தனை இல்லாமல் பேசுகின்றாரா? "கடவுள் மீது பழியைபபோடவேண்டாம். கடவுளைப்பற்றி கவலைப்படவேண்டாம்" என்று காந்தி இடம் யாராவது சொல்லிப்பார்த்தால் சங்கதி தெரியும். இரண்டு காதையும் மூடிக்கொண்டு பட்டினி கிடந்து செத்துப்போவேன் என்று முக்காடு போட்டு படுத்துக்கொள்ளுவார். ஆகவே சுயமரியாதை இயக்கத்தின் அஸ்திவாரக் கொள்கையை இந்தக் கூட்டத்தினர்கள் யாவரும் ஒப்புக் கொள்ளமாட்டாகள். அவ்வியக்கத்தில் இருப்பவர்களே 100-க்கு 90-பேர்கள் ஒப்புகின்றார்களா என்பதே சந்தேகம். ஆகையால் கடவுள் கவலையும், கடவுள்மீது பொருப்புப்போடும் குணமும் இந்து மத தர்மமும் மோக்ஷம் மறு ஜன்மம் ஆகிய வைகளும் உள்ளவரை பிராமணர்(பார்ப்பான) யாரும் ஒன்றும் அசைத்துவிடமுடியாது. தெரியாமலா பிராமணர்கள் எல்லாம் காந்தியை மாகாத்மா ஆக்கிவிட்டார்கள். எப்படியிருந்தாலும்காந்திசூத்திரன்தானே. அப்படி இருந்தும் அவரைநம்முடையவைதீக பிராமணர்கள்கூட மகாத்மா என்கிறார்களே எதற்காக? விபீஷணனை (ராக்ஷதனை)சிரஞ்சீவி ஆக்கவில்லையா? அனுமானை(குரங்கை) சிரஞ்சீவி ஆக்கவில்லையா? இதுநடந்ததோ இல்லையோ அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை. பிராமணர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைக்கு ராமாயணம் ஒரு வழி காட்டி என்கின்ற அருத்தத்தில் நான் உமக்கு எடுத்துக்காட்டுகிறேன். இதனாலேயே என்னை புராணமரியாதைக்காரமுட்டாள் என்று சொல்லிவிடாதேயும்.

இந்தகாந்திகூட எதுவரையில் மகாத்மா உமக்குத் தெரியுமா? "ராமராஜியம் ஸ்தாபிப்பேன்" "இதைதான் என்னை நடத்துகின்றது" "பெண்கள் எல்லாம் சந்திரமதிபோல்இருங்கள்" "வருணாச்சிரம தர்மம் உலகநடவடிக்கைக்கு சிறந்தது" என்று சொல்லும் வரைதான் மகாத்மா. அப்படிக்கில்லாமல் கொஞ்சம்மாறினாலும் தலைகீழாகக கவிழ்த்து விடுவோம் இதுஉமக்குத்தெரியாதா?

அய்யர்:- அவரைக்கூடகவிழ்க்க இனியாராலாவது முடியுமா?

அய்யங்கார்:-ஏன்உமக்குத்தெரியாதோ.

அய்யர்:-தெரியாது.

அய்யங்கார்:-முன் ஒருதரம் காந்தி தீண்டாமை விஷயத்தில் கொஞ்சம் அதிகமாய் அதாவது அஸ்திவாரத்தில் கைவைக்கத்தகுந்தமாதிரி பேசஆரம்பித்தவுடன் தென்னாட்டிலுள்ள நம்மிடபெரியவாள்எல்லாம்"மதத்தைப்பற்றி பேச உமக்கு என்ன யோக்கியதை" என்று வளைத்துக்கொண்டதும், பம்பாயில் "காந்தியை கொல்லவேண்டும்" "அவன் ஒரு முட்டாள்" "காந்தி அயோக்கியன்" என்று சொன்னதும், பூனக்காரர் "காந்தியம் தேசத்துரோகம். திலகர் கொள்கைக்கு விரோதம்" என்று சொன்னதும் மாளவியாவை தலைமைகொண்டு இந்து மகாசபையாரும் "காந்திக்கு இந்து மதத்தைப்பேச உரிமை இல்லை" என்று சொன்னதும் உமக்குத்தெரியாதா? எங்கே தீண்டாமையைப்பற்றி, மதத்தைத்தாக்கி மாத்திரம் இப்போது தான் ஆகட்டும் காந்தியை ஒரு வார்த்தை மாத்திரம் பேசச்சொல்லு அவருடைய மகாத்மா தன்மை எத்தனைவிரைவில் நிலைக்கின்றதுஎன்றுபார்ப்போம்? நம்ம பெரியவாளும் நம்மபக்தர்களும் அவரைஒரே அடியாய் தூக்கிதலைகீழாகக்கவிழ்த்து விடுவார்கள் தெரியுமா? இன்னும் ஒரு உதாரணம் சொல்லுகின்றேன் கேள். 1922-வருடத்திய ஒத்துழையாமை யானது சிறிது (பிராமணருடைய) தேவைக்கு மேல் போனவுடன், தாசை தேசபந்துவாக்கி சுயராஜியக்கக்ஷி உண்டாக்கிஒத்துழையாமைஒழித்துஇதேகாந்தியைமூலையில்உட்காரவைத்து விடவில்லையா? ஆக்கவும் அழிக்கவும் நாம் தானே. அதனால்தானே நாம் பிர்மஹரீ ஆனோம்.

அய்யர்:-இது சரி. ஆனால்முன் சொன்ன தீண்டாமையைப்பறறி காச்சி காங்கிரஸ் தாராளமாக தீர்மானித்து விட்டதாக சொல்லுகின்றார்களே!

அய்யங்கார்:-என்ன தாராளம்?

அய்யர்:-'ஜாதிமதபேதமில்லாமல் எல்லோரும் பொது ரோட்டு கிணர் ஆகிய இடங்களுக்கு போகலாம்" என்று சொல்லி தீர்மானம் போட்டு இருக்கின்றார்களே!

அய்யங்கார்:- அத்தீர்மானத்தி

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# 'குடி அரசு' பத்திரிகை.

நாகர்கோவில் வக்கீல் உயர்திருவாளர்.
P. திரம்பரம் B A., B.L., அவர்கள் எழுதியது.

இவ்வளவு குறுகிய காலத்தில் எந்த ஒரு வாரப் பத்திரிகையும் நமது "குடி அரசை"ப்போல் ஆதிக்கம் பெற்று விளங்கினதாகத் தெரியவில்லை: இந்தியாவிலும் இல்லை மற்று மேலை நாட்டிலும் இல்லையென்றே சொல்லவேண்டும்.

இன்று இங்கிலாந்தில் அதிகாரம் பெற்றிருக்கும் தொழிலாளர் கக்ஷிக்குக்கூட, இருபது வருஷத்திற்கு மேலாகவே பாடுபட்டும் ஒரு தினசரி பத்திரிகை நடத்துவதும் கஷ்டமாய் முடிந்திருக்கின்றது. இந்தியாவிலோ, அனேகம் பத்திரிகைகள் புதிதுபுதிதாக ஏவுக்கப்பெற்று மறைந்து போயின.

இதுமாத்திரமல்ல. 'குடி அரசு' பத்திரிகையானது ஏவுக்கப்படும் காலத்திலும், இப்பொழுதும், எதேனும் ஒரு விஷயத்திலாவது படித்தவர்கள், பண்டிதர்கள் என்போரின் கொள்கைகளைத் தழுவியதாகவும் சொல்லமுடியாது. ஆனால் இதற்கு மேலாகவே வந்திருக்கின்றதுவருகின்றது- இந்தியாவில் இவ்வளவு ஆதிக்கம் பெற்றது எங்ஙனம்? என்ற கேள்வி எழுகின்றது.

கல்வியறிவுடையவர்கள் "குடி அரசை" நடத்திவருகின்றார்கள் என்பதாக நம் விரோதிகள்கூட சொல்வதில்லை; ஆயினும், இன்று தமிழ் நாட்டில் ஒரு பெரும்புலவராய் விளங்குபவரும், தமிழிலும், ஆங்கிலத்திலும் ஒருங்கனவே பாண்டித்தியம் பெற்றவரும், இப்போது ஒரு பெரியஉத்தியோகத்தில் அமர்ந்திருப்பவருமான நண்பர் ஒருவர், பல்லோர் கூடியிருக்கும் ஒரு பெரும் சபையில் "குடி அரசு பத்திரிகையினால் தமிழ் இலக்கியத்திறம் உற்பட்டிருக்கும் நன்மை அளவிட முடியாது" என்பதாகச்சொன்னதுண்டு.

இதல்லாது, "குடி அரசு" இன்று ஏற்பட்டிருக்கும், ஏதாவது, ஒரு அரசியல் கட்சியை ஒட்டிப் போகின்றதோ என்றால் அதுவுமில்லை: பார்ப்பனரல்லாதார் கக்ஷிக்கு, ஆதரவு அளிக்கவேண்டியதாக ஏற்பட்டிருந்தபோதிலும், கண்மூடித்தனமாக அவ்விதம் செய்வதுமில்லை.

இவ்வாறெல்லாம், பலவாறாக ஏற்பட்டிருக்கும் கஷ்டமான சந்தர்ப்பத்தில், "குடி அரசு" பத்திரிகைக்கு இவ்வளவு ஆதிக்கம் ஏற்பட வேண்டிய காரணமென்ன?

இவ்வாறு ஒரு பத்திரிகை தமிழ்நாட்டில் தோன்றவேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்ததிலிருந்தே தோன்றியதினால் மாத்திரம் இவ்வளவு ஆதரவு, பிணி நீடித்தவிடும். க்கத்திற்கு இடம் கொடுத்தது. இந்தியாவில் இன்று பணக்காரர்கள் தயவு இல்லாமல், படிபடாளிகள் தயவு இல்லாமல், பாமர மக்களின் மூடபழக்கவழக்கங்களை எதிர்த்தும், ஒருவிதசமயசார்பு இல்லாமலும் நடக்கும் பத்திரிகை ஒன்று உண்டுமானால் அது குடி அரசு ஒன்றேயாகும்,

இதற்கு காரணமும் ஒன்றேயாகும். அதாவது "அனேத்துயிர் ஒன்றெனவெண்ணி" நடக்கும், பத்திரிகை குடி அரசாகும். இதுதான சுயமரியாதை இயக்கத்தின் அடிபடையான கொள்கை.

புத்த மதமும், சமண மதமும், தென்னாட்டில் பெருமை பெற்று விளங்கியது போல மற்றோரிடத்தும் விளங்கி வந்ததில்லை அக்காலங்களில் தான் தமிழ் நாடும் செழிப்புற்றிருந்தது. பின்னர் தோன்றிய சமயச் சண்டைகளிலும் சாதிப்பிரிவினைகளிலும் தமிழ் நாடு பாழடைந்தது இச்சமயச் சண்டைகளும் சாதிப்பிரிவினைகளும் அகற்ற குடி அரசு முனைவதாகும் நிற்கின்றது. இவ்விரண்டு தீங்குகளும் நம் சமுதாயத்தில் நிறைந்து நீங்காதும்போது தான் தமிழ் நாடு தலை உயர்த்தி நிற்கக்கூடும். தன் மரியாதையை க்கூட பாதுகாக்கவும் கூடும். இந்த உண்மையை தமிழ நாட்டில் பெரும்பாலோர் நன்கு உணர்ந்து விட்டார்கள். பூர்வாலாக இப்பொழுது இதில் நம்பியிருக்கிறார்கள் இந்த உண்மையை வெளியிட்டது குடி அரசு ஆகும். ஆகையினால் தான் இவ்வளவு அன்பும் ஆதரவும் பொது ஜனங்களிடமிருந்து வருகின்றது.

இதற்கு முன்னால் இந்தியாவில் பல்வேறு சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியிருப்பது உண்மையே. ஆனால் இந்தியாவைப் போல் சாதிப்பேயும் சமயப்பேயும் ஒன்றறக்கலந்து கூத்தாடும் நாடு பூலோகத்தில் எங்குமில்லை. இதோடு கூட தென்னிந்தியாவில், தீண்டாமை என்னும் மற்றொரு பேயும் சமுதாயத்தைப் பிடித்துக் கொண்டது. இந்த மூன்று பேய்களும், தமிழர் நாகரீகத்தில் உட்பட்டவைகள் அல்லாதவைகள் ஆனபடியால் கூடிய சீக்கிரம் மறைந்துவிடும். மறையச் செய்யவேண்டும். ஆனால், குடி அரசின் வேலைக்கு ஓய்வு வந்தபாடில்லை. இன்னும் தீவிரமாகவேலை செய்யவேண்டியதாகவிருக்கின்றது. ஆகையினால், குடி அரசு சகல சக்தியும் மேலும் மேலும் பெறவேண்டுமென்பது எமது ஆசை. குடி அரசு வாழ்க! குடி அரசு ஓங்குக!!

## வேடிக்கை.

நிரு "சென்குப்தா அவர்கள் சிட்டகாங்குக்கு சென்றிருந்தபொழுது 10000 பேர்கள் வரவேற்றார்கள் அவரைச் சூழ்ந்து ஒரு டஜன் வாலிபர்கள் "சென்குப்தா ஒழிக" "ஒப்பந்தம் ஒழிக" "காந்தி ஒழிக" என்று சப்தமிட்டார்கள், இதனால் மகாகூடு ஒத்திவைக்கப்பட்டது.

(சு-மி. பிரீபிரஸ்)

பதினாயிரம் பேர் வரவேற்றார்களாம். 12 பேர்கள் "சென்குப்தா ஒழிக" என்றார்களாம். இதனால் 10000 பேர் வரவேற்ற மகாகூடு ஒத்திவைக்கப்பட்டதாம். இது 12 பேர்களின் வலிமையா அல்லது 10000 பேர் என்பது புரஞா?

### சத்தியமூர்த்தி அபிப்பிராயம்.

உயர்திரு. சத்தியமூர்த்தி ஐயரின் பெண் கல்வியைப் பற்றின அபிப்பிராயம் "பெண்களுக்குத் தங்கள் வீட்டுக் காரியங்களை செம்மையாய்ச் செய்வதற்கான கல்வி கற்றுக் கொடுக்கவேண்டும்."

(சு-மி.)

### காந்திக்கு எவ்வளவு பெருமை.

சத்தியமூர்த்தி திரு. காந்தியைப் பற்றி "சென்ற வருஷம் திரு. காந்தி சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டபோது எல்லோரும் அவரைப்பைத்தியக்காரர் என்றார்கள். ஆனால், இர்வின் பிரபு வரவழைத்து அவருடன் சரிசமானமாக வார்த்தை யாடினார்" ஆகவே காந்திக்கு எவ்வளவு பெருமை.

### ஜவர்லால்

பண்டிட் ஜவர்லால் நேரு உடல் நலத்திற்காக இலங்கைக்குச் சென்றார். அங்குமழை யலமும் ஏற்பட்டுவிட்டது அதாவது

"ஒன்றுக்கும் உபயோகமற்ற போக்கிரிகளுங்கூட தேசப்பற்று என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு உலகத்தை ஏமாற்றுகிறார்கள்" என்றோ ஆங்கிலப் பழமொழி உளது. இப்பழமொழி மிகைபடக்கூறல் என்ற வழுக்கெனப்பலர் நினைக்கூடுமென்றாலும் அதில் மறுக்க முடியாத உண்மை பொதிந்து கிடக்கின்றது என்பதை யாவரும் ஏற்றுக்கொள்ளவே செய்வார்கள்."

"தூய்மையான மனச்சாட்சியுள்ளவர்களுக்கு இராஜீய உலகம் மிகுந்த வெறுப்பையே கொடுக்கின்றது. எவ்

வளவு விரைவில் இராஜீய உலகத்தைவிட்டு விலக முடியுமோ அவ்வளவு விரைவில் விலகிக் கொள்வேன்' என்று பண்டிட் ஜவஹர்லால்" சொன்னார். 'வீரகேசரி'

### ராஜியின் பெருமை.

'இதுதான் கௌரவமான ஒப்பந்தமாம்'

"இந்தத் தீர்மானத்தின்படி நம்பக்கத்தில் நாம் சட்ட மறுப்பியக்கத்தை நிறுத்திவிட வேண்டும். அவர்கள் (கவர்ன்மெண்டு)பக்கத்தில்அந்த இயக்கத்திற்கு விரோதமான நடத்தைகளை நிறுத்திவிட வேண்டும். இந்தச் சமரச ஒப்பந்தத்தை நீங்கள் ஒப்புக் கொள்ளவேண்டும் -என்று உங்களை நான் கேட்டுக்கொள்வதற்கு முதல் காரணம் என்ன வென்றால் இது ஒரு கௌரவமான ஒப்பந்தமென்பதே."

திரு. சத்தியமூர்த்தி.

### ஹிந்தி.

இந்திய பூமிக்குள் இனி ஹிந்தி பரவ வேண்டுமென்றும், ஆங்கிலத்திலோ, பிறபாஷைகளிலோ காரியங்களை நடத்துவது சாத்தியமாக இல்லை, இனி என்னை ஆங்கிலத்தில் பேசுமாறு யார் வேண்டினும்தான் லக்ஷியம் செய்யப்போவதில்லை (திரு. காந்தி)

### இதற்குப்பதில்.

"தமிழ் நாட்டில் ஹிந்தியில் அரசியல் நடக்க நாம் ஒருப்படோம். தமிழ் நாடு தமிழில் ஆளப்பெறவேண்டும். ஹிந்தியில் ஒரு அரசியல் தமிழ் நாட்டில் நடப்பதைவிட, இங்லீசில் நடப்பது எவ்விதத்தும் ஈனமுடையதன்று."

(நாடார் குல மித்திரன்)

### ஸ்பெயின் குடி அரசு.

ஸ்பெயின் தேச முடி அரசானது இளர்ச்சிக்காரர்களாலும், புரட்சிக்காரர்களாலும் குடி அரசு அரசாங்கமாக மாறிவிட்டது.

### அபிப்பிராயம் மாற அனுமதி.

அபிப்பிராயம் மாறலாம். "ஒரு மனிதன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி தன் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வது கெட்ட குணமாகாது. அந்தப்படி ஒருவரை அடிக்கடி அபிப்பிராயம் மாற்றிக் கொள்ளுபவர் என்று சொல்வதும் குற்றமாகாது" என்று சென்னை ஹைகோர்ட்டுத் தீர்ப்புக் கொடுத்துவிட்டது. இந்தத் தீர்ப்பானது நமது தேச பக்தர்களுக்கு நட்டாற்றில் நின்ற தூணாக இருக்கும்.

### இர்வின் பிரபு.

திரு. காந்திக்கு நெருக்கடியான ஒரு நிலையில் பெரியஉதவிசெய்து இந்தியரை ஏமாற்றி,ஸ்ல பின்னே என்ன பெயர வாங்கிக்கொண்டு, இர்வின் பிரபு சுகமே தன் தேசத்திற்குத் திரும்பி விட்டார்.

### திரு.காந்தி அரசாங்கம்.

"தமிழ் நாட்டுக்காரர்கள் ஹிந்தி பாஷை கற்றுக் கொள்ளாததால் காங்கிரஸ் நடவடிக்கைக்குத் தஷ்டமாயிருக்கிறது. சிக்கிரம் கற்றுக் கொள்ளாவிட்டால் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க மாட்டேன்."

காந்தி (க-மி)

### திராவிடன் பிசகு.

திரு. சத்தியமூர்த்தி ஐயரைக்கண்டபடிபரிகாசம்செய்த திராவிடன் எழுதியதின்காரணத்தால் திரு சத்தியமூர்த்தி ஐயர் ஜெயிலுக்குப்போய் விட்டு வந்துவிட்டதால் அவர் இப்போது இந்தியாவிலேயே பெரிய தேசபக்தராய் விட்டார்.

திராவிடன் அந்தப்படி எழுதுவதற்கு முந்தி திரு. சத்தியமூர்த்தியை யாராவதுநீர்என் இன்னும் ஜெயிலுக்குப்போகவில்லை" என்று கேட்டால் அதற்கு அவர் "நான் என் போக வேண்டும். என்னை என் போகவில்லையென்று சொல்லுபவர்கள் எல்லாம் முதலில் போகட்டுமே" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்படிப்பட்டவர் இப்போது தென் இந்தியாவுக்கே பிரதிநிதியான தற்குக் காரணம் திராவிடனேயாகும். ஆகவே திராவிடன் தன்வினையின் பயனை அடைய வேண்டியது நியாயமே யாகும்

### ஞாயிற்றுக்கிழமை விரதம்.

சமையில் நிறுவ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை வேலை இல்லா விரதம் அனுஷ்டிக்கவேண்டுமாதலால்அங்குசினிமா, நாடகம் முதலியவைகூடாமை பெறச்செய்யக்கூடாது என்று பாதிரிவைதீகர்கள் சட்டம்கொண்டுவந்தார்கள். ஆனால் அது தோற்கடிக்கப்பட்டுப்போய்விட்டது.

இந்தியாவில் சாரதா சட்டத்தைப் போல சமையில் நிறுவ்துவ வைதீகர்களுக்கு இது ஒரு பெரிய தோல்வியேயாகும்.

ஆனால் பின்னால் வரப்போகும் தோல்விகளுக்கு இது உறைபோடக் கூடக்கட்டாது.

### திரு. மாளவியா.

காண்பூரில் பண்டித மாளவியா அவர்கள் பேசும்போது "கடவுள் அளித்த அன்பை இரு வகுப்பாரும் உபயோகித்து இருந்தால் இந்தக்கோரசம்பவம் இந்து முஸ்லீம் கலவரம் நடந்திருக்காது" என்றுசொல்லியிருக்கிறார்.

அன்பை அளித்த கடவுள் அதை உபயோகிக்க என் புத்தி கொடுக்கவில்லை என்பதற்கு பதில் சொல்ல திரு. மாளவியாவுக்குத் தெரியுமா? தெரியும். என்னவென்றால் "கடவுள் சித்தமில்லாமல் அன்பை உபயோகிக்க யாராலும் முடியாது" என்பதுதான்.

இத்தனைபேர் இன்ன கலவரத்தால் உயிர் விடவேண்டும் எனபதாக கடவுள் சித்தமிருந்தால் கடவுளே அன்பைக் கொடுத்திருந்தாலும் அதை உபயோகித்து அக்கொலைகளை நடக்கவொட்டாமல் நிறுத்தி இருக்கப் பண்டிதராலும் முடியாது. அவர் பாட்டனாலும் முடியாது. மகாத்மாவினாலும் முடியாது என்பதை மாளவியாஉணர்வார்களாக.

### ஏன்?

"தென் இந்தியாவில் காங்கிரஸ் வேலை சரியாக நடை பெறவில்லை, சத்தியாக்கிரகப் போரில் அதன் பங்கை அது செலுத்தவில்லை" என்று காங்கிரஸ் ரிப்போர்ட்டு கூறிவிட்டது. ஆனால் தென் இந்தியாவில் திரு. சத்தியமூர்த்தி ஜெயிலுக்குப் போன பின்புகூட இப்படி யாராவது சொன்னால் இதை சத்தியமூர்த்தி ஐயர் ஒப்புவாரா? ஒப்பமாட்டார். அது ஒரு புறமிருக்கட்டும். தென் இந்தியா ஏன் தன் பங்கை செலுத்தவில்லை. இது ஒரு சமயம் பொய்யாய் இருக்குமா? ஒருக்காலும் இருக்காது.

பின்னே என்ன காரணம்? வகுப்புவாதம், இந்து முஸ்லீம் பிணக்கு, சுயமரியாதை விஷமம் ஆகியவைகளாயிருக்குமோ? ஒருக்காலும் அல்ல. இவைகளுக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கமுடியாது. பின்னே என்னதான் காரணம்?

இந்தி பாஷை தெரியாததாயிருக்கலாமோ? அதுவுமல்ல. பின்னே என்ன? ஒரு சமயம் திரு எஸ். சீனிவாசய்யங்கார் வெளிக்கிளம்பாதகாரணமாகஇருக்கலாமோ?சரியாய்ச் சொன்னீர் உம்ம வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும். சரி. அப்படியானால் அவர் விலாசம் என்ன? அது தான் எனக்கும் தெரியாது.

## புரட்சி இயக்கம்

### மகாத்மாவிற்கு பதில்

சுகதேவர் கடிதம்

தூக்கில் மடிவதற்கு சில நாட்களுக்கு முன் ஸ்ரீ சுகதேவர் மகாத்மா காந்திக்குப் பின்வரும் கடிதத்தை எழுதியுள்ளார்:—

சமரசப் பேசசு லெற்றி யடைந்த பின், புரட்சி வேலைளைச் சில காலத்திற்காவது நிறுத்திவைத்து அஹிம்சா இயக்கத்தை நட்த்திப்பார்க்கச் சந்தர்ப்பம் அளிக்குமாறு தாங்கள் பல பொதுக்கூட்டங்களிலும் புரட்சிக்காரர்களை வேண்டிக் கொண்டிருப்பதாகத்தெரிகிறது. ஆனால் ஓர் இயக்கத்தை திடீரென நிறுத்திவைப்பது லட்சியத்திற்குகந்ததாகாது. காலத்தின் போக்கையும், தேவைகளையும் அனுசரித்தே இயக்கத்தலைவர்கள் தங்கள் வேலை முறைகளை மாற்றிக் கொள்ளுமாறு நேரிடுகின்றது.

"சமரசப் பேச்சு நடந்து கொண்டிருக்கும் பொழுது, தாங்கள் இனி ஏற்படும் சமரசம் முடிவானதல்ல என்பதை நன்கு உணர்ந்து வெளிப்படையாகவும் கூறிவிட்டீர்கள். நீங்கள் வேண்டும் சீர்திருத்தங்கள் யாவும் கிடைத்துவிட்ட போதிலும் முடிவான நிலை ஏற்படாது என்பதை புத்திசாலிகள் அனைவரும் எளிதில் உணர்வர். லாகூர் தீர்மானத்தால் பூர்ண சுயேச்சை பெறும்வரை சற்றும் தயங்காது போராட காங்கிரஸ் கட்டுப்பட்டிருக்கிறது. இத்தீர்மானத்தை யொட்டிப்பார்த்தால்சமரசமும், ஒப்பந்தமும், தற்காலிக மானவைகள் என்பதும், நமது அடுத்த போராட்டத்திற்கு இன்னும் மகத்தான தோரணையில் நமது சக்தியை அதிகரித்து கட்டுப்பாடு செய்து கொள்ளவும் இது ஒரு படியாகுமென்பதும் புலப்படும்.

சமரச நிபந்தனைகளை விதிப்பதோ, அன்றி சமரசம் செய்து கொள்ள வேண்டிய காலத்தை நிர்ணயிப்பதோ, ஸ்தியக்கத்தை நடத்தும் தலைவர்களைப்பொருத்தது. லாகூரில் பூரண சுயேச்சைத் தீர்மானம் நிறைவேறியிருந்தும், தீவிரமான இயக்கத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க தீர்மானித்து விட்டீர்கள். இருப்பினும் அத்தீர்மானம் காங்கிரசின் கொள்கையாக நிற்கிறது. இந்தஸ்தான் சமதர்மக்குடி அரசு கட்சியின் நோக்கம் அதன் பெயரிலிருந்தே தெளிவாகும். சமதர்மக் குடியாரசை ஸ்தாபிப்பதே அதன் நோக்கம். இதில் அநேகுறையான லட்சியமே கிடையாது. அவர்களது லட்சியங்களும், உன்னத அவாக்களும் பூர்த்தியாகும் வரை போராட்டத்தை நடத்திச் செல்ல அவர்கள் கட்டுப்பட்டிருக்கிறார்கள். ஆனால் சமய சந்தர்ப்பங்களை அனுசரித்துத்தங்கள்நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு. புரட்சிப் போராட்ட நடவடிக்கைகள் காலத்திற்குத்தகுந்த மாறுதலையடையும். சில சமயங்களில் ரகசியமாக அந்தரங்கத்தில் நடைபெறும். சில சமயங்களில் வெறும் இளர்ச்சியுடன் நின்றுவிடும். சில சமயங்களில் உயிரைத் துரும்பென மதிக்கும் உக்கிரப்போராக மாறிவிடும் ஆதலின புரட்சிக்காரர்கள் தங்கள் இயக்கத்தையும், வேலைகளையும் நிறுத்தி வைப்பது முக்கியமான விசேஷமான காரணங்கள் இருந்தாலன்றி முடியாத காரியம். ஆனால் தாங்கள் இப்படிப் பட்ட காரணங்கள் எதுவும் எடுத்துக் காட்டியதாகத் தெரியவில்லை. புரட்சிப் போராட்டத்தில் வெறும் மனே எழுச்சி கொண்டு வெளியிடும்வேண்டுகோட்கள் பயன்படா

நீங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டவுடன் உங்கள் இயக்கத்தை நிறுத்திவிட்டார்கள். உங்கள் இயக்கத்தில் சிறை சென்றவர்கள் இதனால் விடுதலை யடைந்து விட்டனர். ஆனால் புரட்சிக் கைதிகளின் கதி என்ன? டஜன் கணக்கான "காதர் கட்சி" கைதிகள் 1915—ம் ஆண்டிலிருந்து சிறையில் உழல்கின்றனர். அவர்களது தண்டனைக் காலம் பூர்த்தியாய் விட்ட போதிலும் அவர்களை விடுதலை செய்யவில்லை. நூற்றுக்கணக்கான ராணுவச் சட்டக்கைதிகளையும், பாபர் அகாலிக் கைதிகளையும் உயிருடன் புதைத்தமாதிரி சிறையில் வைத்து வாட்டி கின்றனர். தேவகிரி, மாகோரி. மச்ச பஜார், லாகூர் முதலி யசதி வழக்குக் கைதிகள் இன்னும் சிறைச் சாலையில் கிடக்கின்றனர். லாகூர், டெல்லி, சிட்டகாங், பம்பாய் கல்கத்தா முதலிய விடங்களில் இன்

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கா நாஸ்திக அபிவிர்த்தி பிரசார வெளியீடு.

## நாங்கள் நாஸ்திகர்கள்தான். எனென்றால்,

1. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதற்கு எங்களுக்கு போதிய ருஜு இல்லை.

2. ஒரு கடவுள் இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு அவசியமோ அவரால் ஒரு உபயோகமோ இருப்பதாக நாங்கள் கருதுவதில்லை.

3. ஒரு நல்ல கடவுள் என்பவர் சர்வ சக்திவாய்ந்தவராய் இல்லாவிட்டால் அவர் பிரயோஜனமற்றவரேயாவார்.

4. ஒரு சக்தி வாய்ந்த கடவுள் நல்லவராக இல்லாவிட்டால் அவர் வணக்கத்திற்கு உரியவராக மாட்டார்.

5. சர்வ சக்திவாய்ந்த ஓர் நல்ல கடவுள் இல்லவே இல்லை. அப்படியிருப்பதாகயிருந்தால், எல்லாம் தோஷமற்றதாகவும், சம்பூர்ணமாகவுமிருக்கும்.

6. கடவுளால் உண்டாக்கப்பட்ட எல்லா உலகங்களிலும் இந்தஉலகம் ஒன்றுமட்டும் சிரேஷ்டமானஉலகமாயிருக்கின்றதாலும், அப்பொழுது மோட்ச உலகத்தைப்பற்றிக் கூறும் கதைகள் எல்லாம் பொய்யானவைகளாகத்தான் இருக்கவேண்டும்.

7. மனிதன் இடைவிடாமல் அடித்தடுத்து விஞ்ஞான சாஸ்திரத்திலும், சுகந்திரத்திலும், சீர்திருத்ததிலும் முயற்சிசெலுத்திக்கொண்டே வந்திருக்கின்றபடியால், கடவுள் கொள்கை விவகாரத்திற்கு வந்துவிட்டதுடன் கடவுள் உணர்ச்சியும்நாளுக்கு நாள் குறைந்துகொண்டேவருகிறது.

8. ஆதியில் மனிதர்கள் அறியாமை என்னும் அந்தகாரத்தில் மூழ்கியிருந்த பொழுது தனக்கு தெரியாத விஷயங்களை யெல்லாம் கடவுள் தன்மை,கடவுள்செயல்எனக்கூறவேண்டியதாகி-ஒரு கடவுளைஉண்டாக்கிக்கொண்டு அதை அனுபவத்தில் கொண்டுவந்துவிட்டார்கள். ஆதிகால மனிதர்கள் ஒவ்வொன்றையும் தப்பிதமாகவே யூகித்துக்கொண்டு வந்தார்களெனக் கூறிவிட்டு ஆனால், ஜீவனைப்பற்றிமட்டும் உண்மையாகவே அவர்கள் அறிந்து வைத்திருந்தார்களெனக் கூறவதும் பொருத்தமானதல்ல.

9. விஞ்ஞான சாஸ்திரங்களின் உதவியால் கண்டுபிடிக்கப்பட்டவைகள் யாவும், அவை கண்டு பிடிப்பதற்குமுன் அவைகள் ஒவ்வொன்றையும் கடவுளின் செயல்; கடவுளின் அற்புதம்எனக் கூறப்பட்டுக்கொண்டேவரப்பட்டது. எதாகிலும்-ஒன்று புதிதாக கண்டு பிடிக்கப்பட்டால், அப்பொழுது கடவுளின் தன்மையும், கடவுளின் அற்புதமும் கொஞ்சம் கொஞ்சமாக பின்னடைகின்றன. புதியதாக கண்டு பிடிக்கப்கட்டவைகளில் எதுவும் ஒன்றுகூட கடவுளின் தன்மையை வலுப்படுத்தவேயில்லை.

10 கடவுள்தன்மை என்றுஇதுவரைபகிரகசப்படுத்தப்பட்டுவந்தவிஷயங்கள் யாவையும் பரிசோதனைசெய்து பார்த்த பிறகு, அவைகள் யாவும் இப்போது மனிதத் தன்மைக்கு அடங்கியவைகள்தான் எனவும், பொதுவாகவே வஞ்சனையும், சூதும்,மோட்சமும்தான் எனவும் நிரூபிக்கப்பட்டு வருகின்றன.

11 குற்றம், பொறாமை, பொறுமை, பகைமை, அசூயை, காமம்,எரிச்சல், தர்ம சிந்தையில்லாமை,ஆகிய வைகள் யாவும் கடவுளின் தன்மைக்குப்பொருந்தி, இணக்கமாக யிருக்கின்றது.

நாஸ்திகம் போதிப்பது யாதெனில்:—

கைலாசத்திலோ அல்லது வைதண்டத்திலோ அல்லது பாலோகத்திலோ ஒருவித கடவுளும் இல்லை.

தாய், தந்தையற்ற குழந்தைகளையும், நிக்கதற்றவர்களையும் மனிதர்கள்தான் காப்பாற்றவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் பாதுகாக்கப்படமாடடார்கள். கடவுள் காப்பாற்றுவார் என்பது வீண் வார்த்தை.

நமது பிராத்தனைகளுக்கு செவி சாயிக்கக்கூடிய ஒரு கடவுள் இல்லை! இல்லை!! இல்லவே இல்லை!!!

மனிதர்களே மனிதர்களின் அபயக்குரலோசைகளுக்கு செவி சாய்த்து அவர்களுக்கு உதவி புரியவேண்டும்.

நரகமென்பது கிடையாது.

நாம் பயப்படக்கூடிய அல்லது பிறப்பற்றக்கூடிய, பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்கிற தூர்எண்ணங்கொண்ட கடவுளாவது, அல்லது பூதமாவது எக்குமில்லை.

நம்பிக்கையினால் மன்னிப்பாவது அல்லது மோட்சமாவது ஏற்படமாட்டாது.

நம்முடைய செய்கைகளுக்கேற்ற பலாபலன்களை நாம் தைரியமாக எதிர்நோக்கியிருக்கவேண்டும்.

இயற்கையில் ஏகதிநஷ்டியுள்ள உபகாரத்தன்மையாவது அல்லது துவேஷமாவது கிடையாது.

தடுக்கக்கூடியதும், தடுக்கக்கூடாததுமான துன்பங்களிலிருந்து தங்களைத்தாங்களே காப்பாற்றிக்கொள்ள போராடுவதுதான் ஜீவிய வாழ்க்கையின் தன்மையாயிருக்கின்றது. உலகம் விர்த்தியடையவேண்டியதவசியமானால் மனிதர்களின் ஒத்துழைப்புமிக்க அவசியமாக வேண்டியிருக்கின்றது.

நாம் இறந்தபிறகு "நமது பாக்கி வேலையை!' ப்புரிவதற்கு சந்தர்ப்பம் வாயிக்காது.

செய்தால் இப்பொழுதே நாம் செய்யவேண்டும். இல்லையானில் எப்பொழுதுமே செய்யமாட்டோம்.

உண்மை, தயை. அழகு,சுதந்திரம், ஆகியவைகளுக்கு தெய்வீகத்தன்மையென்பதுகிடையாது.

இவைகள்யாவும் மனிதத்தன்மையின் இலக்ஷணங்களாகையால் மனிதர்கள் இவைகளைப்பாதுகாத்துகாப்பாற்றில் கொண்டேதான் வரவேண்டும். இல்லாவிட்டால் மனிதர்கள் பூமியிலில்லாமலே நாசமாய்ப் போய்விடுவார்கள்.

## நாஸ்திகத்தின் ஐந்து பிரதான தத்துவங்கள்,

1. லோகாயதமதம்.

இயக்கையாகக் காணப்படும் ஜடப்பொருள், அதனுள்ளிருக்கும் வல்துக்கள் சக்தி, ஆகிய இவைகளினால் தான் உலகம் என்று சொல்லக்கூடியது உருவாக்கப்பட்டிருக்கின்றது.

2. தன்னுடைய சொல்ப அனுபவத்தையே நம்புதல்.

அனுபவங்களிலிருந்து தான் எல்லாவித அபிப்பிராயங்களும் தோன்றுகின்றன. ஆகையினாலே, கடவுளைப் பற்றிய ஓர் எண்ணத்தையோ அல்லது கருததையோ மனிதன் கொள்ளவேக்கூடாது.

3. வளர்ச்சி.

அவயவங்களின் அமைப்புகள் கல்பனை செய்யப்பட்டவைகள் அல்ல. ஆனால், இயற்கையின் கோரிக்கைகளின்படி அவைகள் தானுகவே ஆலோசனையின்றிவிர்த்தியானவைகள்.

4. தீமைகளின் தத்துவம்.

சர்வவல்லமையுள்ளவரும், மனிதர்களின் சுகத்தில் சுவலை பூண்டு எப்பொழுதும் கவனித்துக்கொண்டு வருபவருமாகிய ஒருவர் உண்டு என்னும் எண்ணத்தை, உலகத்திலிருக்கக்கூடிய துன்பங்கள், தீமைகள் என்னும் பிரத்தியகூமான உண்மைகளால் தகர்த்தெரியவேண்டும்.

5. சந்தோஷ வாழ்க்கை.

இவ்வுலகத்தில் இப்பொழுது ஒருவன் அனுபவிக்கக்கூடிய சந்தோஷமும், இன்பமுமேதான் அவனுடைய நடத்தைகளின் நோக்கங்களாயிருக்கவேண்டும்.

## நாஸ்திகத்தைப் பரப்பும் சங்கத்தின் முக்கிய பத்து கொள்கைகள்.

நாட்டில் வாசஞ்செய்பவர்கள் எல்லோரும் ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களாயில்லாதிருப்பதனாலும், அவர்களுக்கு கடவுள் தன்மை யில்லாத ராஜீய நீதிகளுக்குப்பதிலாக லௌகீக அரசியல் முறைகளே தேவையாகயிருப்பதாலும், நாஸ்திகத்தைப்பரப்புவதற்கென ஏற்படுத்தப்பட்ட இச்சங்கமானது கீழ்கண்ட நிபந்தனைகளை வற்புறுத்துகின்றது.

1. எல்லாக்கோவில் சொத்துக்களுக்கும் வரிவிதிக்கப்படவேண்டும்.

2. பொதுப்பணத்திலிருந்துஜீவனியம் பெற்றவரும் எல்லாக்குருக்கள் மார்களும்,புரோகிதர்களும், மதத்தில் வெவ்வேறவகுப்பைக்குறித்து போராடிக்கொண்டிவரும் எல்லா மதஸ்தாபனக்களும் பொது வாழ்விலிருந்து நீக்கப்படவேண்டும்.

3. நாஸ்திகர்களின் உரிமைகளையும், சுதந்திரங்களையும், சுயேச்சைகளையும், தடுத்துக்கொண்டுவரும் எல்லாவித சட்டங்களையும், மார்க்க நீதி விஷயங்களை ஜனங்களுக்குப் பலவந்தப்படுத்தி போதிப்பதற்கு அனுகூலமாயிருக்கும் சட்டங்களையும் ரத்து செய்துவிடவேண்டும்.

4. நீதிஸ்தலங்களில் கடவுளின் மீதுபிரமாணங்கள்செய்வதையும்எதாகிலும்ஒன்றைப்புதியதாகபிரதிஷ்டைசெய்யும்போதும்ஒருகாரியத்தைதுவக்கும்போதும் கடவுள் வணக்கம் செய்வதையும் அடியோடு ஒழித்துவிடவேண்டும்.

5. சட்டங்களை பரிபாலனம் செயயக்கூடிய எந்த அதிகாரிகளும், மத சம்மந்தமான அறிக்கைகளை பிரசுரிக்கவிடவேகூடாது.

6. "நாங்கள் கடவுளிடத்தில் நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறோம்" என மூடபக்தியாலும், மூடநம்பிக்கையாலும், நமது நாணயங்களிலும் மற்றும் பொது இடங்களிலும், எழுதப்பட்டிருக்கும் வாக்கியங்களை அழித்துவிடவேண்டும். சண்டைக்கப்பல்களில் பறந்துகொண்டிருக்கும் நமது தேசியக்கொடிகளைவிட உயரமாக இப்பொழுதுகோவில் பறக்கவிட்டு இருக்கும் கொடிகளை எல்லாம் அப்புறப்படுத்திவிடவேண்டும்.

7. பரிசுத்த புஸ்தகம் எனக்கருதப்பட்டுவரும் பைபிள் முதலியமத ஆதார வேதசாஸ்திரம் புஸ்தகங்களையும் புராணக்கதைகளையும், பொது பள்ளிக்கூடங்களிலிருந்து நீக்கிவிடவேண்டும்.

8. பள்ளிக்கூட நேரங்களில், வேதபாடங்கள் போதிக்கப்படும்பொழுது பிள்ளைகள் ஆஜரில்லாவிட்டால் பள்ளிக்கூடங்களிலிருந்து நீக்கப்படுவார்கள் என மதத்தின் பேரால் பிள்ளைகளை பயமுறுத்திக்கொண்டுவரும் கெடுபிடிகளை அறவே தடை செய்யவேண்டும்.

9. விவாகங்கள்பாமார்த்திகமானவைகள் என்னும் எண்ணங்களை நீக்கி, உலக இயற்கைக்கு ஒத்திருக்கும் படியாகவும், விரும்பியபோது விவாகங்களை ரத்து செய்து கொள்ளவும் வசதியளிக்கப்படவேண்டும்.

10. முன்னேற்றத்திற்கு எதிரிடையாக யிருப்பவைகளையும், கர்ப்பத்தடைகளுக்கு விரோதமாயிருப்பவைகளையும், கிரந்தங்களையும், வர்த்தமான பத்திரிகைகளையும் அச்சிடுவதற்கு முன் பரிசோதித்துப் பார்க்கவேண்டும் என்கின்ற சட்டங்களையும் ரத்து செய்துவிடவேண்டும்.

# குடி அரசு

ரோடு 1931ஹு மேமீ 3உ


## ஏழாவதாண்டு.

—:0:—

நமது "குடி அரசு" தோன்றி ஆறுண்டு நிறைவு பெற்று ஏழாவதாண்டின் முதல் மலராய் இவ்வாரப்பதிப்பு வெளியாகின்றது. இந்த சென்ற ஆறு ண்டுகளாய் "குடி அரசு" நாட்டிற்கு செய்து வந்த தொண்டைப்பற்றி இதன் வாசகர்களுக்கு நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

இந்த நாட்டின் சமுதாய உலகத்திலும், மத உலகத்திலும், அரசியல் உலகத்திலும் இந்த விசம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு ஒரு சிறு அளவாவது "குடி அரசு" தன்னை பொருப்பாளியாக்கிக் கொள்ளுவதில் யாரும் ஆக்ஷேபணையோ பொறுமையோ படமாட்டார்கள் என்றே கருதுகின்றோம்.

"குடி அரசி"ன் கொள்கைகளை ஆதிமுதற்கொண்டு இதுவரையில் கவனித்துவந்த எவரும் சற்று மேல்நிலையில் உள்ளவர்கள் அவற்றை "மிகவும் அதிதீவிரக் கொள்கை"யென்றும், "சாத்திய மற்றது"என்றும், "இது எந்தக்காலத்தில் நடக்கப்போகின்றது" என்றும், "கொள்கை சரி, போக்கு சரியல்ல" என்றும், "மிக வேகமாய் போகின்றது" என்றும், மற்றும் இதுபோன்ற பல மாதிரியாகவே சொல்லிவந்ததும், சற்று கீழ் நிலையில் உள்ளவர்கள் குடி அரசு கொள்கை "கடவுள் மறுப்பு" என்றும், "மதம் மறுப்பு" என்றும் சொல்லிவந்ததும், சற்று பணக்காரர்களாயிருப்பவர்களும் உயர்ந்தஜாதிக்காரரென்று எண்ணிக்கொண்டு இருப்பவர்களும், குடி அரசு கொள்கை, "கட்டுப்பாடு இல்லை: மேல்படி கீழ்படி இல்லை" "அத்து அடக்கம் இல்லை" என்று சொல்லி வந்ததும், பண்டிதக் கூட்டத்தாரில் உள்ளவர்கள் குடி அரசுக்கு "கல்வியில்லை, ஆராய்ச்சியில்லை, இலக்கண இலக்கியம் தெரியவில்லை, ஆதலால் என்ன என்னமோ கண்டதெல்லாம் எழுதுகின்றது, இதனால் சமயத்திற்கு ஆபத்து வந்து விடும். சமய ஞானங்களுக்கும் சமயாச்சாரியார்வாக்குகளுக்கும் ஆபத்து வந்து விடும்" என்று சொல்லிவந்ததும், அரசியலில் இருந்தவர்கள் 'குடி அரசு' அரசியல் ஞானமற்றது, அதன் பிரசாரம் தேசிய உணர்ச்சிக்கு விரோதமாயிருக்கின்றதே" என்று சொல்லி வந்ததும், மற்றும் இந்த மாதிரியாகவே தனித்தனி வகுப்பார்கள், பிரிவார்கள், சுயநலலட்சிய வாதிகள் முதலாகிய கூட்டத்தார்களால் குற்றம் சொல்லவும், எதிர் பிரசாரம் செய்து பாமர மக்களை குடி அரசுக்கு விரோதமாய் கிளப்பி விடவும் பல முயற்சிகள் நடை பெற்று வந்தது என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனாலும் இதுவரை மேல்கண்ட எந்த மறுப்புக்காரர்களிலும் எவராவது ஒருவர் குடி அரசின் எதாவது ஒரு குறிப்பிட்ட கொள்கையைப்பற்றிய அபிப்பிராயத்தை எடுத்துக்கொண்டு விவகாரம் சொல்லி தர்க்கமாடி மறுத்து நியாயம் சொன்னதாக ஏற்படவில்லை என்பதை நாம் எடுத்துக்காட்ட சிறிதும் தயங்கவில்லை.

ஆனால் குடி அரசு பிரவேசித்த துறைகள் சாதாரணமாய் வேறு யாரும் பிரவேசிக்கக்கூடாத அவ்வளவு கஷ்டமான துறைகளில் புகுந்து, வேலை செய்த முறையில், மேற்கண்ட சில்லரை சில்லரையான மறுப்புகளாவது, அதிருப்திகளாவது, முணுமுணுப்புகளாவது வராமலிருக்கும் என்று எதிர்பார்ப்பதும் நியாயமானகாரியமாகாது என்பதையும் யாவரும் ஒப்புகொள்ளுவார்கள் என்றே கருதுகின்றோம்.

குடி அரசு பிரவேசித்த துறைகளில் அதாவது,

1. பார்ப்பனர்.
2. அரசியல்.
3. மதம்.
4. கடவுள்.
5. வேதம், சாஸ்திரம், இதிகாசம், புராணம்.
6. சைவம், வைணவம் முதலிய சிறு சமயங்கள்.
7. காந்தீயம்.
8. பண்டைய ஒழுக்கங்கள், முறைகள், மூடப்பழக்கவழக்கங்கள்.
9. செல்வநிலைமைமுதலாளி-தொழிலாளி முறை.
10. ஆண், பெண் தன்மை

முதலிய துறைகளில் பிரவேசித்து அவைகளில் மக்களுக்குள் ஒரு பெரிய மனமாறுதலை உண்டாக்கியிருக்கின்றது என்பதை நாம் எடுத்துக்காட்டவேண்டியதில்லை. ஆனாலும் அதை சற்று விளக்குவதில் வாசகர்கள் சலிப்படையமாட்டார்கள் என்றுநினைக்கின்றோம். அதாவது,

1. பார்ப்பன விஷயம்.

இம்முதானது குடி-அரசு தோன்றுவதற்கு முந்தியே பார்ப்பனர்கள்விஷயத்தில்"பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார்" என்கின்றதான ஒரு கிளர்ச்சி இந்நாட்டில், யிருந்திருந்தாலும் அது தப்பான வழியிலேயே தப்பான உத்தேசத்துடனேயே பொது மக்களுக்கு பயன்படாத முறையில் போய்க் கொண்டிருக்கின்றது என்ற ஒரு குற்றம் சொல்லப்பட்டது யாவரும் உணர்ந்ததாகும். எப்படியெனில் இதுவிஷயமான முந்திய கிளர்ச்சியின் கொள்கைகள் எல்லாம் "பார்ப்பனீயம் நல்லது பார்ப்பனர்கள்தான் கெட்டவர்கள்" என்று சிலரும், மற்றும் ':வைதீகப் பார்ப்பனர்கள் யோக்கியர்கள், அரசியல் பார்ப்பனர்கள்தான் அயோக்கியர்கள்" என்று மற்றொரு சிலரும் க்ருதி இருந்த தோடு அக்கிளர்ச்சிக்காரர்கள் பெரிதும் உத்தியோகம், அரசியல் ஆகியவைகளில் உள்ள பார்ப்பனர்களை மாத்திரம் வெறுத்து பஞ்சாங்க, பரிசாரக, ஓட்டல்கார, கோவில் மணி அடிக்கிற முதலிய பார்ப்பனர்களை வணங்கி "சுவாமிகளே!" என்று கூப்பிட்டு அவர்கள் காலில் விழுந்து கும்பிட்டு அவர்களது காலைக்கழுவின தண்ணீரைக்கூட சில சமயங்களில் குடித்தும் வந்தார்கள்.

இந்த குணம் திருவாளர்கள் சர். பி. தியாகராய செட்டியார், பானகல் அரசர், சர். பாத்ரோ, தணிகாசலம்செட்டியார்முதலியவர்கள்உள்பட எல்லா பார்ப்பனரல்லாத தலைவர்கள் என்பவர்களுக்குள்ளும் ஒத்துழையாமை இயக்கத்தில் இருந்த திரு. திரு. வி. கலியாணசுந்திர முதலியார் போன்ற அரசியல்வாதிகளுக்குள்ளும் இருந்து வந்தது என்பது யாவரும் அறிந்ததே யாகும்.

ஆனால் குடி அரசு தோன்றிய பிறகே இந்தமாதிரி எண்ணமானது அடியோடு மாறிஇப்போது பொது ஜனங்கள் "எங்களுக்கு எந்தப்பார்ப்பனர்கள் மீதும் தனிப்பட்ட அதிருப்தியோ வெறுப்போ இல்லை" என்றும் "அவர்களது பார்ப்பன தர்மமும், பார்ப்பன சடங்கும், பார்ப்பன ஆதிக்க சம்மந்தமான முறைகளும்தான் எங்களுக்குப் பிடிக்கவில்லை" என்றும், "அவைகளை விட்டு விட்ட—பாராட்டாத பார்ப்பனர்களிடம் எங்களுக்கு ஆக்ஷேபணை இல்லை" என்றும் சொல்லப் புரப்பட்டதோடு பார்ப்பனீயத்தன்மை உள்ள பார்ப்பனரல்லாதாரிடமும் கூட இதுபோலவே வெறுப்பு ஏற்படும்படி செய்திருக்கின்றது.

ஆகவே இந்தத்துறையில் குடி-அரசு அஸ்திவாரத்திலேயே கையை வைத்து பார்ப்பனீயத்தை தொல்லையை என்றுமில்லாமல் போகும்படி வேலை செய்து வந்திருக்கின்றது —வருகின்றது—வரும்.

2. இதுபோலவே அரசியல் துறையிலும் குடி அரசு தோன்றுவதற்குமுன் அரசியலில் தலைப்பட்டிருந்த சிலஆட்கள் மீதும், அதன் பயனையனுபவிக்கும் சில ஆட்கள்மீதும் மாத்திரமே சிலருக்கு சந்தேகமும் பொறுமையும் கொண்டுஅரசியலின்மூலம்பிழைப்பை நடத்த உத்தேசித்திருக்கும் ஆட்களைத் மாத்திரமேபோட்டி போடுவதன் மூலம் அரசியல் துறையின் கிளர்ச்சிகள் நமது நாட்டில் நடந்து வந்தன. ஆனால் குடி அரசு தோன்றிய பின்னர்தான் "அரசியலிலுள்ள ஆட்களைப்பற்றி நமக்கு கவலையில்லை, அதன்அடிப்படையானகொள்கைகளைப்பற்றியே கவலை கொள்ள வேண்டும்' என்கின்ற உணர்ச்சியேற்பட்டு அரசியல் கொள்கைகளையே தலை கீழாய் மாற்றும்படியான நிலைமை உண்டாக்கியிருக்கின்றதுடன் அந்தப்படி அரசியல் காரரும் உணர்ந்து அவர்களையே பழைய கொள்கைகளைப்பற்றி பேசவெட்கப்படும்படி செய்து வருகின்றது.

மேலும் காங்கிரஸ் விஷயத்திலும் குடி அரசு தோன்றுவதற்குமுன் பொதுஜனங்களுக்குள் "காங்கிரசு நல்லது. அதை நடத்துகிறவர்கள்தான் கெட்டவர்கள்" என்கின்ற உணர்ச்சி இருந்தது மாறி குடி அரசு தோன்றியபின் "காங்கிரசே நாட்டின் நலத்துக்கு மோசமானது. அது உத்தியோகத்திற்கும், அதிகாரத்திற்கும், பதவிக்கும் விண்ணப்பம் போடும் தபால்பெட்டி" என்கின்ற உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி வருகின்றது.

3. மத விஷயத்திலும் குடி அரசு தோன்றுவதற்கு முன் மக்களுக்கு "மதமே பிரதானம்" என்றும் "இந்துமதமே உலகில் சிரந்தமதம்" என்றும் பொது மக்களுகும் இந்து மக்களுக்கும் இருந்துவந்த வெகுநாளைய உணர்ச்சிகள் மாறி இப்போது "இந்துமதம் என்பதாக ஒரு மதம் உண்டா? அதற்கு ஏதாவது கொள்கைகள் உண்டா?" என்கின்ற எண்ணமும் "மக்களுக்கு மதம் அவசியமா?" என்கின்ற எண்ணமும் "மதம் என்பதும் மற்றவியா

பாரங்களைப்போல்மக்களுக்குஒருஆதாரங்கள் அல்லவென்றும், புரா வியாபாரமும், மூட நம்பிக்கையு ணங்கள் என்பவைகள் கட்டுக் மானதல்லவா" என்கின்ற எண் கதைகள், ஒழுக்கத்திற்கும், உண் ணமும் ஏற்பட்டு மதத்தின் பே மைக்கும், இயற்கைக்கும் மாறு ரால் வாழ்க்கையும், பெருமையும் பட்ட, வெறுக்கத்தகுந்த புர அடைய கருதி இருக்கின்றவர் தகங்கள், அவை கீழ் மக்களால் கள் இடமும் மூடர்களிடமும், பெரிதும் தொடுக்கப்பட்டவை தவிர மற்றவர்களிடம் அதற்கு கள், இதிகாசங்கள்என்பவை நட யோக்கியதையே இல்லாமல் இரு ந்தவை அல்ல, மதிக்கத்தகுந்த க்கும்படி செய்துகொண்டு வரு வை அல்ல, பூஜிக்கத்தகுந்தவை கிறதுடன், மதத்தை வெகுகால அல்ல" என்று பண்டிதர்கள் மாய் அனுசரித்து பின்பற்றி வந் முதல் அனேக அறிவாளிக்ளும் தவர்களும் தாங்கள் இதுவரை பாமரமக்களும் வெளியில் தாரா எவ்வித பலனும் அடையாமல் ளமாய் சொல்லப் புரப்பட்டுவிட் வீண் காலத்தை அதில் செலவி டதோடு, அவைகளில் ஒரு சில ட்டுவிட்டோமே என்று தங்கள் வற்றை மாத்திரம் கலைகளுக்காக ஏமாந்த தன்மையைப்பற்றி வரு வும் அதாவது கவி அழகு, கற் ந்தும்படியாகவும் செய்துவந்திரு பனை அழகு, இலக்கண இலக்கிய க்கிறது.

4. கடவுள் விஷயத்திலும் குடி அரசு தோன்றுவதற்குமுன் அதைப்பற்றி மக்கள் வெகு பிர தானமாகக் கருதி வந்தவைகள் எல்லாம் குடி அரசு தோன்றிய பின்பு அதனால் ஏற்பட்ட பெ ரும் பெரும் கிளர்ச்சிகளின் பய னாய் சிலருகது "கடவுள் உண் டோ இல்லையோ என்பதைப் பற்றிய கவலையும், விசாரணை யும் அனுவசியம்" என்று கரு தும்படியாகவும், சிலருக்கு "மக் களுக்கு உலகவாழ்க்கை சுல பமாய் நடைபெறுவதற்கு கட வுள் உண்டு என்கின்ற உணர்ச்சி யுடன் இருப்பது நல்லது" என் கின்ற முடிவுக்கு வரும்படியாக வும் மற்றும் அனேகருக்குள் "கடவுளைப்பற்றிய கவலை என்" என்கின்ற எண்ணத்தையும் உண் டாக்கிவிட்டதுடன் "கடவுள் இல்லை என்று நினைத்துக்கொள்வ தால் மனிதன் உலகத்தில் வாழ் வதற்கு தகுதியுடையவனாகத் தகுந்த அறிவு, பொருப்பு, தன் னம்பிக்கை, குற்றம் உணர்தல் முதலிய அருங்குணங்கள் ஏற்ப டும்"என்கின்ற ஒருஉணர்ச்சியை யும் அனேகருக்கு உண்டாக்கி இருக்கின்றது.

5. வேதம், சாஸ்திரம், புரா ணம், இதிகாசம் என்பவைகளும் குடியரசு தோன்றுவதற்கு முன் அவற்றிற்கு இந்நாட்டில் இருந்த பெருமைகள் எவ்வளவுஎன்பதை நாம் எடுத்துச் சொலல வேண் டியதில்லை. ஆகவே அவ்வளவு பிரமாதமான மதிப்புகள் அவை களுக்கு இருந்த உணர்ச்சிகள் எல்லாம் இப்போது மாறி "வே தம், சாஸ்திரங்கள்" என்பவை கள், எல்லாம் ஒரு சாராரின் ஆதி க்கத்திற்கும், பிழைப்பிற்கும் ஏற் பட்டதென்றும், அவைகளுக்கு தாங்கள்கட்டுப்பட்டவர்கள் அல் லவென்றும், தங்களுக்கு அது வாழ்ந்தால் போதும் என்கின்ற நிலையில் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கின்றன.

7. அடுத்தாப்போல் திரு காந்தியவர்கள் விஷயமும் வேறு பல வழிகளில் "மகத்தான வெ ற்றி இருப்பதாக" பேசிக்கொள் ளப் பட்டாலும் அரசியல் சமூ தாய இயல் ஆகியவைகளைப்பற் றிய விஷயங்களில் அவரது அபி ப்பிராயங்களில் மிகவும் தாராள மாய் கண்டிக்கப்படத்தக்கதாகி விட்டது. அவருடைய கதர்விஷ யமும் சைவத்திற்கும், விபூதி, ருத் திராட்சத்திற்கும் என்ன சம்மந் தமோ அதுபோல் காந்திக்கும்- கதருக்கும் என்பதாக ஆகிவிட் டது. ஏதோ பார்ப்பனருக்கும் பார்ப்பனீயத்திற்கும் அவர் உற்ற துணையாய் இருப்பதாலும் மற்றும் அதுபோலவே தேசீ யத்தின் பேராலேயே வாழ்ந்து தீரவேண்டிய ஒரு கூட்டத் திற்கும் அவருடைய பெ யரை உச்சரிக்க வேண்டியது இன்றியமையாததாய்போய்விட் டதாலும், காந்தி காந்தி என்கி ன்ற ஒரு சத்தம் கொஞ்சம் ஊச லாடுகின்றதே தவிர மற்றபடி அவரிடம் இந்நாட்டுமக்களுக்கு சொந்தபக்தி எவ்வளவோ மாறி யிருப்பது தானாகவே விளங்கும்.

8. பழையபழக்கம்,வழக்கம் வார்சு பாத்தியம், பெரியோர் வார்த்தைகள் என்கின்றவைக ளின் மூலமாய் இருந்துவந்தமூ டப்பழக்க வழக்கங்கள் எல்லாம் அநேகமாய் இப்பொழுது வர வர காரணகாரியம் சொல்லி பகு த்தறிவிற்கும், அனுபவத்திற்கும் ஒத்திருக்கின்றதா என்று பார்க் கின்ற நிலைக்கு வந்துவிட்டது.

9. கடைசியாக பணக்காரர் களுடைய தொல்லை எதிர்பார் த்த அளவுக்கு ஒழியவில்லை. ஆனா லும் அவர்களுக்கும் இரங்குமு கம் ஏற்பட்டு, சிறிதுசிறிது பொ துஉணர்ச்சியில் அவர்களுக்கு மதிப்பு குறைந்துவிட்ட தென் றே சொல்லுவோம். தொழி லாளிகளின் மேல் முதலாளிக ளுக்கு இருந்துவந்த ஆதிக்கமும் மறைந்து, தொழிலாளிகளுக்கு வர வர தைரியமும், முதலாளி களுக்கு வர வர பயமும் ஏற்பட் டுக்கொண்டு வருகின்றது. ஆனா லும் வரபோகும் வருஷத்தில் தெளிவாய் காணக்கூடிய அளவு க்கு இந்தத்துறை இன்னமும் எவ்வளவோ தூரம் முற்போக் கடையும் என்கின்ற தைரியம் இருக்கின்றது என்கின்ற நம்பிக் கைக்கு இடம் இருக்கின்றது.

10. ஆண், பெண் தன்மை. இந்தத்துறையானது குடி அரசு தோன்றுவதற்குமுன் மக்கள் வாயில் பேசுவதற்கும், மனதில் நினைப்பதற்கும் அஞ்சக்கூடிய விஷயங்கள் எல்லாம் குடி அரசு தோன்றியபின் அடியோடுமாறி, ஆணுக்கும், பெண்ணுக்கும் எந்த விஷயத்திலும், எவ்வித வித்தி யாசமும் இல்லை என்கின்ற உணர் ச்சியையும், ஆண்களுக்கு கட்டுப் பட்டு அடங்கி பெண்கள் இருப் பது இருவருடைய சுயமரியா தைக்கும் குறைவு என்றும், பெ ண்ணுக்கு ஆண் கட்டுப்பட்டு, அடங்கி நடப்பது பெருமையும், நாகரீகமும், முறையும் என்கின்ற தமான உணர்ச்சியும் ஏற்பட்டு விட்டது.

ஆகவே இத்யாதி துறைகளில் குடி அரசின் தொண்டு பலனளி த்திருக்கின்றது என்று திருப்தி யுடனேயே சொல்லுகின்றோம்.

ஆனால் சென்ற வருஷம் அதா வது குடி அரசின் ஆறுவது வரு ஷ ஆரம்ப மலரின் தலையங்கத் தில் கண்டதுபோலவே 6-வது வருஷம் முழுவதும் குடி அரசு க்கு மூந்திய வருஷங்கள் போ ன்ற செல்வாக்கு பெருக்கம் இரு ந்தது என்றுசொல்லுவதற்கில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளு கின்றோம். ஆனாலும் சுயமரியா தை இயக்கத்தின் கொள்கைக ளுக்கு சென்ற ஐந்து வருஷத் தைவிட ஆறுவது வருஷத்தில் தான் ஒருமுக்கியபதவியும்,கௌ ரவமும், பொதுமக்கள் ஆமோ திப்பும், "இனிமேல் அதை எதிர் ப்பதோ குற்றம் சொல்லுவதோ முடியாத காரியம்"என்று,அதன் எதிரிகளாய் இருந்தவர்கள் எல் லாரும் எண்ணி, எப்படியாவது அதன் பெயரைச் சொல்லிக்கொ ள்ளக்கூடிய சௌகரியம் நமக கும் வந்தால் தேவலாம் என்று கருதும்படியான ஒரு நிலை மை ஏற்பட்டது என்கின்ற விஷயத்தில் நமக்கு சிறிதும் ஐய மில்லை.

ஆனால் ஏழாவது ஆண்டின் எதிர்கால நிலையைப்பற்றி எழுது வதில், அது ஆறுவது ஆண்டைப் போலவே இவ்வருஷ வேலைத் திட்டமும் சற்று கஷ்டமானதா யிருந்தாலும், பத்திரிகை முற் போக்கைப்பற்றி ஆறுவது வரு ஷம் போல் தடைப்படாது என் பதுடன் அதிக முற்போக்கடை யும் என்கின்ற தைரியமும், நம் பிக்கையும் நமக்கு உண்டு. ஏனெனில் இந்த ஒரு வரு ஷத்திய நமது பிரசாரம் மக்க ளுக்கு ஏற்படுத்தி இருக்கும் ஒரு உணர்ச்சியும், அரசியல் கிளர்ச்சியிடம் சிலர் வைத்திரு ந்த நம்பிக்கை ஏமாற்றமடைந்து

பலனும், இவ்வருஷம் நடக்கப் போகும் அரசியல் (காங்கிரஸ்-காந்தி) பிரசாரமும் மற்றும் இரண்டொரு விஷயங்களும் மக்களுக்கு அறிவை ஊட்டி உண்மையை விளகித் தெளிவைக் கொடுக்கும் என்கின்ற நம்பிக்கை நமக்கு தாராளமாய் இருக்கின்றது.

## ஆத்மா

ஆத்மா, என்னும் விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கும் நமது நண்பர்கள் பலர் இது ஒரு தத்துவ விசாரணை விஷயம். இதைப்பற்றி எழுதவோ, பேசவோ வேண்டிய அவசியம் சமுதாய சீர்திருத்தக்காரருக்கு எதற்கு? சுயமரியாதைக்காரர்கள் அனுவசியமாய் கண்ட கண்ட விஷயங்களிலெல்லாம் தலையிட்டு சீர்திருத்தத் துறையைப் பாழாக்கிக் கொள்ளுவானேன்? என்று கூசாமல் பேசுவார்கள். ஆனால் இப்படிப்பட்ட நண்பர்கள் சமுதாயசீர்திருத்தம் என்பது என்ன என்பதாக சரிவரஉணராதவர்கள் என்று நினைத்துவிட்டு நம் பாட்டுக்கு நாம் மேலே செல்லக்கூடிய நிலையிலேயே இருக்கின்றோம்.

ஏனெனில் சமுதாய சீர்திருத்தம் என்றால் எதோ அங்கும் இங்கும் இடிந்துபோன-சுவண்டு போன—ஆடிப்போன பாகங்களுக்கு சரண்டி, கூறுகுத்தி, மண்ணைக்குழைத்து சந்துபொந்துகளை அடைத்துப்பூசி மெழுகுவது என்றுதான் அநேகர் கருதி இருக்கின்றார்கள். ஆனால் நம்மைப்பொருத்தவரை நாம் அம்மாதிரி துறையில்உழைக்கும் ஒருசமுதாயசீர்திருத்தக்காரரல்ல என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். மற்றபடி நாம் யார்?என்றால் என்ன காரணத்தினால் மக்கள் சமுதாயம் (மக்கள் சமுதாயம் என்றால் உலக மக்கள் சமுதாயம்) என் சீர்திருத்தப்படவேண்டிய நிலைமைக்கு வந்தது? என்பதை உணர்ந்து உணர்ந்தபடி மறுபடியும் அந்நிலை ஏற்படாமல் இருப்பதற்கு நம்மால் இயன்றதைச் செய்யும் முறையில் அடியோடு பேர்த்து அஸ்திவாரத்தையே புதுப்பிப்பது என்கின்றதான தொண்டைமேற்கொண்டிருக்கின்றபடியால் சமுதாய சீர்திருத்தம் என்பதைப்பற்றி மற்றமக்கள் அனேகர் நினைத்திருக்கிறதற்கு நாம்மாறுபட்டகொள்கையையும்,நிட்டத்தையும் செய்கையையும்உடையவராய்க்காணப்படவேண்டிய நிலைமையில்இருக்கின்றோம்.

இதனாலேயே தான் உலகத்தில் உலகமக்கள் உண்டு என்பதை இல்லை என்றும், சரி என்பதைத் தப்பு என்றும், தேவை என்பதை தேவை இல்லை என்றும், கெட்டது என்பதை நல்லதென்றும், நல்லதென்பதை கெட்டதுஎன்றும், காப்பாற்றப்படவேண்டும் என்பதை ஒழிக்க வேண்டும் என்றும், மற்றும் பலவாறாக மாறுபட்ட அபிப்பிராயத்தை கூறுவோராக—செய்வோராகக் காணப்படவேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் நம்போன்ற இப்படிப்பட்டவர்கள் உலகில் நல்ல பெயர் சம்பாதிப்பதும் மதிக்கப்படுவதும் பழிக்கப்படாமல்-குற்றம் சொல்லப்படாமல் இருப்பதும் அருமை என்பது மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும். உதாரணமாக இதுவிஷயமாய் நாயனார் அவர்களது குறளில்

"உலகத்தார் உண்டென்பதில் என்
பான்வையத்தலையா வைக்கப்படுவான்" என்று ஒரு குறள் காணப்படுகின்றது. இதன் பொருள் அக்குறளில் காண்கின்றபடிபார்த்தால் "உலகத்தாரால் உண்டு என்று சொல்லப்பட்டதை இல்லை என்று சொல்லுபவன் உலகில் பிசாசாக மதிக்கப்படுவான்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இதில் இருந்து உலகத்தார் என்பது 'யாரைக்குறிப்பிடுகின்றது? "உலகத்தார் என்றால் உயர்ந்தோர்" என்று சொல்லுவதாலும்உயர்ந்தோர் என்பதற்கு லக்ஷணமென்ன? பிசாசு என்றால்அர்த்தமென்ன? வையத்தலைகை என்பதற்கு திருவள்ளுவர் கருத்தென்ன? அவர் பிசாசைநம்பி இருந்தாரா? என்பனபோன்றபலதர்க்கவிவகாரங்கள் அக்குறளுக்குப் பொருள் கூறுவதில் சிலருக்கு ஏற்பட்டாலும்அதன் அதிகாரத்தினது தலைப்புப்படி அக்குறளின் கருத்து "அநேக மக்களால் உண்டுஎன்று ஒருதப்பட்ட ஒரு விஷயத்தை இல்லை என்று சொல்லுபவன் அறிவில்லாதவன்" என்று பொருள்படுவதாகவே வைத்துக்கொள்ளுவோம். இப்படி இருந்தாலும் இதிலிருந்து அவன், அதாவது உலகத்தார் உண்டு என்பதை இல்லையென்று சொல்லுபவன் எதனால் அறிவில்லாதவன் என்று கண்டு பிடிக்கவேண்டியது இங்கு முக்கியமாகின்றது. எவ்வாறெனில், உண்டு என்பதை இல்லை என்று சொல்லுகின்றதற்காக அவன் கொண்ட கருத்து குற்றமுடையதா? அல்லது பலர்-அநேகர்-மற்றவர்கள்-எல்லோரும் உண்டு என்று சொல்லப்பட்ட ஒரு அபிப்பிராயதிற்கு, அது எப்படி இருந்தாலும் கண்மூடித்தனமாய் பின்பற்றாமல் தனது சொந்த அபிப்பிராயத்தை துணிந்து சொல்லவந்துவிட்டானே அந்த அடங்காத-கீழ்படியாத ஊருடன் ஒத்துப்போகாத-ஆணவமானதன்மையுடைய அச்செய்கை குற்றமுடையதா? என்று யோசிக்கவேண்டியதுஇங்கு முக்கியமானகாரியமாகும். ஆகவே உலகத்தார் உண்டு என்பதை மறுத்துக்கூறியதற்கு ஆதாரமாக அவன் கொண்ட அபிப்பிராயம் குற்றம் என்று ஏற்படுமானால் இங்கு உலகத்தார் சொல்லுவதெல்லாம் சரியானதாய்த்தான் இருக்கும் என்று பொருள் கொண்டு நாயனார் சொல்லி இருக்கவேண்டும். அல்லது அப்படி உலகத்தார் அபிப்பிராயத்துக்கு விரோதமாக அபிப்பிராயப்பட்டதை ஒருவன் தனித்து எடுத்துச்சொல்லுவதுஎன்கின்றதன்மைகுற்றமானதென்று கருதி நாயனார்சொல்லி யிருந்தால் மனிதனுக்கு அவனவனபிப்பிப்பிராயத்திற்கு சுதந்திரமில்லை என்றவள்ளுவர் கருதி அப்படிச்சொல்லி இருக்கவேண்டும்.ஆகவே அக்குறளானது உலக மக்களில் பொதுவாக பெரும்பான்மையோரையோ அல்லது அறிவாளிகளாகிய பெரும்பான்மையோரையோ யாரைக்குறிப்பில் வைத்துச்சொண்டு நாயனார் சொல்லி இருந்தாலும் அக்குறள் பொதுவில் குற்றமுடையது என்பதே நமதுபிப்பிராயம்.

ஆதலால் ஆத்மா என்கின்ற விஷயத்தைப்பற்றி யார் என்ன சொல்லி இருந்தாலும்—உலகமே என்ன கருத்துக்கொண்டிருந்தாலும் அதை லக்ஷியம் செய்யாமலேயே நாம் நம்முடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகின்றோம்.

அதாவது, ஆத்மா என்பது ஒருவஸ்து அல்ல, பொருள் அல்ல. அதுசுதந்திரம், அறிவு உணர்ச்சி முதலாகிய வைகளை உடையதல்ல என்பதோடு அது ஒரு பொருளும்அர்த்தமற்றவார்த்தைஎன்றேநமக்குகாணப்படுகின்றது. இங்லீஷ், தமிழ் அகராதிகளில் பார்த்தாலும் ஆத்மா என்பதற்கு இங்லீஷில் சோல் (Soul) என்றும், சோல் என்றால் அறிவு-யோசனை-ஆசை பிறக்கும் இடம், ஊக்கம், உள் சக்தி, மனிதவர்க்கம், உயிர் என்கின்ற பொருள்கள் காணப்படுகின்றன.

தமிழ் அகராதிகளிலும் அதுபோலவே ஆத்மா அல்லது ஆன்மா என்றால் காற்று, அறிவு, உடல், உயிர், பிராணன், மூளை முயற்சி, பிரம்மன், சுபாவம் என்கின்ற பொருள்கள் காணப்படுகின்றன. இவைகளில் இருந்து அதாவது இந்த வார்த்தைகளில் இருந்து விளக்கப்பட வேண்டியது ஒரே ஒரு வார்த்தைதான் ஆகும். பிராணன் அல்லது உயிர் என்பதற்குத்தான் அர்த்தம் விளங்கவேண்டி இருக்கின்றது. மற்ற வார்த்தைகள் எல்லாம தானே அர்த்தம் புரியும் படியாய் இருக்கின்றன.

ஆகவே பிராணன் என்பதுஎன்ன என்று பார்த்தால் அது ஒரு காற்று, பிராணவாயு இருதயத்தில் இயங்கிக்கொண்டிருப்பது என்பதாகத்தான் அகராதிகளில் காணப்படுகின்றது.

இது இக்வனமிருக்க இப்போது பழக்கத்தில் ஆத்மா என்றால் அது சரீரத்திற்குள் இருக்கும் ஒரு நித்திய வஸ்துவென்றும் அது சூக்ஷும வஸ்துவென்றும், அதற்கு பிறப்பு,இறப்புஇல்லை என்றும் அது மனிதன் இறந்த பின்பு வெளிப்பட்டு மறுபடியும் சரீரம்எடுப்பது என்றும்,மற்றும் அது சரீரத்தில் இருக்கும்போது செய்த காரியங்களுக்காக அதன் பயனை சரீரத்தை விட்டுப் பிரிந்த பின்பு கடவுள் மூலம் அனுபவிக்கின்றதென்றும் மற்றும் எத்தனையோ விதமாக அதைப் பற்றி பல மதங்களில் பல விதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றதாய் அறிகின்றோம்.

உதாரணம் என்னவென்றால் அது மனிதனுக்குள் இருந்து மனித சரீரத்திற்கு வேறாய் "என் சரீரம்" என்று சொல்லுவதன் மூலம் சரீரத்திற்கும் வேறுபட்டதென்றும் சொல்லுவது போன்ற எதேதோ பிரிவுகள்காட்டி அந்த ஆத்மா சரீரம் விட்டுப்பிரிந்த பிறகு அடையவேண்டிய-அடையக்கூடிய பலன் ஆகியவைகளைப் பிரதானமாகக் கருதி அதற்கு தகுந்தபடி அதற்காகவே மனிதன் வாழவேண்டியது அவசியமென்று சொல்லப்பட்டு அந்த மாதிரி ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்மந்தத்தையே மதங்கள் போதிக்கின்றன வென்றும் அதற்காகவே உலகத்தில் மனிதகோடிகளுக்கு மதம் அவசியமென்றும் சொல்லப்படுகின்றது.

ஆகவே கிறிஸ்து, பௌத்தம், இஸ்லாம், இந்து ஆகிய மதங்களில் பௌத்த மதம் தவிர மற்ற 'முக்கியமான' மூன்று மதங்களும் ஏறக்குறைய ஒரே கொள்கையில்தான் ஆத்மாவையும் ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்மந்தத்தையும் பற்றிய விஷயங்களை வைத்துக் கொண்டு இருக்கின்றன.

நிற்க மேற்கண்ட ஆத்மாஎன்பதில்

1. மனித ஆத்மா மாத்திரம்தான் மேற்கண்ட மதசம்மந்தங்களுக்கு அதாவது கடவுளுக்கும் ஆத்மாவுக்கும் உள்ள சம்மந்தத்திற்காக ஏற்பட்ட மதங்களுக்கு சேர்ந்ததா? அல்லது புல், பூண்டு, அணுஜெந்து, ஊர்வன, பறப்பன, நகர்வன, நீர்வாழ்வன முதலிய ஜெந்துக்களின் ஆத்மாக்கள் என்பனவைகளும் அதில் சேர்ந்தவைகளா?

2. இத்தப்படி மனித ஆத்மாவுக்கும் மற்றய ஆத்மாக்களுக்கும் வித்தியாசங்கள் உண்டா? அல்லது எல்லாம் ஒரே தன்மையானதுதானா?

3. மனித ஆத்மா மனித சரீரத்தில் இருக்கும்போது அது செய்தவினைக்கு ஏற்ற பலனை சரீரத்தை விட்டுபிரிந்தபிறகு அனுபவிக்கின்றது என்பதுபோலவே மற்றப் புல், பூண்டு ஊர்வன, பறப்பன, நடப்பன நீர் வாழ்வன அணு ஜந்துக்கள் முதலியவைகளின் ஆதமாக்களும் சரீரத்தைவிட்டு'விலகியபிறகு அவைகளின் வினைக்குத்தகுந்த பலனை அனுபவிக்கின்றனவா?

4. இந்த ஆத்மாக்களில் மேல் கண்ட ஜந்துக்கள் ஒவ்வொன்றுக்கும் சிறிது சிறிது வித்தியாசங்கள், குணங்கள், தன்மைகள் முதலியவைகள் அதாவது புலன்வித்தியாசங்கள் அறிவுவித்தியாசங்கள், உள்ளதுபோலவே மனிதஜீவனும்மற்ற ஆத்மாக்கள்போலவே இருப்பதோடு புலன் அறிவுவிஷயத்தில் சற்று கூடுதல் வித்தியாசம் மாறுதல் முதலியவைகள் உடையஜந்துவா?

5. உலகத்திலுள்ள மேல் கண்ட ஜந்துக்கள் எல்லாம் வேறு. மனிதஜெந்து மாத்திரம்வேறு என்று சொல்லும்படி வேறுபாட்டை உடையஜந்துவா மனிதன்?

என்பனபோன்ற இன்னும் பல கேள்விகளும் சந்தேகங்களும் ஒருபக்கமிருந்தாலும், மனிதன் என்பதையே நாம் என்ன என்பதாக முதலில் ஆராய்வோம். மனிதன் என்பதின் தன்மை விளக்கம் ஆங்கிலத்தில் (Self) என்பதான தான், நான், என், என்கின்ற குறிப்பு உணர்ச்சிகளேயாகும். அக்குறிப்புகளில் ஒரு மனிதன் தன்னை நான் என்ற சொல்லிகொள்ளும் போதும் எனக்கு என்னுடைய என்று சொல்லிக்கொள்ளும்போதும் எற்படுகின்ற உணர்ச்சி எப்படிப்பட்டது? அது எப்படி உண்டாகின்றது? என்பதை கவனித்தால் ஆத்மஞ் தன்மை என்பது தானாகவே விளக்கும்.

அதாவது ஒரு மனிதன் நான் என்பதில் அந்த மனிதசரீரத்தின் எந்தப் பாகம் தனித்து இருந்து நான் என்கின்றது? அல்லது அந்த சரீரம் மொத்தமுமா? அல்லது சரீரமில்லாமலா? சரீரத்தில் எதுவரை நான் என்ற உணர்ச்சி இருக்கின்றது? சரீரத்தில் இருந்து எது போய்விட்டால் நான் என்பது போய்விடுகின்றது? என்பதுமுதலாய் கேள்விகளுக்கு சமாதானம் கிடைத்தாலொழிய நான் என்பது விளங்காது.

இந்தமுறையில் நான் என்பதை கவனிக்கும்போது என் சரீரம், என்உயிர், என் ஆத்மா, என் ஆவி, என் ஜீவன், என்மனம், என் அறிவு, என் புத்தி, என்எண்ணம், என் சித்தம், என்பிராணன், என்பிராணவாயு, என்சூக்ஷும சக்தி, என்கடவுள், என் ஆண்டவன், என்பதுபோன்ற அதாவது மனிதன் அல்லது ஆத்மா அல்லது ஜீவன் என்பவைகளாகிய எது எதை நாம்மனிதனுக ஆத்மாவாக இருக்கக்கூடும் என்று கருதுகின்றோமோ அவைகளை எல்லாம் தன்னில் இருந்து தனிப்பிரித்து அவைகள்கூட என்-என்பதைச் சேர்த்துபேசுவதைப் பார்க்கின்றோம். ஆகவே என்(நான்) வேறு,மேற்கண்டமற்றவைகள்எல்லாம்வேறு என்பதாக நினைக்கும்படியாக இருக்கின்றது. ஆதலால் இவைகள் எல்லாம் மனிதனுடைய தன்மை உணர்ச்சி ஆகிய நான் என்பது அல்ல என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

இந்த நிலையில்மனிதனுகிய நான் என்னும் தன்மை உணர்ச்சி செய்த காரியங்களுக்கு ஆக நான் அல்லாத அதாவது என் ஆத்மா என்பதாகிய ஒரு வஸ்துவோ ஒருஜீவனே ஒருசக்தியோ ஆகிய சூக்ஷமஜீவன என்பது எப்படி அந்தப்பயனை அனுபவிக்க முடியும்? அனுபவிப்பதுதான் எப்படி நியாயமாகும்? நான் செய்தகாரியத்திற்கு என் ஆத்மாவைதண்டிப்பதோ கண்டிப்பதோசன்மானகிமாயவைகளை கொடுப்பதோ? எப்படி கடவுளின் நீதியாகும்? என்கின்றதான விஷயம் மிகவும் யோசிக்கத்தக்கதாகும்.

இந்தமாதிரியான பிரச்சினைகளுக்கு சமாதானம் சொல்லுபவர்கள் பெரிதும் ஒரேசமாதானம் தான் சொல்லுவார்கள். அதென்னவென்றால் "இம்மாதிரியான பிரச்சினை வெகு ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேயே பலராலும் கேட்கப்பட்டாய்விட்டது. இவை சாதாரணமனிதர்களுக்கு புரியும்படியானவைகள் அல்ல, சொன்னாலும் உங்களைப்போன்றவர்களால் கிரகித்துக்கொள்ள முடியாது. வேண்டுமானால் வைஷ்ணவம், ஞானவெட்டி, வாகிஷ்டம், கீதை வேதாந்தசாரம், தத்துவதீபிகை முதலியவைகளைப்பாருங்கள். அதற்குமேற்று பல புத்தகங்கள் வேண்டும், என்பதுபோன்ற பதிலே சொல்லிவிடுவார்கள்.

சாதாரணமாகவிருப்பவர்களும் விஷயாமானவர்களும் அனேகர் இந்த விஷயத்தில் கவலைப்படாமல் சீர்ப்பு நாளை உத்தேசித்து நாங்கள் இந்த சரீரத்துடனேயே ஒரு காலத்தில் மறுபடியும் எழுப்பப்பட்டு எதோ ஒருபலனை அடையக்கூடும் என்கின்ற அளவோடுவிட்டுவிட்டார்கள். ஆதலால் அவர்களிடம் அதிகமாய்ச்சொல்ல புரட்டோஇடையாது. பெளத்தர்கள். "ஆத்மா என்பதே இடையாது நித்திய வஸ்து என்பதே இடையாது" என்பதாக முடிவு கட்டிவிட்டார்கள். ஆதலால் அவர்களுக்குள்ளும் இம்மாதிரியான கொழுமைகள் இடையாது.

ஆனால் இந்து மதக்காரர்கள் என்பவர்கள் மாத்திரம், ஆத்மா, சூக்ஷம சரீரம், மோக்ஷலோகம் நரகலோகம், மறுபிரப்பு, அதிலும் பல விதமாய் அதாவது புல்லாய்ப் பூண்டாகி என்றுபடிப்படியாய்எற்பட்டது என்றும் இவைகள் எல்லாவற்றையும்விட மற்றொருவிதமாய் அதாவது ஆத்மாக்கள் பிதுர்தேவதைகள் ஆதி பிதுர்லோகம் என்பதில் இருந்துகொண்டு பின்னோகள் சந்ததியாகள் முதலியவர்களால் இந்த உலகத்தில் பிராமணருக்கு கொடுக்கப்படுவதை அவர்களது மந்திர சக்தியின் மூலமாய் பெற்று அடைந்து வாழ்ந்துவருகின்றார்கள் என்றும் இன்னும் பலவிதமாய் சொல்லப்படுகின்றன. ஆகவே இவை தானுகவே ஒன்றுக்கொன்று முரண்படுவதாலும் அதைப்பற்றி முன்னமேயே பலபல சமயங்களில் வேறு வேறு வியாசங்களில் எழுதப்பட்டதாலும் இதை நிறுத்திவிட்டு அடுத்த வியாசத்தில "நான்" அல்லது Self தன்மை என்பதைப்பற்றி விவரிப்போம்.

---

## ஒரு நல்ல சேதி.

### ஈரோடு முனிசிபாலிடி.

ஈரோடுமுனிசிபாலிடியானதுகொஞ்ச காலத்திற்கு முன் இருந்து வந்த பொருப்பற்றதும், நாணயமற்றதுமான நிர்வாகத்தின் பயனுய் செல்வங்களை பாழாகி கண்டபடி கண்டவர்களால் ஒழுங்குசெய்யும், பண்டங்களும் கையாடப்பட்டு கடைசியாக கடனில் மூழ்கி சம்பளம் கைகயறு பட்டுவாடா செய்யவும் சக்தியற்று இந்த மாகாண பாப்பர் முனிசிபாலிடியிலும் ஒழுக்க ஈனமான முனிசிபாலிடியிலும் முதல்நெம்பராய் இருந்துவந்ததானது மாறி, தற்கால சேர்மென் ஜனாப்.கே. எ. கேஷத்தாவுத் சாயபு அவர்கள் காலத்தில் நாணயமும், பொருப்பும் பெற்று செல்வ நிலைமையிலும் சற்று நன்னிலை அடைந்து இப்போது கல்வி முனிசிபாலிடிகளில் ஒன்று என்று சொல்லத்தக்க பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது. அவரது சொந்த செல்வாக்கினால் ஈரோடு முனிசிபாலிட்டியால் கல்வி இலாக்காவுக்கு கொடுபடவேண்டிய ரூ. 44,000-ம் கவர்ன்மெண்டார் தள்ளிக்கொடித்து வஜா செய்து கொண்டார்கள். மற்றும் அவரது சொந்த பிரயத்தனத்தினால் ஜில்லா போர்டுக்கு கொடுபடவேண்டிய 2, 3 வருஷ பாக்கியாகிய சுமார் 25,000 ரூபாயும் ஒருவிதத்தில் தள்ளிக்கொடித்து ஜில்லா போர்டிலும் நிரந்தரமாய் வருஷம் 4000, 5000, ஈரோடு முனிசிபாலிடிக்கு லாபம் இருக்கும்படியாய் செய்யப்பட்டாய் விட்டது.

மற்றும் ஈரோடு முனிசிபாலிட்டிக்கு தாங்க முடியாத பாரமாகவும் பெருநஷ்டமாகவும் இருந்துவந்த வரவுகள் (அதாவது முன்னிருந்த சேர்மென்மார் பாதிரிகள் தாட்சண்ணியத்திற்காக தலையில் போட்டுக்கொண்ட ஒரு உபத்திரவம்) ஆனது இப்போது கோவை ஜில்லா போர்டாரால் எற்றுக்கொள்ளப்பட்டுவிட்டதால் அவ்விஷயத்தில் ஈரோடு முனிசிபாலிடிக்கு வருஷம் 7,000, 8,000 வீதம் மீதி எற்படும்படியாக ஆகிவிட்டது.

கன்ட்ராக்டர்கள் தொல்லைகளால் கவுன்சிலர்களுக்குள் அடிக்கடி நிகழும் எதிர்பாராத மனவருத்தங்களும் இனிமேல் நேராமல் இருப்பதற்கு முனிசிபல் வேலைகளை டிபார்ட்மெண்டு மூலமாகவே செய்வது என்பதன் மூலம் இனி அவ்விதம் எற்படாமல் இருப்பதற்கும் எற்பாடாகிவிட்டது. அனேகமாய் பல வழிகளிலும் ஜனாப், கேஷத்தாவுத் சாயபு அவர்கள் காலத்தில் ஈரோடு முனிசிபாலிடி நல்ல நிலைமை அடையும் வழியில் திரும்பிவிட்டது என்றே சொல்லலாம். ஆனால் மறுபடியும் அரசாங்கமும் பொது ஜனங்களில் ஒரு கூட்டமும் முன் கடந்து கொண்டதுபோல் பொருப்பற்ற தன்மையில் நடந்துகொள்ளாமல் யோக்கியமாய் நடந்துகொண்டால் ஈரோடு முனிசிபாலிடி கோயமுத்தூர் முனிசிபாலிடிக்கு உள்ள நல்ல பெயரில் அடைவதிப் பெயராவதுகாங்கக்கூடும்.

கடைசியாக ஈரோடுமுனிசிபாலிடியின் கடன் கஷ்டங்கள் ஒருவாறு தீர்க்கப்பட்டதற்கும் அதன் கஷ்ட நிலைமை ஒருவாறு நிவர்த்தியானதற்கும் கோவை ஜில்லா போர்டு பிரசிடெண்டு நிலவான் பகதூர் சி. எல். இரத்தினசபாபதி முதலியார் அவர்களின் உதவி மிகுதியும் போற்றத்தக்கதும் நன்றிபாராட்டத்தக்கதுமாகும். ஈரோடு முனிசிபாலிடியில் அவரது ஞாபகச் சின்னம் எக்காலத்தும் இருப்பதற்கு ஈரோடு பொது ஜனங்களோ, முனிசிபாலிடியாரோ முயற்சிக்கவேண்டியது அவர்களது முக்கிய கடமையாகும்.

கடைசியாக ஒன்று. அதாவது ஈரோடு மின்சார சக்திவினியோக விஷயமாய் அந்த நிர்வாக பொருப்பையும் உரிமையையும் சர்க்காரார் ஈரோடு முனிசிபாலிடியாருக்கு கொடுக்காமல் வேதோ ஒரு வெள்ளைக்கார கம்பெனிக்கு கொடுத்தது மிகவும் அக்கிரமமும் அநியாயமுமான காரியமாகும். அதுமாத்திரமல்லாமல் இத்தப்படி செய்ததற்கு அரசாங்கத்தார் சொல்லும் காரணம் மிகவும் அதிருப்தியுமானதாகும்.

அதாவது, "ஈரோடு முனிசிபாலிடியின் நிர்வாகம் மிகவும் ஒழுங்கினமாகவும் போக்கியப் பொருப்பற்று நடந்து கடன்கார முனிசிபாலிடியாய் இருப்பதால் மின்சார சக்திநிர்வாக சுதந்திரப் பொருப்பை அதற்குகொடுக்க முடியவில்லை" என்று சொல்லிவிட்டார்கள். ஒழுங்கினமாகவும், யோக்கியப் பொருப்பில்லாமலும் யாரோ கடந்துகொண்ட காரியத்திற்கு ஆகவும் அப்படிப்பட்ட காலத்திற்பொதுஜனங்களுக்கவுன்சிலர்களும்எவ்வளவோ தூரம் சர்க்காராரை பிரவேசிக்கும்படி கேட்டுக்கொண்டகாலத்திலும் வேண்டுமென்றே அலக்ஷியமாய் இருந்துவிட்டு இப்போது அதே குற்றத்தை ஈரோடு முனிசிபாலிடியார் மீது சுமத்துவதானது சிறிதும் ஒழுக்கல்ல என்றுதான் சொல்லவேண்டும்.

இந்த மின்சார நிர்வாக சுதந்திரத்தை ஈரோடு முனிசிபாலிடியாருக்கு கொடுக்காமல் ஒரு வெள்ளைக்கார தனி வியாபாரக் கம்பெனிக்கு கொடுத்ததால் ஈரோடு முனிசிபாலிடிக்கு வருஷம் 1-க்கு 20,000-க்கு மேலாகவே 30,000 ரூ. வரை கூடவரக்கூடியதாதாயம்நஷ்டமாகிவிட்டது. யூனிட் 1-க்கு 0-0-6 வீதம் வாங்கும்மின்சாரத்தை அக்கம்பெனியார் நமக்கு யூனிட் 1-க்கு 5-அணாவுக்கு விற்கப்போகின்றார்கள். சோயமுத்தூர் முனிசிபாலிடி விஷயத்திலும் சர்க்காரார்இப்படித்தான் செய்யஇருக்கின்றார்கள். ஆனால் அந்த சேர்மென் திரு. சி. எல். ஆர். அவர்களின் செல்வாக்கால் கோயமுத்தூர் முனிசிபாலிடி சமாளித்துக் கொண்டது. ஆனால் ஈரோட்டு முனிசிபாலிடிக்கு அத்தப்பயமான செல்வாக்கு இப்போது இல்லையானாலும் ஈரோடு பொது ஜனங்கள் தங்கள் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் காட்டி தைரியமாய் எதிர்த்து நின்றால் ஈரோடும் வெற்றி பெறலாம். அதாவது "ஈரோடு முனிசிபாலிடி மூலமாய் அல்லாமல் வேறு வழியில் வரும் மின்சாரம் எங்களுக்கு வேண்டாம். நாங்கள்யாரும் தனிவியாபாரக்கம்பெனிக்காரர்களிடம் மின்சாரம் வாங்கி உபயோகித்துக்கொள்ள மாட்டோம்" என்று உறுதியாய் சொல்லிவிட்டால் போதுமானதாகும்.

அந்தப்படி செய்தால்ஈரோடு முனிசிபாலிடிக்கு குறைந்தது வருஷத்தில் 20000 ரூ வருஷம் மீதியாகும்

---

## கூகலூரில் சுயமரியாதைத் தாண்டவம்.

கோபிசெட்டி பாளையத்திற்கு 5-வது மைலிலுள்ள கூகலூர் கிராமத்தில் அவ்வூர் பிரபல மிராசுதாரரான, திரு. K. K. சுப்பணகவுண்டர், 10 தினங்களுக்கு முன் தமது தோட்டத்துக்கிணற்றில், அவ்வூர் பள்ளர் முதலிய தாழ்த்தப்பட்ட வகுப்பாரைத் தண்ணீர் எடுத்துக்குடிக்கவும், குளித்தல், முதலிய பலவசதிகளையும் செய்து கொள்ளும்படி செய்து தாமும் தமது சுற்றத்தாருடன் அக்கிணற்று நீர்ப்பிரயோசமையலுக்கு எடுத்துப்போகிறார். அந்த தினத்திலிருந்து அக்கிணற்று நீர் மிகவும் தூய்மையடைந்ததாக அவராலும், அவரதுசுற்றத்தாராலும் குதூகலத்துடன் போற்றப்பட்டு வருகிறது. ஆனால் அவ்வூரில் சிலர் திரு. K. K. சுப்பணகவுண்டர் செய்தது பெரிய அக்கிரமம் 'என்றும் சாதி போயிற்று. மதம் போயிற்று. தங்கள் கவுண்டயத்தனம் (Autocratic atmosphere of the Vellals) போயிற்று. இனி கூகலூரிலுள்ள கோவில்களில் திரு. சுப்பண கவுண்டரும் அவரைச்சார்ந்தோறும் நுழைதல் கூடாது' என்றும் கூசசல் போடுவதோடல்லாமல் அவர் வீட்டு ஆட்களையும் தோட்டத்து ஆட்களையும் கலைத்து நிறுத்திவிட்டார்கள் ஆனால் திரு. சுப்பணகவுண்டர் அவர்கள் இவற்றைச் சிறிதும பொருட் படுத்தாமல் அதிக சம்பளத்தில் உடனே புதிய ஆட்களைச் சேர்த்துக்கொண்டார். இனி அவர் தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற் குத்தளரா ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் உழைத்து வருவதாக உறுதி கொண்டுவிட்டார்.

இது காரணமாககோபி தாலுகா போர்டு பிரசிடெண்டாயிருந்த திரு. S. முத்துவேலப்ப கவுண்டரும் தாமுமுடைய தோட்டத்து இணறுகளிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பாரை சாதி வேறுபாடில்லாமல் தண்ணீர் எடுக்கும்படி தெரிவித்து விட்டதோடு திரு. சுப்பண்ண கவுண்டருடன் கலந்து மும்மறமாக வேலை செய்து வருகிறார். சமீபத்தில் கோபி

செங்கல்பட்டு திரு. எம். வேதாசல முதலியார்
முதலாவது சுயமரியாதை மகாநாட்டின் காரியதரிசி

வக்கீல் திரு S. P. கிருஷ்ணையர் தலைமையின் கீழ் இளைஞர் கூட்டம் ஒன்று கூகலூருக்குப் புறப்பட்டுப்போய் திரு சுப்பணகவுண்டருக்குத்தங்களது உள்ளக்கிளர்ச்சியைத் தெரிவித்து சாதிக்கொடுமை சமூகசீர்திருத்தம் முதலியவற்றி சொற்பொழிவு நிகழ்த்தி அவ்வூர் கோவில்களில் தாழ்த்தப்பட்ட சகோதரர்களுடன் நுழைவார்களென்று தெரிகிறது.

"டம்டம்புல்லட்"

## தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாடு.

மேமாதக் கடைசியில் மாயவரத்தில் தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாடு நடைபெறும் வரவேற்புக் தலைவர், மகாநாட்டுத்தலைவர், இவர்களை தெரிந்தெடுக்கும், இடம், தேதி இவைகளைப் பற்றி முடிவு செய்யவும் மேமாதம்—முதல் வாரத்தில் மாயவரம் 'இம்பீரியல் பிரஸ்' காரியாலயத்தில் வரவேற்புக்கழகக் கூட்டம் நடை பெறும்.

காரியதரிசிகள்.

சென்னை மாகாண முதல் மந்திரி திவான் பகதூர் கனம் பி. முனுசாமி நாயடு பி. ஏ:, பி. எல். எம். எல். சி. அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார்!

மகாநாட்டுக்கு வரும்பிரதிநிதிகளுக்குச் சென்றமுதல் மகாநாட்டில் செய்யப் பட்டதுபோல் தங்குமிடம், சாப்பாடு முதலிய வசதிகள் டாக்டர் திரு- வரதராஜுலு நாயுடு அவர்களது அசோக விலாஸ் பங்களாவில் செய்யப் பட்டிருக்கிறது.

மகாநாட்டிற்கு வரும்பிரதிநிதிகள் நான்கு வேளை சாப்பாட்டிற்காக இரண்டணா (டெலிகேட்டீஸ்) செலுத்தி டிக்கட் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம் என வரவேற்புக் கமிட்டியார் அறிவிக்கின்றார்கள்.

## பஞ்சமா பாதகங்கள்,

"பஞ்சமா பாதகங்கள்" என்னும் ஒருபுத்தகம் தன் ஆசிரியரான திரு. அ. அய்யாமுத்து அவர்களால் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டதைபார்வையிட்டோம்.

அப்புத்தகத்தில் பஞ்சமா பாதகமெனப்படும், கொலை, களவு, பொய், கள், காமம் என்னும்ஐந்து விஷயங்களும் உலகில் எந்த சந்தர்ப்பங்களில் உண்டாகின்றன? அவை என்? யாரால்உண்டாக்கப்பட்டது? அது உலக வழக்கில் எப்படி நடைபெறுகின்றன? இன்ன இன்ன விதத்தில் இன்ன இன்ன காரணங்களனால் நடைபெரும் பஞ்சமா பாதகங்கள் குற்றமுடையனவாகுமா?

உண்மையில் நடைபெரும் பஞ்சமாபாதகங்கள் குற்றமாய்க் கருதப்படுகின்றனவா? என்பவைகளையும் இன்றையநிலையில் அதாவது சமூக, மத, அரசியல் நிலையில் பஞ்சமா பாதகம் என்பது நிகழாமல் இருக்க முடியுமா என்றும் அவை உண்மையில் நடக்கப்படாமலும் மற்றவருக்கு துன்பம் இழைக்காமலும் இருக்கவேண்டுமானால் எப்படி உலகசமுதாயக் கொள்கை இருக்கவேண்டும் என்பதையும் விவரித்து விளக்கி எழுதப்பட்ட புஸ்தகமாகும். இப்புத்தகம் கிரௌன் 1-8, சைஸில் 50 பக்கங்களுக்கு மேல் கொண்டதாகும்.

விலை அணா 2.

தனிப்பிரதி வேண்டுவோர் 0-2-6 அணா ஸ்டாம்பு அனுப்பப்படவேண்டும்.

கிடைக்குமிடம்:—
அ. அய்யாமுத்து,
புஞ்சை புளியம்பட்டி
கோயமுத்தூர் ஜில்லா.

---

னும் பல சதி வழக்குகள் நடந்த வண்ணம் இருக்கின்றன. நாற்றுக்கணக்கான புரட்சிக்காரர்கள் தலைமறைவாக வைக்க வேண்டியிருக்கிறது. இவர்களில் பெண்களும் பலர் இருக்கின்றனர். ஆறு பேர்களுக்கு மேல் தூக்கு மேடையை எதிர் நோக்கி நிற்கின்றனர். இவர்க ளெல்லோரது கதியும் என்ன? தூக்கு தண்டனையை ஏற்று, எதோ அதிருஷ்ட வசமாய் பொது ஜனங்களின் அபாரமான அநுதாபத்தையும் பெற்றுநிற்கும் லாகூர் சதிவழக்கு எதிரிகள் மூவர்தான புரட்சி இயக்கத்தின் மூலபலம் என்று எண்ணிவிடவேண்டாம். எங்களது கதியைப் பற்றி எங்கள் கட்சி கவலைப்படப் போவதில்லை. உண்மையில், நாங்கள் உயிர் துறப்பதால்! எங்கள் தண்டனை குறைவதனால் ஏற்படக் கூடியதை விட அதிகமான நன்மையே விளையும்."

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ல் என்ன இருகின்றது உம்ம தலை புருடை? நீர் பிராமணஞ்யி ருந்தும் உமக்கு மூளையே கிடை யாது. உங்கள் படுக்கை வீட் டில் சூத்திராள் படம்—அதாவது ராஜாக்கள் ஜமீன்தாரர்கள் மந்தி ரிகள் முதலியவர்கள் படம் எதா வது சுவற்றில் தொங்கவிட்டு இருந்ததோ.

அய்யர்:- அதிகப்பிரசங்கித்தனம் எல்லாம் பேசாதீர். உண்மையை ச்சொல்லுமே, மற்றபடி அத்தீர் மானத்தின் இரகசியம் தான் என்ன?

அய்யங்கார்:- பொதுரோட்டில் இன்று யார் நடப்பதில்லை? பொ துச் சந்தையில் இன்று யார் போ வதில்லை? பொது ரயில்வண்டியில் இன்று யார் ஏறுவதில்லை? கச்சே ரி நாடககொட்டாய் வீதி மீட்டி ங்கு இவைகளில் யார் நுழை வதில்லை. அதுபோலவே பொ துக்கிணறுகள் என்பதில் நகரங் களில் கிணறு கிடையாது. வாய் க்கால், நதி, இல்லாவிட்டால் பெ ரிய குளம், இல்லாவிட்டால் தண் ணீர் குழாய். இன்னும் வாவர எல்லாப்பட்டணங்களிலும் தண் ணீர் குழாய் ஏற்பட்டு விடப் ப்போகின்றது. ஆதலால் கிணற் றைப்பற்றிய தீர்மானத்தால் பய மில்லை. நகரங்களில் உள்ள தெருக்களில் எல்லாம் இப்போ தும் யாரும் போய்க்கொண்டு தான் இருக்கிறார்கள். கிராம ங்களில் மாத்திரம் சில தெ ருக்களில் போவதில்லை. அங்குள்ள பிராமணர்கள் பயத்தால் கீழ் ஜாதிக்காரர்கள் நாளைக்கும் காந்தி போகச்சொன்னாலும்போ காமாட்டார்கள். போனாலும் ஒ ன்றும் முழுகிப்போகாது. எனெ ன்றால் மற்றவீதிகளுடன் அதை யும் சேர்த்து விடலாம். ஆதலால் இத்தீர்மானத்தினால் மதம் எங்கு போய்விட்டது? இதனால் எல் லாம் பிராமணருடைய உயர்வு எங்கு எப்படி போய்விடும் என் று கருதுகின்றீர்?

அய்யர்:- பின்னே எதினால்தான் பிராமணர் உயர்வும் அதை ஆ தாரமாய்க்கொண்ட மதமும் இ ருக்கின்றது? என்கிறீர்.

அய்யங்கார்:- அது உம்ம புத்தி க்கு இதுவரை படாதது எனக்கு அதிசயமாகவே இருக்கின்றது:

அயயர்:- அது எது என்று ச ற்று சொல்லித்தான் காட்டுமே, பார்க்கலாம்.

அய்யங்கார்:- பிராமணரும் அ வர்கள் மதமும் காப்பாற்றப்படு வது முக்கியமாய் கோயில்களா லேயேயாகும்,

அந்த இடத்தில் ஏதாவது மாறு தல் ஏற்பட்டால்தான் பிராமண ருக்கும் வருணச்சிரமத்திற்கும் ஒரு சமயம் ஆபத்து ஏற்பட லாம். ஆகையால் அதில் கை வைக்க எப்படிப்பட்ட வர்களுக்கும் சிறிதும் இடம்கொ டுக்க நம்மிட பெரியவாள் ஒப்ப மாட்டார்கள். அது 'மகாத்மா" காந்தியாலுலும் சரி, அவர்கள் பாட்டனார்களான சுவாமிகள் ஆச் சார்ய சுவாமிகளாலுலும் சரி ஒன் றும் நடக்காது. ஆகையால அந்த இடம் (கோவில் மாத்திரம்)வெகு ஜாக்கிரதையாகவே காப்பாற்றப் பட்டு வருகின்றது. (சேரமாதேவி குரு குலத்தைப்பாருமே. குரு குலத்தையாவது நம்மவாள் அடியோடு ஒழித்துவிட்டார்க ளே ஒழிய வருணச்சிரமத்தை விடவில்லையே) காச்சி காங்கிர சில் கோயிலைப்பற்றிய பேச் சே கிடையாது. ஜாதி வித்தி யாசத்தை ஒழிப்பதைப்பற்றிய பேச்சோ சிறிதும் கிடையாது தெரியுமா?

அய்யர்:- அப்படியா.

அய்யங்கார்:- என்ன அப்படியா என்று கேட்கின்றீர் உங்கள் பிர மஸ்ரீ சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் தானே அதை நன்றாக விளக்கி இருக்கிறார்- அதாவது "காச்சி காங்கிரஸ் தீர்மானத்தில் கோவில் களைப்பற்றிய பேச்சு இல்லையாத லாலும் (அது விஷயாலோசனை கமிட்டியில் வந்தும்) அதை சேர் க்கக்கூடாது என்று மனமார த ள்ளிவிட்டதினாலும் மேலும் காங் கிரஸ் காரியகமிட்டி யாருக்கும் கோயிலைப்பற்றிய பிரஸ்தாபிக்க இஷ்டமில்லை என்று நமக்கு தெ ரியவந்ததினாலும் பொது உரிமை யைப்பற்றிய தீர்மானத்தை திரு த்தவேண்டிய அவசியமில்லை" எ ன்று விளக்கி இருக்கின்றாரே நீர் பார்க்கவில்லையா? இது என்தெரி யுமோ? இந்த தீர்மானத்தை ஆ தாரமாய் வைத்துக்கொண்டு யா ராவது தென்னாட்டில் கோவில் பிரவேச சத்தியாக்கிரகம் ஆரம் பித்துவிட்டால் என்ன செய்வது என்றுதான் விளக்கினார்.

அய்யர்:- காங்கிரஸ் தீர்மானத் தின் கருத்து இந்தப்படிதான் எ ன்று உமக்கு எப்படித் தெரியும்.

அய்யங்கார்:- எப்படி தெரியும் என்று கேட்கிறீர்? சொல்லுகி றேன் கவனமாய் கேளும். காங்கி ரஸ் காரியக் கமிட்டியார் "இத்தீ ர்மானங்கள் அவசரமாய் பாசாக்க ப்பட்டதாக பலர் கருதுவதால், அதில் ஏதாவது விலக்குவதோ மாறுதல் செய்யவேண்டியதோ அவசியம் உண்டா" என்று ஆங் காங்குள்ள ஜனத்தலைவர்கள் தே சபக்தர்கள் தியாகிகள் ஆகிய வர்களுக்கு அனுப்பி அபிப்பிராய ம்கேட்டிருந்தார்கள். என் கோவி ல்இதில் சேர்க்கப்படவில்லை என் பது நன்றாய் விளக்கப்பட்டும் என்று அந்தமுறையில்நமது தெ ன்னாட்டு ஜனத் தலைவரும் தியா கியும் தேசபக்தருமான நமது பிரமஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யர் வாளுக்கும் அந்த சர்க்குலர் வந் தது. அவர் அதாவது அய்யர் வாள் ஒரே அடியாய் தீர்மானத் தின்சூக்ஷுமத்தை தைரியமாய் உ டைத்துவிட்டார். அதாவது கா ங்கிரஸ் காரியக்கமிட்டி சார்பாக காரியதரிசிக்குதந்தி கொடுத்தார். அவர்களும் சரி என்று ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

அய்யர்:- அதன் கருத்து அப்ப டியல்ல என்று மறு தந்தி ஒன் றும் வரவில்லையா?

அய்யங்கார்:- இல்லை. அனறியும் எப்படி வரும்? ஜாக்கிரதையாகத் தானே தீர்மானம் செய்யப்பட்டி ருக்கின்றது. அப்படி ஏதாவது மாறுவதாயிருந்தால் பிறகு அத் தீர்மானத்திற்கே ஆபத்து வந்து விடாதா?

அய்யர்:- அப்படியா இவ்வளவு புத்திசாலித்தனமாக அத்தீர்மா னம் செய்தவர்கள் யார்?

அய்யங்கார்;- யார் என்று கே ட்கின்றீர். தென்னாட்டில் சே மாதேவி குருகுலத் தகாரின் போது ஈ. வெ. ராமசாமி நாயக் கனும் எஸ். ராமநாத பிள்ளையும் சேர்ந்து "பிறவியில் ஜாதி வித்தி யாசம் பாராட்டக்கூடாது என்ப து சாங்கிரசைப் பொருத்தவரை யாவது அழுலில்கொண்டுவா வே ண்டும்" என்று தமிழ் நாடு காங் கிரசில் ஒருதீர்மானத்தை பாசாக் கினவுடன் காங்கிரசிலிருந்து ரா ஜினமா கொடுத்தும் மற்றும் அந் த பிரசாரத்திலிருந்து விலகியும் இருந்து அந்தமாதிரி தீர்மானம் கொண்டுவந்த ஆளுகள் அதாவ து ராமசாமி ராமநாதன் ஆகியவ ர்கள் காங்கிரசில் இருக்கமுடியா மல் காங்கிரசை விட்டுப்போன பி றகு காங்கிரசில் வந்து சேர்ந்தார் களே அவர்கள்தான்.

அய்யர்:- அப்படியா அப்படிப் பட்டவர்கள் யார்? அவர்கள் பெ யர்கள் என்ன?

அய்யங்கார்:- பிரமஸ்ரீகள் C. ராஜகோபால ஆச்சாரியார் M. K. ஆச்சாரியார், Dr. T. S. S. ராஜன் அய்யங்கார், Dr. T. V. சாமிநாதசாஸ்திரியார், N. S. வரதாசாஸ்திரியார், K. சந்தான அய்யங்கார், மட்டப்பாரை R. S. வெங்கிடராமையர், எ. வைத்திய நாதய்யர், எக்கியேஸ்வர சர்மா T. C. சங்காய்யர்,

இன்னும் சில பிரமஸ்ரீகள். அ தாவது இப்பொழுது தென்னாட் டில் காந்தீயம் காங்கிரசயம்என் று பிரசாரம் செயகின்றார்களே இந்த மகான்கள் தான்.

அய்யர்:- அப்படியா? சரி. இத னால் சுயமரியாதை இயக்கம் விழு ந்து விடுமா?

அய்யங்கார்:- விழுகாமல் என் னசெய்யும்? நம்முடைய பெரிய வாள் சூக்ஷிகளில் இருந்து சுயமரி யாதைக்காரர் தப்புவதென்றால் இலேசான காரியமா?

அய்யர்:- சுயமரியாதை இயக் கம் கடவுள் ஜாதி மதம் ஆகிய வைகள் மாத்திரம் அல்லாமல் பணக்காரன்—ஏழை, ஆண்— பெண், முதலாளி—தொழிலாளி ஆகிய விஷயத்திலும் கையை வைத்து பெரிய கலக்கம் கலக்கு கின்றதே. அதனால் இப்போது தொழிலாளிகள் எல்லாம் நிமிர் ந்து பேசுகின்றார்கள். பெண் கள் வீட்டில் ஆண்களுக்கு அட ங்கி நடப்பதில்லை. சம்பள ஆட் கள் எல்லாம் முதலாளிகளை மதிப் பதில்லை. மற்றும் இதுபோன்ற பல உணர்ச்சிகளைக் கிழப்பிவிட்டு தொல்லை விளைக்கின்றார்களே, பரிகாரிமுதல்கொண்டு வாப்பா, போய்யா என்கின்றனே. இவை கள் எல்லாம் எப்படி பழையபடி சரிப்படும்?

அய்யங்கார்:- இதெல்லாம் சு. ம. இயக்கக்காரர்களின் சமதர் மக் கொள்கை பிரசாரத்தின் உப த்திரவம் என்பதாக எனக்கும் தெரிகின்றது. ஆனால் அது வும் சீக்கிரம் அடங்கிவிடும்.

அய்யர்:- எப்படி அடங்கி விடும்?

அய்யங்கார்:- காந்தி இருக்கும் வரை நமக்கு பயமில்லை. அவர் பகத்சிங் வகையறா தாக்கப்பட் டதும், மற்றும் அந்த இயக்கத் தை ஒழிக்கவேண்டும் என்னுற எண்ணத்துடன் அதை காட்டிக் கொடுத்து தான் இராஜப்பிரதி நிதியிடம் ராஜி பேசினதும் மற் றும் இந்தியாவின் ஆகியில் சுதேச ராஜாக்களை வெல்லாம் கொண்டுவந்து போட்டு அவர் களுக்கும் இதில் ஆதிக்கம் வாங் கிக்கொடுத்ததும் முதலாகிய கா ரியங்கள், இந்தமாதிரி சமதர்மக் கொள்கைகளை எல்லாம் வெகு சீக்கிரத்தில் அடக்கிவிடும். ஆ கையால் நாம் பிழைக்கவேண்டு மானால் சௌவமாய் வாழவேண் டுமானால், பழம் எற்பாட்டுப்படி வ ருணச்சிரமம், ஜாதி வித்தியாசம் ஆண்பெண் வித்தியாசம் முதலா னி தொழிலாளி வித்தியாசம் இவைகள் நிலைத்து இருக்க நாம் பாடுபடாமல் பூதேவர்களாலும்,

சுவாமிகளாகவும் இருந்து பிழைக்கவேண்டுமானால் மகாராஜன் காந்தி நன்றாய் இருக்கவேண்டும். அவருக்கு மிகுதியும் கௌரவமும் செல்வாக்கும் நாம் சம்பாதித்துக் கொடுக்கவேண்டும். அவர் செல்வாக்கு குறைந்தால் இந்தியா சுயமரியாதைக் கொள்கையின் கீழ்தான் இருக்கமுடியும். ஆகையால் காந்தியைக் காப்பாற்ற வேண்டும். அவர்தான் இப்போது நமக்கு (பிராமணர்களுக்கு) நல்ல ஆயுதமாக இருக்கின்றார் தெரியுமா?

அய்யர்:- அப்படியா! காந்தி வாழ்க! மகாராஜன் காந்திவாழ்க!! மகாத்மாகாந்தி வாழ்க!!! எங்கள் அப்பன் காந்திவாழ்க!!!!

அய்யங்கார்:- அப்படிச் சொல்லு. இனி நாம் பிழைக்கவேண்டுமானால் இதுதான் நமது மந்திரமாய் இருக்கவேண்டும்.

அய்யர்:- யார் யாரோ காந்தி ஒழிக! காந்தியம் ஒழிக!! காங்கிரஸ் ஒழிக!!! என்கின்றார்களாமே?

அய்யங்கார்:- அதைப்பற்றி நாம் ஒன்றும்பயப்படவேண்டியதில்லை. அதையெல்லாம் காந்தியே பார்த்துக்கொள்ளுவார். அந்த மாதிரி ஆசாமிகளை ஒழிப்பதற்கு நம்ம காந்தி சர்க்காரைப்பிடித்து அடக்கி விடுவார்.

அய்யர்;- ஜவர்லால்நேருகூட அந்த கட்சியைச் சேர்ந்தவராமே.

அய்யங்கார்:- எந்தக்கட்சியை?

அய்யர்:- காந்தி ஒழிய என்று சொல்லுகின்ற மக்கள் கொள்கையை சேர்ந்தவர்களாமே.

அய்யங்கார்:- அதெல்லாம் சும்மா சொல்லுவது. அவர் என்றால் மாத்திரம் பிராமணரல்லவா? மழைக்கால் இருட்டானதும் மந்தி (குரங்கு) கொம்பு விட்டுக் கொம்பு தவரிப்பாயுமா" ஜவர்லால் எவ்வளவு தீவிரமாய் பேசினாலும் பிராமணத் தன்மையை மாத்திரம் விட்டுக்கொடுத்து விடுவார் என்று நீர் கனவிலும் எண்ணிவிடவேண்டாம். உதாரணம் வேண்டுமானால் சொல்லுகிறேன் கேள்.

அய்யர்:-சொல்லும்பார்ப்போம்.

அய்யங்கார்:- ஜவர்லால் ஆங்கிலம் படித்தவர்.குழந்தைப்பருவத்திலேயே சீமைக்குச் சென்று அங்கேயே படித்து வளர்ந்தவர். ருஷியாவுக்குக்கூட போய் வந்தவர். மூடப்பழக்க வழக்கங்கள், மதப்பித்து ஆகியவைகள் ஒழிய வேண்டுமென்றும், அவை ஒழியாமல் சுயராஜ்யம் வராது என்றும்சொன்னவர். இதெல்லாம் உமக்குத் தெரியுமா? தெரியாதா?

அய்யர்:- நன்றாய்த் தெரியும். அதனால்தான் நான் அவர் நமக்கு எதிரியாயிற்றே என்று பயப்படுகின்றேன்.

அய்யங்கார்;-போமய்யாபோம் உமக்கு சூட்சம அறிவு இருந்தால் அல்லவா இந்த சூக்ஷ்மம் எல்லாம் அறியக்கூடும்.

அய்யர்:- நீர்தான் சூக்ஷ்ம அறிவுக்காராராயிருமே. சங்கதி என்ன சொல்லும்.

அய்யங்கார்:- ஜவர்லால் நேரு மேல் சொன்ன இவ்வளவு இருந்தும் எலும்பைக் கொண்டுபோய் கங்கை ஆற்றில் போட்டு மாதா மாதம் பிண்டம் போட்டால் அந்த எலும்பின் ஜீவன் மோக்ஷத்திற்கு போவார் என்று சொல்லி அவர் தகப்பனார் எலும்பை க்கங்கையில் போட்டு பிண்டம் கொடுத்தாரே அது உமக்குத்தெரியுமா?

அய்யர்:- ஆம் தெரியும்.

அய்யங்கார்:-இதிலிருந்தே பார்த்துக்கொள்ளுமே. வீரர் ஜவர்லால் நேரு நமது பிராமணத்தன்மையை விட்டுக்கொடுத்து விட்டார்களா என்பதை.

அய்யர்:- ஓ! ஓ!! அப்படியா? இந்த இரகசியங்கள் எல்லாம்எங்களுக்குத் தெரிவதேயில்லை.

நாங்கள் சுயமரியாதை இயக்கத்தை கண்டதும் பயந்து விட்டோம்.

அய்யங்கார்:- ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை. காந்தியும் காங்கிரசும் உள்ளவரை சுயமரியாதை இயக்கமோ, நாஸ்திக இயக்கமோ, போல்ஸ்விக் இயக்கமோ, இன்னும் சமதர்மம், பொது உடமை, இயற்கைத்தன்மை முதலிய இயக்கங்களோ எதுவும் பிராமணனை ஒன்றும் செய்தவிடாது என்று தைரியமாயிரும்.

அய்யர்:- வட்டமேஜை மகாநாட்டில் என்ன என்னமோ சுதந்திரம் வரப் போகுதாமே அதிலேதாவது ஆபத்து வந்து விட்டால்?

அய்யங்கார்:- அதைப்பற்றியும் பயப்படவேண்டியதில்லை. அங்கு சென்று நமது ஜீவாதாரத்தைக் காப்பாற்றத்தானே காந்தியை "சத்தியாக்கிரக இயக்கம் தோற்றுப்போகும். பிறகு வருணாசிரமத்திற்கும் இந்து மதத்திற்கும் ஆபத்து வந்து உமக்கும் அவமானம் ஏற்பட்டு விடும்" என்று நம்ம சீனிவாச சாஸ்திரிகளும் இராஜகோபாலாச்சாரிகளும் பேதிக்குக் கொடுத்து இயக்கத்தை எப்படியாவது நிறுத்தி விட்டு அவரை வட்டமேஜை மகாநாட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்து விட்டார்கள். அதுமாத்திரமல்ல. இந்து ராஜாக்களையும் கொண்டு வந்து நம்மிட பெரியவாள் இந்த சீர்திருத்தத்தில் புகுத்திவிட்டார்கள். ஆதலால் அது விஷயத்திலும் பயப்படவேண்டியதில்லை. இன்னும் அநேக சங்கதிகளிருக்கின்றன.சாவகாசமாய்சொல்லுகிறேன். இப்போதே மூன்று பக்கத்திற்கு மேலாகிவிட்டது. யாரும் கோபித்துக்கொள்ளக் கூடாது.

---

## புதிய முனிசிபல் எலக்ஷனைப் பற்றிய சில குறிப்புகள்.

திருத்தப்பட்ட சென்னை முனிசிபல் ஆக்டானது இவ்வருஷம் ஆகஸ்டு மாதம் 26-ந்தேதி முதல் அமுலுக்கு வருகிறது. இந்தத்தேதிக்குள் எல்லா முனிசிபாலிட்டிகளிலும் புதியகௌன்சிலர்களின் தேர்தல் பூர்த்தியாகி, அவர்கள் பெயர்கள் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும். சிறுபான்மையான ஆதி திராவிடர், மகமதியர், கிறிஸ்தவர்களுக்கும் ஸ்திரீகளுக்குங்கூட இனி சர்க்கார் நியமனம் என்பது இல்லை. இவர்களுக்குப் பிரத்தியேகமான ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. குறிக்கப்பட்ட சில வார்டுகளில், பொதுவாக, இவர்களுக்கும் எலெக்ஷன் நடைபெறவேண்டும் என்று நகர வாழ்வு சமுதாய சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

---


சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட்,
சிங்கப்பூர்.


---


## 1920-ம் வருஷத்திய தமிழ் சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்.

1931ம் வருஷம் வரையில் திருத்தி அமைக்கப்பட்ட புதிய தமிழ் பதிப்பு.

உண்மையிலேயே ஒவ்வொரு கிராம நகரவாசிக்கும் தேர்தல்களில் ஈடுபடுபவர்களுக்கும் மிகவும் முக்கியமானது.

இச்சட்டமானது, இப்பொழுது நமக்கு கொடுத்திருக்கும் ஸ்தலஸ்தாபனங்கள் விஷயமாகவுள்ள ஒவ்வொரு டிஸ்டிரிக்ட்டு போர்டு, தாலூகா போர்டு, (முன் யூனியன் போர்டுகளாகயிருந்து இப்பொழுது பஞ்சாயத்தென மாறுபட்டுள்ள) பஞ்சாயத்து போர்டு முதலியவைகளில் ஸ்தானம் வகித்தும், இனி ஸ்தானம் வகிக்கப்போவருமான ஒவ்வொரு மெம்பர்களுக்கும் அதிக முக்கியமானது.

ஓட்டுரிமையுள்ள ஒவ்வொருபட்டாதாரர்களுக்கும், ஜமீன்தார், சுரோத்திரியதார், மிராசுதார் முதலியவர்களுக்கும், ஒவ்வொரு லோக்கல் போர்டுகளில் உள்ள உத்தியோகஸ்தர், ஊழியர் முகலியவர்களுக்கும் லோகல்போர்டு கண்டிராக்டர்களுக்கும், போர்டு ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கும் காப்பி கிளப், சாப்பாடு ஹோட்டல் முதலியவைகளைப் பரிபாலிப்பவர்களுக்கும், பாக்டரி, ஓர்க்ஸ்ஷாப்பு, ஆலை, மில், தோல் ஷாப்பு, காளவாய் முதலியவைகளின் சொந்தக்காரர்களுக்கும், மோட்டார் பஸ், லாரி முதலியவைகளை உபயோகப்படுத்துபவர்களுக்கும், சினிமா முதலிய நாடக கொட்டகை முதலியவைகளின் சொந்தக்காரர்களுக்கும் இச்சட்டம் அதிகமுக்கியமானது.

வியாபார விஷயமாக லைசென்ஸ், பர்மிஷன் தொழில் வரி முதலிய வரிகள் விதித்து வசூலிக்கும் மார்க்கமும் பொது ஜனங்களின் சௌகரியத்தைக்குறித்தும் இச்சட்டத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

உயர்ந்த காகிதம். நல்லபதிப்பு. கெட்டியான பயிண்டு.

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபா 2,

விலாசம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்படமுடியும்.

உண்மையாகவே, உலகமானது பெண்களால்தான் புதிய முறையில் அமைக்கப்படவேண்டியிருக்கின்றது. அவர்கள்தான் அதைத்திருத்தியமைக்கவேண்டும். அவர்கள்தான் அதை உல்லாசப்படுத்தவேண்டும். அவர்கள்தான் அதற்கு சந்தோஷத்தை யுண்டாக்கவேண்டும். பெண்களின் மூலவல்து அல்லது அம்சம் எனக்கூறப்படுவதை பிரபலமாகாதபடி அடக்கிக்கொள்ளுவதற்கு பெண்கள் உதாரவளித்து அவ்வாறு இடங்கொடுத்தலினால்தான் கல்வியும், அறிவும், வித்தைகளும், கைத்தொழில்களும், நீதிகளும், சாஸ்திரங்களும், சன்மார்க்கங்களும், மதங்களுக்கும் சமூகங்களுக்குமிருக்கக் கூடிய அன்யோன்ய சகவாசமும் வளர்ந்து கொண்டே வராமல் தடைப்படுத்தப்பட்டுக்கொண்டுவரப்பட்டது. ஆகையால் மீண்டும் அவைகளுக்குப் புத்துயிர் அளிப்பது பெண்களுடைய முக்கியக்கடமையாகின்றது.

பெண்கள் தங்களுடைய சுதந்திரத்தையும், சுயேச்சையையும் நிச்சயமாயும், உறுதியாயும் அடைந்தேதான்தீர வேண்டும். ஆனால் இந்த அவர்களுடைய சுதந்திரத்திலும் சுயேச்சையிலும் தாங்கள் தாய்மார்களாகலாமா என்பதும், அப்படித்தாய்மார்களாவதாகயிருந்தால் எத்தனைக்குழந்தைகளைத்தான் பிரசவிக்கவேண்டுமென்பதும் அதிமுக்கியமாகும். ஆடவர்களின் விருப்பங்களும், செய்கைகளும் எம்மாதிரியாகவிருந்த போதிலும் அவைகளைக்கொஞ்சமேனும் கவனிக்கவே கூடாது. ஏனெனில், கர்ப்பத்தடையென்பது பெண்களுடைய விஷயமேயாகும். அது தங்களுக்குறித்தானதுதான் என ஆடவர்கள் கூறுவதற்குள், அவ்விஷயம் பெண்களுடையதேயாகும்.

ஒவ்வொரு குழந்தையையும் பிரசவிக்கும்பொழுதெல்லாம், பெண்கள்தான் தனியாகவே மரணவாயிலுக்குட்புகுந்துசெல்லுகின்றார்கள் பெண்கள் இவ்வாறு ஒவ்வொரு பிரசவங்களிலும் மரணவாயிலுக்குட் புகுந்துதான் வெளிவர வேண்டுமெனக் கூறுவதற்கு ஆடவர்களுக்கும், அரசாங்கத்திற்கும் எத்தகைய உரிமைகளும் கிடையாதோ, அவ்வாறே தாங்கள் இன்னும் அதற்கு கட்டுப்பட்டு, அதை அனுபவித்துக்கொண்டும்தான் வரவேண்டுமா என்பதை நிச்சயிக்கக்கூடிய உரிமையும் பெண்களுக்குத்தானிருக்கின்றது. இவ்வாறு அவர்கள் நிச்சயிக்க உரிமைபெற வேண்டுமானால் எத்தகைய முசார்திரங்களினால் தங்களுடைய மூடிவுகளை நிறைவேற்ற முடியுமென்பதற்குப்போதிய கல்வியையும், அறிவையும் முதலில் அடைய வேண்டியது பெண்களுடைய இன்றியமையாதக் கடமையாகின்றது.

கர்ப்பத்தடையென்பது பெண்களுடைய பிரச்சினையேதான். எவ்வளவு சீக்கிரத்தில் அது தங்களுடையது தான் என்றும், தங்களுக்கு மட்டுந்தான் அதுசொந்தமான தென்றும் கருதி அதில் பெண்கள் ஈடுபடுகின்றார்களோ, அவ்வளவு சீக்கிரத்தில் ஜனசமூகங்களும் தாய்மார்களை கௌரவித்து, மரியாதை செய்யும். இன்னும் அதிசீக்கிரத்திலேயே உலகமும், தங்களுடைய குழந்தைகள் சுகமாகவும், சௌகரியமாகவும், வசிக்கக்கூடிய ஓர் தகுதியான இடமாக, மாறுதலடைந்து, நெருங்கி விளங்கும்.

—


# 100 ரூ. இனம்.

## பணம் சம்பாதியுங்கள்!

# செல்வக்களஞ்சியம்

பாராயிருந்தாலும் எந்த ஊரிலிருந்தாலும் பணம் சம்பாதிக்கலாம். புதிய வியாபாரங்கள், நூதன கைத்தொழில் முறைகள், சோப்பு, வாசனைப்புகையிலை, வாசனைப்பாக்கு முதலிய அநேக ரகசிய முறைகள் அடங்கிய அதிசயமான புஸ்தகம். இதை முழுமையும் வாசித்தவுடனே யாராயிருந்தாலும் ஒரு புதிய வியாபாரத்தைச் செய்யலாம், பணம்சம்பாதிக்கலாம் இன்னும் இதில் தேகசுகரகசியங்கள், தாதுபுஷ்டி மருந்துக்கள், பதார்த்தகுண உண்மைகள், ரோண்டாயுள்பற்றிய தேவரகசியங்கள் அடங்கியிருக்கின்றன. பெரிய, பெரிய வியாபாரங்கள் செய்யக்கூடிய ஊக்கமான வழிதுறைகளும் மற்ற புத்தகங்களில் பார்க்கமுடியாத வியாபார ரகசியங்களுமிருக்கின்றன, இதுமன்றி திருக்குறள் முழுமையும் தாலாட்டுப் பாட்டுகளாக இதில் அடங்கி இருக்கிறது. உங்களுக்கும் உங்கள் மக்களுக்கும் இதைஒரு நல்வழி காட்டும் அதிசயமான புத்தகம்: இதைப் போன்ற அதிசயமான ஒருநூல் தமிழ்மொழியில் எங்குமில்லை. அப்படி இருக்கிறதாக ஒப்புவித்தால் ரூபாய் 100 இனாம் கொடுக்கப்படும். சொற்பகாப்பிகள்தானிருக்கின்றன. ஒரு மாதத்திற்குள் விலையாகிவிடும். பிறகு புத்தகம் ஸ்டாக் இல்லை என்று குடியரசு பத்திரிகையில் வெளியிடப்படும். இது மறுபடியும், அச்சிடப்படமாட்டாது. ஆகையால் இன்றைக்கே எழுதுங்கள். இப்பொழுதே எழுதுங்கள். சந்தோஷப்படுவீர்கள்.

எட்டுப்பாகங்கள் கொண்டது. விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

விலாசம்:—

செல்வக்களஞ்சிய நிலையம்,

215, மேலமாசி வீதி, மதுரை.

## திருப்பூர் கால்நடை கண்காட்சி

1 கோயமுத்தூர் ஜில்லா விவசாய சங்கத்தின் பதினெட்டாவது திருப்பூர் கால்நடை கண்காகூடியும் விவசாயம், கைத்தொழில்பொருட்காகூடியும் திருப்பூர் (கோயமுத்தூர் ஜில்லா) சந்தைப் பேட்டையில் நாளது ஜூன்மீ 1, 2, 3-ந் தேதிகளில் நடைபெறும்.

2 கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்தும் மற்றும் சென்னை இராஜதானியிலுள்ள எல்லா ஜில்லாக்களிலிருந்தும் வரும் கால்நடைகளும் விவசாயக் கைத்தொழில் சாமான்களும், காட்சிக்கு அங்கீகரிக்கப்படும்.

3 காட்சிக்கு சாமான்களை அனுப்ப இஷ்டப்படுகிறவர்கள் மேமீ 30ந் தேதிக்குள்ளாக கண்காட்சி கமிட்டியின் லோகல் செக்ரிடெரியவர்களுக்கு வந்து சேரும்படி அனுப்பவேண்டியது.

4 இதர விபரங்களை அறிய விரும்புவோர் அடியில் கையொப்பமிட்டவருக்காவது திருப்பூர் கால்நடை காட்சியின் லோகல் செக்ரிடெரியவர்களுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

விலாசம்:-
வி. சி. வேள்ளிங்கிரிக் கவுண்டர்.
கௌரவ காரியதரிசி,
ஜில்லா விவசாய சங்கம்,
கோயமுத்தூர்.

## லால்குடி தாலூகா சுயமரியாதை மகாநாடு.

லால்குடி தாலூகா சுயமரியாதை மகாநாட்டை நடத்துவதற்காக ஒருபொதுக் கூட்டம் கூடி வரவேற்புக்கமிட்டி ஏற்பாடு செய்து திருச்சி உயர் திரு. டி. வி. சோமசுந்திரம் பி. ஏ. பி. எல். அவர்கள் வரவேற்புக் கமிட்டித் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டிருப்பதாகவும் மகாநாட்டுத் தலைமைக்கு உயர் திரு எஸ். ராமகாதன் எம்.ஏ.பி.எல் அவர்கள் பெயர் குறிப்பிடப் பட்டிருக்கின்றதென்றும் மகாநாட்டை 23.5-31ந்தேதியில் நகர்காமத்தில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுமகாநாடுசம்மந்தமானஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றதென்றும், மற்றும் இதே தாலூகாவில் இந்த மாதத்திலேயே மற்றொரு ஆதிதிராவிடர் மகாநாடு நடைபெறும் என்று ஒரு கனவான் தெரிவிக்கிறார்.


## மேயோ கூற்று,

"மேயோ கூற்று மெய்யா பொய்யா" என்னும் புத்தகம் முதற்பதிப்பு காப்பிகள் 2000மும் செலவாகி விட்டபடியால், அதன் இரண்டாம் பதிப்பு அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம். இதன் விலை அணா 3. வேண்டுவோர் 4 அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். மானேஜர்:
"குடி அரசு" பதிப்பகம், ஈரோடு.

அச்சாகிவிட்டது! அச்சாகிவிட்டது!!

# இராமாயணம்
# ஆராய்ச்சி

(இரண்டாம் பாகம் 560 பக்கம்)

அயோத்தியா காண்டம்.

விலை அணா 0—8—0 தான்.

# கைவல்யம்

அல்லது

# கலைக்கியானம்

(கைவல்ய சாமியார் கட்டுரைத் தொகுதி)

(கைவல்ய சாமியார் படத்துடனும், சரித்திர சுருக்கத்துடனும்.)

(முதல் பாகம்) இதன்விலை அணா 0—8—0

ஒவ்வொன்றுக்கும்

10 அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

விலாசம்:- 'குடி அரசு' பதிப்பக புத்தகசாலை, ஈரோடு.

உயர்திரு. M. R. ஜெயக்கர்
இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் தலைவர்.

"விசேஷ காருத்துக்களை யுடையதும், சமதர்ம நியாயமானதும் சுயமரியாதை இயக்கமே யாகும். மனித சமூகத்திற்கே கேடான ஜாதியை ஒழிக்க சுயமரியாதை இயக்கம் தலைப்பட்டிருக்கிறது. நாஸ்திகம், மதவிரோதம் என்கின்ற பூச்சாண்டிகளுக்கு ஆஞ்சாதீர்கள். மதத்தலைவர்களும், காங்கிரஸ் தலைவர்களும் செய்ய முடியாத காரியத்தை சுயமரியாதை இயக்கம் செய்து முடித்திருக்கிறது. சுயமரியாதை இயக்கத்தின் எதிரிகள் மூன்று மழுங்கிய வைதீகர்களும் அசாங்கமுமேயாகும். இற்கையின்உண்மைகளைச் சொல்லுவது எதுவோ அதுவேமதமாகும். மத ஆராய்ச்சியே நாஸ்திகமாகும்." M.R. ஜெயக்கர்

டாக்டர் முத்துலக்ஷ்மியம்மாள்
இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் சார்பாக நடந்த பெண்கள் மகாநாட்டின் தலைவி.

திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார்
இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் காரியதரிசி.

உயர்திரு. R. K. ஷண்முகம்
இரண்டாவது மகாநாட்டின் வரவேற்புத்தலைவர்.

"எந்தச்சட்டமாவது பழக்க வழக்கமான ஒரு வனுடைய சுயமரியாதைக்கு விரோதமுடையதாயிருந்தால் அதையழிக்கவேண்டுமென்பதுதான் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை. பெண்களுக்குக்குடும்பசொத்தில் பாத்தியமில்லை யென்பதும், விதவைகள் விவாகம்செய்யக்கூடாதென்பதும், பெண்களைக்குழந்தைப்பருவத்திலேயே விவாகம் செய்யவேண்டுமென்பதும், பெண்களைப் பொட்டுக்கட்டி தேவதாசிகளாக்குவதும்பெண்களின் சுயமரியாதைக்குமுற்றிலும் மாறுபட்டது. காங்கிரஸ் சுயராஜ்யம் மதத்தைக்காப்பது. மதத்தைக்காக்கும் சுயராஜ்யம் வேண்டாம். நாஸ்திகராவதே நல்லது."

R. K. ஷண்முகம்

உயர்திரு. S. இராமச்சந்திரன்
இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் சார்பாக நடந்த மதுவிலக்கு மகாநாட்டின் தலைவர்.

உயர்திரு A. K. பொன்னையா
இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் சார்பாக நடந்த சங்கீத மகாநாட்டின் தலைவர்.

உயர்திரு P. சிதம்பரம்
இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் சார்பாக நடந்த வாலிபர் மகாநாட்டின் தலைவர்.

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

தறிவு இல்லையென்றுலகரும், ஊமைப் பிராணிகளென்று லெரும் கூறி வந்தனர். ஆஸ்ஸ் அறிஞர் ஜெகதீச சந்திரபோல் அவர்கள் ஆராய்ச்சிக்குப் பின்னர் மரம், செடி, கொடி, முதலிய வைகளும் பேசும் திறமும் அறிவும் பெற்றிருக்கின்றது என்ற முடிவுக்கு வந்தபோதிலும் தற்காலச் சைவர்களோ மனிதர்களேத்தவிர மற்றையப் பிராணிகளெல்லாம் உயிர்கள் என்ற அறியாமை மிகுந்த தப் கொள்கையை எவ்விதத்திலும் மாற்றிக்கொள்கின்றார்களில்லை. தலைவர்களோ அதைப் பற்றிப்பேசுகின்றார்களில்லை. எடுத்துக்காட்டாக நம் நாடெங்கும் ஆடு, மாடு, கோழி முதலிய பிராணிகளே இம்சிக்காது தடுக்க ஆங்காங்கே சைவர்கள் என்போர் ஜீவகாருண்யப்பிரசாரம் செய்கின்றார்களே யொழிய இலங்கை, மலாய், பிஜி முதலிய நாடுகளில் இந்திய மக்கள் இலட்சக்கணக்காய் நாயினும் கேவலமாய் நடத்தப்பட்டும் உயிர்க்கொலை செய்யப்பட்டும் இந்திய நாட்டிலே பலஹீனர்களிலே பன்றி, நாய், கழுதை முதலியபிராணிகள் செல்லுமிடங்களில் கூட மனித உடல் தாங்கியுள்ள உயிர்ப்பிராணிகள் நடமாடவொட்டாது விரட்டியடிப்பதும், ஈ, எறும்பு, புரு, சிள், யானை, ஒட்டகம் முதலிய பிராணிகள் எல்லாம் செல்லும் ஆலயங்களில் மனிதரிற்சிலர் உட்புகுந்தால் விரட்டியடித்து அவர்களே இம்சிப்பதும், தாழ்ந்த ஜாதியார் என்றுசொல்லப்பட்டுள்ள மக்கள் உடற்பிணியால் தனியே காட்டில் வீழ்ந்து கிடந்து வருந்தி தண்ணீர் தாகத்தினாலோ, நோயின் கொடுமையினாலே ஐயா! ஐயா!! என்று சப்தத்தினும் அவனருகே சென்று அவனுக்கு உதவப்புரியாத மனப்பான்மையைப் பெற்றிருப்பதும் என்று நாம் நாளடைவில் கண்டும் கேட்டும் வருவதும் மக்களின் அறியாமையைப் போக்கி அறிவை வளர்க்கும் பாடசாலையில் மேல் சாதிக்காரர்கள் என்போர் தாழ்ந்த சாதிக்காரர்கள் வந்து கல்வி பயில வொட்டாது தடை செய்வதும் எத்தனை கொடிய தாகத்தினால் வந்தாலும் உயர்ந்த குலத்தார்கள் என்பவர்கள் தண்ணீர் எடுக்கும் கிணறுகளில் தாழ்ந்த ஜாதியார் என்போர் தொட்டு தண்ணீர் எடுக்க மறுப்பதும் அக்கிணற்றிலே மீன், பாம்பு, மூதலிய பிராணிகள் எப்பொழுதும்சுகமனமகிழ்ச்சியுடன் இசைவதும், தாழ்த்தப்பட்ட சாதி ஆண்மக்களிற்சிலரை உயர்ந்தோர் கண்டால் மேல் வேட்டி சட்டைகள் போடக்கூடாதென்று சட்டாயப்படுத்துவதும் அக்குலப் பெண்மக்கள் ரவிக்கைகள் போடக் கூடாதென்பதோடு மட்டுமல்லாது மேலே சேலையும் போடாது பாம்பு திறந்திருக்கும்படி செய்வதும் இச் செயல்கள் பலவற்றிற்கும் சைவர்களே காரணமாயிருப்பதோடு டல செயல்களே பிறசமயக்கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் செய்யும் பொழுதி

## மதிப்புரைகள்

### மூவடி முப்பது.

சங்கப் புலவர்களால் இயற்றப் பெற்ற அநேகம் அரிய பெரிய நூல்கள் அக்கினிக்கும், நீருக்கும் இரையாகி மக்களது உபயோகத்திற்கே வராதுபோனது கண்கூடு. சிலரது பெருமுயற்சியால் அவைகளில் சில தேடி எடுக்கப்பட்டன. கடைச் சங்க காலத்திருந்த இடைக்காடனார் என்னும் மாபெரும் புலவரால் இம் மூவடிமுப்பது என்னும் நூல் ஆக்கப்பட்டதாகும். மூன்று அடிகள் கொண்ட 30 பாட்டுகளால் தொகுக்கப்பட்டதாதலின் இதற்கு மூவடி மூப்பது என்னும் நாமம் சூட்டப்பட்டிருக்கிறது. இதன் பொருள் நடப்பும், தமிழ் வன்மையும் இதன் ஆசிரியரின் ஆற்றலே விளக்குகிறது. இது முறையே இன்பம், பொருள், அறம், ஒழிபு என நான்கு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய ஓர் சிறந்த நூலுக்கு உரை யெழுதி வெளியிட்ட மதுரஞ் சுந்திரபாண்டியனாரது முயற்சியும், ஆற்றலும் பாராட்டற் குரியதாகும். சுருக்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் முறையில் இதன் ஆசிரியர் குறிப்புரைகளுடன் விளக்கியிருக்கிறார். மதுரஞ் சுந்திரபாண்டியனாரது நன்முயற்சி தமிழர் அனைவராலும் பாராட்டற் குரியதாகும்.

இதன் விலை அணை 8.

கிடைக்குமிடம்:-

ம. சுந்திரபாண்டிய ஓதுவார்.
ஓதுவார் சந்து,
கீழச்சித்திர வீதி, மதுரை.
கே. வி. கே.

---

### உயிரொழுத்துத் தாலாட்டு.

மேற்குறிப்பிட்ட புத்தகம் திரு. அன்பு அவர்களால் எழுதப்பட்டு ரங்கூன் நவீன கதா புத்தகசாலையாரால் வெளியிடப்பட்டு நமது பார்வைக்கு ஒன்று வந்துளது. இதில் உயிரொழுத்து வரிசைக்கிரமத்தில் பெரியார்கள், தலைவர்கள் முதலாயினோர் நன்மொழிகளும் இரண்டிரண்டு அடிகளான தாலாட்டுப் பாட்டுகளாய் எளிய தமிழில் இயற்றப் பட்டிருக்கிறது.

இதன் விலை அணை 2.

கிடைக்குமிடம்:-

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, ரங்கூன்.

---

### இந்திய கூஷித்திரிய குல இலங்கை நாடார் மகாஜன சங்க சட்டதிட்டங்கள்.

மேற்கண்ட புஸ்தகம் ஒன்று வரப் பெற்றோம். இதில் மேற்கண்ட சங்கத்தின் அமைப்பு, நிர்வாகம், நிர்வாக உத்தியோகஸ்தர்கள், கணக்கு முதலிய விபரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. சங்க அபிமானிகளுக்கு மிகவும் பயன்தரக்கூடியது.

---

### ககர் கீத பஞ்சரி.

இஃது ஈப்போ திரு. கே. எஸ். பாண்டியன் அவர்களால் இயற்றப் பட்டதாகும். நல்ல தமிழில் நவீன மெட்டுகளில் கதரின் அவசியம், கைத்தொழில் மேன்மை, சுதேசி ஆதரவு முதலியவற்றைப்பற்றி சுமார் 10 பாட்டுகளுக்குமேல் தொகுக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை காசு 15.

கிடைக்குமிடம்:-

அ. ச. த. ராஜ்,
மாடர்ன் பிரிண்டிங் கம்பெனி.
ஈப்போ, F. M. S.

---

### "காந்தி"

தமிழ்நாடு பத்திரிகையிலிருந்த தென்காசி திரு. ச. சொக்கலிங்கம் அவர்களே ஆசிரியராகக்கொண்ட காந்தி என்ற வார இருமுறை வெளியீட்டின் இரண்டு மலர்கள் வரப்பெற்றோம். இதன் பெயருக்கொப்ப திரு. காந்தியை கண்ணே மூடிக்கொண்டு பின்பற்றுவதும், காங்கிரஸ் திட்டத்தை நிறைவேற்றுவதுமே இதன் நோக்கமாகும் என்று அதில் குறிப்புக் காட்டப்பட்டிருக்கிறது. சுமார் 4பக்கங்களோடு பல தேசிய, ராஜீய செய்திகளோடு வெளியாவதாகும்.

வருட சந்தா ரூ. 3—0—0

தனிப்பிரதி காலணா

கிடைக்குமிடம்:-

"காந்தி" ஆபீஸ்,
11 ஆண்டர்சன் தெரு, சென்னை.

---

### பேரின்பமாலை.

மேற்குறிப்பிட்ட இப்புத்தகம் கொளும்பு ஜனப். எ. பி. பீர்முகமது சாஹிப் அவர்களால் மௌலானு முஹம்மதலியின் பிரிவாற்றாமைக்காக அவர்து குணாதிசயம், ஜீவிய வரலாறு முதலியவற்றைப்பற்றி பாடல்களாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை சதம் 15.

விலாசம்:-

A. P. பீர்முகம்மது,
5(56 வின்செண்ட் தெரு.
கியூபஜார், கொழும்பு.

---

### ஞானதீபம்.

கொளும்பு ஜனப். எம். எச். மதார் சாஹிப் அவர்களால் இயற்றப்படும் ஞானதீபம் எனனும் மாத சஞ்சிகையொன்று வரப்பெற்றோம். இதில் இஸ்லாம் மார்க்கத்தைப பற்றிய பல கட்டுரைகள் காணப்படுவதோடு, மூஸ்லீம்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களும் காணப்படுகின்றன.

உள்நாடு வருட சந்தா ரூ. 2.

விலாசம்:-

ஞானதீபம் ஆபீஸ்.
41-கிரேன் பால்ரோடு
கொளும்பு.

---


"பல் ஜாக்கிரதை"

தங்கள் விலாசம் தெரிவித்தால் கல்நார் பற்பொடி இலவசமாக அனுப்புவோம்.

விலாசம்:—

A. N. காதர் அவுலியா,
வலங்கைமான்,
தஞ்சை ஜில்லா.

---

"GENUINE KHADDAR"

சுத்தமான கதர்.

அகில பாரத சர்க்கா சங்கத்தாரால் நற்சாட்சிப் பத்திரம் பெற்றது.

எங்களிடம் கதரில் எல்லாத் தினுசுகளும் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்களை உடனே கவனிக்கப்படும். வி.பி.வான் உடனே ஆர்டரை அனுப்பவும்.

விலாசம்:—

எம். சென்னியப்ப முதலியார்
கதர் ஸ்டோர், திருப்பூர், S.I.R.

---

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்

# குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ... 0—8—0
மனு நீதி மருமம் ... 0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... 0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ... 0—2—0
சோதிடப் புரட்டு. ... 0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ... 0—2—0
சுயமரியாதைப் பாடல் ... 0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ... 0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ... 0—4—0
ஞானசூரியன் ... 0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம் 0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ... 0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு) 0—3—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ... 0—2—0
குறள் ... 0—8—0
* இயற்கைமதம் ... 0—8—0
* சிதம்பர ரகசியம் ... 0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை. 0—4—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பககங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணை ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணை ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி, ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

## 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 5—0—0

ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 5—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு


# புதுவை முரசு

ஆசிரியர்:
S. குருசாமி
B.A. அவர்கள்

20 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமை தோறும வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப்பத்திரிகை. வருடசந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 4.
மாதிரிப்பிரதி இலவம்!

மானேஜர்,
"புதுவை முரசு"
புதுச்சேரி (F இந்தியா)

அரசாங்க இஞ்சினியர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற
"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".
50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.
மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்காளிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாட்சாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.
தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை

நமீஷக்கணக்கில் தணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
# சுவாச காச நிவாரணி.
சுவாசகாசக்கான போகள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் காயிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியபடின் 1 1-4-0. தபால் கூலி அணா. 4.
புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I
சோல் ஏஜண்டுகள்:—
தாதா & Co., 52 கைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.
K. S. மேதா & Co., 234, சைனபஜார் ரோட் மதராஸ்.
வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

மதனலீலா படங்கள்
64 வகை சித்தின்ப உருவ ஓரினல் இனேல் போட்டோ படங்கள் சதிபதிகளும், தனிமாதர்களும் கூடியது.
ஆல்பம் உள்பட விலை ரூ. 5-0-0.
சாம்பல் டஜன் ரூ. 1-8-0.
வெளிநாட்டினர் ஆர்டருடன் ரூ. 2 முன்பணம் அனுப்பவும்.
கே. ஜீ. ஸ்டோர்
8.வது பிட், வேப்பரி, சென்னை.

M. S. சித்தர்பார்மசி
எல்லா நோய்களுக்கும் மருந்துகளிருக்கின்றன. கேட்லாக் இலவம்.
விஷமை. விஷரோய் எதுவானாலும் சரி 3 நாளில் தீரும்.
Dr. P. M. சங்கரலிங்கம் பிள்ளை,
கோவில்பட்டி S. I. R.

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

### 'குடி அரசு'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடுவருடசந்தா 4—0—0
ஆசிரியர் ஈ. வே. ராமசாமி
விலாசம்:—
மானேஜர், "குடி அரசு" ஈரோடு.

### 'குமரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

### 'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
இதன்வருடசந்தா ரூ. 4—0—0
அல்லது $. 2,25
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

### "நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0
ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

### 'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: அ. பொன்னம்பலம்
மானேஜர், "சண்டமாருதம்"
கோட்டையூர்,
ராமனாதபுரம் ஜில்லா

### 'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)


அரசாங்க இரசாயன பரிசோதகர்களாலும், ஆங்கில வைத்திய நிபுணர்களாலும், ஐக்கோர்ட்டு ஜட்ஜுகளாலும், அரசர்களாலும், அநுபவித்துக்கொண்டாடப்படுகிறதும், வைத்திய மகாநாடுகளில் நற்சாட்சி, பரிசு முதலியன பெற்றவைகளுமான

வைத்திய பாஸ்கர **பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின்**

**புகழ்பெற்ற சித்த மருந்துகள்.**

## மகாசந்தனுதித்தைலம்

வெட்டைச்சூடு, மேகச்சூடு, மூலச்சூடு, மூளைச்சோர்வு, நரம்பு பலவீனம், தலைவழுக்கை, இளமையில் நரைத்தல், மயிர் உதிர்தல், கண்ணோய், காதுநோய், மூக்கைப்பற்றிய பீநச நோய் முதலான வற்றை நீக்குவதில் இது நிகரற்றது. மூளையை அதிகமாக உபயோகிப்பவர்களுக்கு ஞாபக சக்தியை அதிகப்படுத்திக்குளிர்ச்சி தருவதில் இன்றியமையாதது. தலைமுழுகுவதற்கும், தலைமயிரை வாரிக்கொள்வதற்கும் மனோகரமானது. பொதுவாக கழுத்திற்கு மேற்பட்ட எல்லாப்பிணிகளையும் கண்டிக்கவல்லது. ஒரு முறை பரீட்சித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

6 அவுன்சு ரூ. 1— 0—0. 24 அவுன்சு 3—12—0.
12 ,, ரூ. 1—14—0. மாதிரி புட்டி 0—3—0.

## மேக நோய் மருந்து

இது கருப்பத்தில் உண்டான நோய்கள், நடுவில் தனது செய்கைத்தவறால் வந்த மேக நோய்களாகிய கிரந்திகன், கல் அடைப்பு, சதை யடைப்பு; தொண்டையிற் சதை வளர்ச்சி, கருமேகம் செம்மேகம், வெண்மேகம், வெடிமேகம், தோல் தடித்து தினவெடுத்தல் முதலிய மேக நோய்களைப் போக்கும் அருமருந்தாகும். இதைஉபயோகிக்கும் விதத்தை நமது கேட்லாக்கில் காண்க.

40 நாள் மருந்து ரூ. 3—8—0.
20 ,, ரூ. 2—0—0.

## அமுத சுரபி

[மகாகாய கற்பம்]

இது ஆண் பெண் இருபாலர்க்கும் ஏற்பட்டுள்ள இருதய பலவீனம், மூளை பலவீனம், சோம்பல், வெட்டைச்சூடு, மூலச்சூடு, உடம்பு மெலிவு, கை கால் அசதி, அகாலமூப்பு, கண் மங்கல், மலட்டு நோய் முதலியவைகளை நீக்கி உடம்பின் உள்ளுறுப்பு, வெளியுறுப்புகளை வலியடையச் செய்யும், கஞ்சா அபின் முதலிய மயக்கப் பொருள்களைச் சேர்த்துச்செய்யும் லேகியங்களைப் போல் இது ஒன்றும் கெடுதிகளைச்செய்யாது.

1 பவுண்டு விலை ரூ. 3—8—0.
1/2 ,, ரூ, 1—14—0.

## ஜீரணி லேகியம்

இக்காலத்தில் வரும் நோய்களுக்கு அடிப்படையாகவுள்ளது மலச்சிக்கலே யாகும். இதுவே பிணிகளுக்கெல்லாம் மூலகாரணமாகயிருக்கிறது. எனவே, அவ்வித மலச்சிக்கலை யொழித்து நோய் வரவொட்டாது செய்வதற்கு நமது ஜீரணி லேகியம் முதன்மையானதாகும். மற்றும் பசியின்மை, பித்தவாயு, புளியேப்பம், சூலை யெரிச்சல், வயிற்று நோய், குன்மம், மார்பு நோய், மயக்கம், வாந்தி, நாவிற் சுவையின்மை முதலிய நோய்களை நீக்கும். வாய்க்கும் ருசமானது.

பெரிய டப்பி ரூ. 2—0—0.
சிறிய டப்பி ரூ. 1—2—0.

### முக்கிய அறிவிப்பு.

எமது முன்னோர்கள் சாஸ்திர விதி தவறாது, பரம்பரையாய்க்கையாண்டுவந்த நமது மகாசந்தனுதித் தைலம் ஒன்றே சுமார் 24 வருஷங்களுக்குமுன் வியாபார முறையில் முதன் முதல் வெளிவந்தது. நமது தைலத்தின் பெருமை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பரவி மிகுதியாய் வியாபாரம் நடைபெற்று வருவதைக்கண்டு பலர் தற்காலம் மகா சந்தனுதித்தைலம் என்ற பெயரால் விளம்பரம் மிகுதியாகச் செய்கின்றார்கள். இதனைக்கண்ணுறும் அன்பர்கள் நமது பெயரையும் "பாரதமாதா" (டிரேட் மார்க்) வியாபாரக்குறியையும் கவனித்து வாங்கும்படியாக எச்சரிக்கை செய்கின்றோம்.

நோயைப்பற்றி விரிவாக ஒரு கடிதம் எழுதினால் அதற்குச் செய்யவேண்டிய பக்குவங்களுடனே தெரிவிக்கப்படும். எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

இனம் விலாசம் தெரிவிப்போர்க்குச் "சுகவழி" என்னுஞ் சிறு புத்தகமும், கேட்லாக்கும் இலவசமாக அனுப்பப்படும்.

**தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத்தெரு, சென்னை.**


உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டதேதுமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.